திருவள்ளுவநாயனார் திருவடி துணை.

திருக்குறள் அதிகார சொரூப சூசகமும்,
குறளுதாரணமுங் - கருத்துரையுஞ்சேர்ந்த
ஆத்திசூடி - கொன்றைவேந்தன்
மூலமும்-உரையும்.

இவை

திருமயிலையி லர்ச்சாவதாரமா யெழுந்தருளிய

திருவள்ளுவ நாயனார்

சந்நிதி கயிங்கரிய வுத்தேச சபையாராகிய

மெய்யூர்-அப்பாவுமுதலியார் குமாரர்

குருசாமிமுதலியார் முதலானவர்கள் கருதியபடி

யச்சபைத்தலைவர்

சிந்தாத்திரிப்பேட்டையிலிருக்கும்,

அனுககாவூர் - தாண்டவராயமுதலியார்

குமாரர்

கந்தசாமிமுதலியாராலும்,

ஷை குறளதிகார சொரூப சூசகமியற்றிய

திருவல்லிக்கேணி

வரதப்பமுதலியாராலும்

புரசை-அஷ்டாவதாந

சபாபதிமுதலியார்

முன்னிலையிற் பரிசோதித்து,

சிந்தாதிரிப்பேட்டையிலிருக்கும்

ச—முனிசாமி முதலியாரது

மெய்ஞ்ஞான சூரியோதய விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன

சென்னை,

உருத்திரோற்காரி௵ கார்த்திகைமீ.

REGISTERED 1863.

இப்புத்தகம் வேண்டியவர்கள் சிந்தாத்திரிப்பேட்டையில், குருவப்பசெட்டியார் வீதியில் (சஉ) வது-கதவிலக்கமுள்ள எனது கிரகத்தில் இதன்விலை ரூபா ௱ க கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. கந்தசாமிமுதலியார்.

திருவள்ளுவநாயனார் துணை.

முருகன் சரணம்.

சிறப்புப்பாயிரம்.

நேரிசை ஆசிரியப்பா.

நிலைபெறுத்தமைநிய றெட்டெருச்சராசரம்
உலைவரும்பயோததி-யுட்டுயில்சிலீமுகம்
ஐஞ்ஞூற்றிரட்டி-யணித்தலைச்சிஞ்சினி
பைஞ்ஞீனிறக்கடல-வத்திரநெடுந்தேர்
தண்மையும்வெம்மையுந்-தாவருந்திகிரி
யெண்ணருமேட்டி-லெழுதாப்புரவி
மன்னுயிரனைத்தும்-வகுக்கும்பாகன்
இன்னநம்பர னிரண்டுதலையிட்ட
வோரெயிலடுங்கா-ளுடனுறவிருந்தும்
போ ரமைவிலவாய்ப்-பொலிந்தனபோல
மற்றையநீதிநூல்-வாளாவிருப்பத்
தெற்றெனயாவருந்-தெள்ளிதினுணரவுங்
குளமெனவினிமைமுற்-கூர்த்துளநூல்களுங்
களமிருகாஞ்சிரங்-கனியெனவெறுப்பவும்
எப்பெருஞ்சமயமு-மிவற்றின்கருத்தெலாம்
ஒப்பாமெமகெனு-வுரைத்தனவியப்பவும்
அறமுதற்பொருளெலா மளப்பில்தத்துவத்
திறன்முழுதுந்தனித்-தெரிவருங்குடிலையி
னுள்ளடங்கப்பெறூஉ-முளவெனவமைதரு
மாண்பினுற்புலவா வழுத்தபுசொற்சுவை
எண்பயில்பொருட்சுவை-யிவற்றினுமுள்ள
தரிதரிதெனுநனி-யகங்களிசிறப்பவும்
பெரிதெனச்சான்றோர்-பெட்புறுகல்வியென்
றளவறுமாளிகைக்-கடிப்படைபோன்மென
விளைஞருமுதியரு-மெளிதினிற்கற்பவு

நேரிசை ஆசிரியப்பா.

மூவெழுத்துருவா முன்னவன்பூசனைக் *
காவலினன்புகூர்-ஔவையார்பணித்தருள் *
ஆத்திசூடி-யரும்பொருணிறைவுறக் *
கோத்துளவுலகியற்-கொன்றைவேந்தன் *
இருவகைநூற்குமுன் னெழில்வளர்தணிகைச் *
சரவணப்பெருமா ளெனுந்தமிழறிஞன் *
செய்தவுரைகருத்-திருத்தகவிணங்க *
மெய்தருமூவருண்-மெய்தருமொருவர் *
நம்புமின்னருளால்-நாயனாராய்நிகர் *
தம்பெயாநிறீஇப்பைந்-தளிர்துதைதபல்கிளை *
சேணிடைநிழற்று-மாணுயராலமர் *
நுண்ணியவிதையென-நோன்மைசான்மன்பதை *
எண்ணியயாவும இசைவுறக்குறள்வெண் *
பாவிற்செயித்துப்-பகர்பெருநூலுண் *
டேவிக்கிடந்தன-வியன்பொருளாண்டைக் *
கேற்பனமேற்கோ-ளியையச்சேர்த்திப் *
பாற்பட நன்கு-பகுத்தவற்றால்வரும *
ஊதியங்கொடுமென்-றுயர்விசேடத்தாய்ப் *
போதமெய்ஞ்ஞான-போனகர்கருணையின் *
அங்கம்பூம்பாவை-யாயவதரிப்பத் *
திங்கள்வேணியற்-சிந்தித்துமட்டிட்ட *
புன்னையங்கான-லென்னுநற்பதிக *
மணங்கமழ்பதியாய்-வாயிலார்நாயனார் *
இணங்குறுமனக்கோ-யிலிற்பரசிவத்தை *
யிருத்தியாநந்த-மெனுநீராட்டி *
யருத்தியிற்போற்றி-வாஞ்சுடரேற்றி *
யன்பமுதருத்தி-யருச்சித்தீறிலா *
வின்புறுமிடனதா-யிமவலாச்செல்வி *
மயிலாய்ப்புன்னை-மரனிழலமர்ந்த *
புயல்போன்மிடற்றுப்-புநிதனையிறைஞ்சும் *
வளத்தகுதாயுள்ள-மயிலாபுரியிற் *
கிளப்பருமில்லறக்-கேண்மையின்வழாஅப் *
பாக்கியநிட்டா பாராயிருந்து *
போக்குவரவிலாப்-பூரணவொளியாய் *
மாறாருட்புகழ்த்திரு வள்ளுவநாயனா *

நேரிசை ஆசிரியப்பா.

நீற்றுறைகோபுர விமானக்கோயிற் *
றிருப்பணிநிறைவுறச்-செய்கெனத்தொண்டர் *
விருப்புறுபத்திமை-வியனெறிலகவிடா *
ஆயனு திருமயி-லைத்திருவள்ளுவ *
நாயனார்சந்நிதி நற்கயிங்கரிய *
உத்தேசசபையா-ருரைத்தனராக *
வெத்தேயமும்பரிந்-தேத்துநர்திருக்குற *
ளதனிற்பொதிந்துள-வதிகாரங்களை *
யிதமுறற்றிடவாய்த் தொடுத்துமுறையே *
யொழுங்வகையஃவுரை-யுடனொருங்குணரச் *
சொலுமதிகார-சொரூபசூசகமென *
நலனுயர்பெயர்புனைஇ நல்கியவோன் *
குலமெனும்பொன்னிடைக்-குயிற்றியமாடணி *
நீணிலையல்லிக-கேணிவாழ்நறருண *
நிறைவரதப்ப-நேயனுதவியால் *
அறைதருமச்சவைக்-கதிபனெஞ்ஞான்றும் *
அன்பரைப்போற்ற-லவர்பதம்பணித *
லன்பர்தம்பூசனை யடைவுறவுஞற்றல் *
வித்தகமெய்ம்மை-வேதாகமநெறி *
நித்தமுமோம்பல் நெய்மபொருளெனக்கொளுங்
கங்கைமரபெனக கழறும்வலம்புரிச் *
சங்கமீன்ற தண்மணியனையான் *
அவிழ்தருமதுமல ரளிமுரல்பொழில்புடை *
தவழ்அனுககாவூர்த்-தாணடவராயவேள் *
தந்தமாதவந்-தனில்வருதநயன் *
கந்தசாமிமால்-கனிவுறவியற்றி *
மணிநீ,,ப்புவியில்-வழங்க *
அணிநீடச்சி-லமைத்தனித்தனனே. *

இஃது
வித்வான்-காஞ்சீபுரம்
சபாபதிமுதலியாரவர்கள் - மாணாக்கர்
புரசை-அஷ்டாவதாந
சபாபதிமுதலியாரியற்றியது.

நாயனார் துணை

சிறப்புப்பாயிரம்.

[இதன்பொருள்]

நிலைபெறுகின்ற நீண்ட பொன்னுருவாகிய வில்லும், கேடில்லாத பாற்கடலிடத்தே கண்வளர்கின்ற அம்பும், ஆயிரம் அழகுள்ள தலைகளையுடைய நாணியும், நீலநிறமுள்ள கடலாகிய ஆடைசூழ்ந்த நெடியதேரும், குளிர்ச்சியையும், வெப்பத்தையும், தரும்படி யுதிக்கின்ற உருளைகளும், அளவற்ற எட்டிலெழுதப்படாத குதிரைகளும், நிலையான எல்லாவுயிர்களையும் படைக்கா நின்ற தேர்ப்பாகனும், இவைபோல்வன பிறவும், பரமசிவம் முப்புரங்களை யெரிக்கும்போது ஒருசேரவிருந்தும், போரில் அவை நிறைவில்லனவாய் விளங்கினபோல பிற நீதிநூல்கள் வறிதேயிரா நிற்ப எவ்வகைப் பட்டோரும் ஒப்புமை கருதித் தெளிவாகவுணரும் படியாகவும், முன் வெல்லத்தைப் போல மதுரமிகுந்திருந்த நூல்களும் குற்றமிக்க எட்டிப்பழத்தைப்போல வெறுக்கும்படியாகவும் எவ்வகைப்பட்ட பெரியசமயத்தோரும் இந்நூல்களின் கருத்தெல்லாம் எமக்கொப்பாமென்று சொல்லி அதிசயிக்கும்படியாகவும், அளவில்லாத தத்துவப்பகுதிகள் முழுதும் ஒப்பற்றதாகிய அறிதற்கரிய குடிலையுள்ளடங்கப்பெற்ற உளவு போல அறமுதலிய எல்லாப் பொருள்களுஞ் சிறியவாக்கியங்களில் அமைவுற்ற மாட்சிமையால் கற்றுவல்லவர்கள் வழுவில்லாத சொற்சுவையும் மேன்மை நீங்காத பொருட்சுவையும் இதுகளினும் உள்ளதொருநூல் கிடையாது கிடையாதென்று மிகவுந் தம்முள்ளத்துள் களிப்படையும் படியாகவும், அறிவுடையோர் பெரிய பொருளென்று விரும்புகின்ற கல்வி யென்னும் அளவற்ற மாளிகைக்கு இவை அடிப்படையாமென்று சிறியோரும் பெரியோரும் வருத்தமின்றிக் கற்கும்படியாகவும் பிரணவ வடிவாகிய மூத்த பிள்ளையாரைப் பூசிக்குந் திருத்தொண்டிலிடத்து ஆவலோடும

அய்புநிறைகின்ற ஔவையார்சொல்லியருளிய ஆத்திசூடியும்
அருமையாகிய பொருள்கணிறைய உயிர்முதலிய வருக்கங்க
ளிற் கோவைசெய்துள்ள உலகவொழுக்கத்தைச் சொல்லுகின்
ற கொன்றைவேந்தனும், ஆகிய இரண்டு நூல்களுக்கும் முன்
னர் அழகுமிகுகின்ற திருத்தணிகையிலிருக்கும் சரவணப்பெ
ருமாள் என்னும் இயற பெயரினையுடைய தமிழ் வல்லோன்
செய்திருந்த உரைக்குச் செம்மையாக இணங்குமபடி உண்
மைப்பொருளைத்தருகின்ற மூத்தேவருள் படைப்புத்தொழி
ல் செய்யும் கடவுள் யாவரும் தம்புதற்குக் காரணமாகிய தம
து நல்லருளினால் திருவள்ளுவரா யவதரித்துத் தனக்குத்தா
னே நிகர்த்த திருவள்ளுவனென்னுந் தமதுபெயரைத் தரித்து
ப் பசுமையாகிய தளிர்கள்நிறைந்த பலகிளைகளால் நெடுந்தூ
ரத்தில் நிழலைச்செய்கின்ற பெரிதாகிய ஆலமரம் அடங்கியிரு
க்கின்ற மிகச்சிறிய வித்தென்னும்படி வலிமைமிக்க உலகத்தா
ர் எண்ணிய கருத்து முற்றும் விளங்குமாறு குறள் வெண்பா
வி லடக்கிச்சொல்லிய பெரியநூலினிடத்தே பொருந்தியுள்ள
னவாகிய இன்றியமையாத பொருள்களுள் அவ்வவ் விடங்கட்
கு ஏற்பனவற்றை உதாரணங்களாக[illegible]யச் சேர்த்து நன்கு
க அச்சுப்பதித்து அதுகளா லுண்டாகும் இலாபத்தைக் கொ
ண்டு மூர்த்தி தலம் தீர்த்தமென்னும் மூவகைச் சிறப்புடைய
தாகியும் சிவஞானப் பாலுண்ட சம்பந்தசுவாமிகள் தமதரு
ளால் என்புபூம்பாவையா யுதிக்கும்படி பரமசிவத்தைத் தியா
னித்து மட்டிட்ட புன்னையங் கானலென்று பாடியருளியதிரு
ப்பதிகமாகிய திவ்ய மணம் பரிமளிக்கா நின்ற தாகியும், வாயி
லார் நாயனார் பரமசிவத்தை ஒருமைப்பட்ட மனக்கோயிலு
ளிருத்தி ஆநந்த நீராலபிஷேகித்து அறிவாகிய தீபமேற்றி அன்
பாகிய அமுதுநிவேதித்துப் பூசைசெய்து முடிவிலாத முத்தி
யடைந்ததாகியும் பார்வதியார் மயிலாகி புன்னைமர நீழலில்
மேகம்போலுங் காளகண்டத்தையுடைய கபாலீசரைப் பூசை
செய்த தலமாகியு மிருக்கின்ற மயிலாபுரியில் சொல்லுதற் கரி
ய இல்லறநெறியினின்றும் வழாத செல்வமுள்ள சிவநிஷ்டாபர
ராயிருந்து போக்குவரவற்ற பூரணப்பிரகாசமாகி நீக்கப்படா
த பாட்டும் உரையுமாகிய கீர்த்தியை யுள்ள திருவள்ளுவ நாய
னார் வீற்றிருந்தருளுகின்ற கோபுர விமானங்கள் ஓங்கி யிருக்
கும் கோயில் திருப்பணிகளை நிறைவுபெறச் செய்வாரென்று

சிறப்புப்பாயிரம்.

அடியார்கள் விரும்புகின்ற பெரிய பத்திமார்க்கத்தை விட்டு நீங்காதவர்களாகிய எல்லாவுயிர்களுக்கும், தாய் போலுற கயாலீசர் - கோயில்கொண்டருளும் திருமயிலைத் திருவள்ளுவ நாயனார் சந்நிதி கயிங்கரிய உத்தேச சபையா ரென்னும பெயர் கொண்ட சிவதரும பரிபாலகர் சொல்ல எந்தத்தேயத்திலுள்ளோரும் பரிவுடனெடுத்துப் புகழ்கின்ற திருக்குறளி லுள்ள அதிகாரங்களை நன்குயாராய்ந்து தொகுத்து வரிசையாயியலும்படி அதனதனுரையுடனே ஒருமிக்க உணருமாறு அதிகார சொரூப சூசகமென்று நன்மைபொருந்திய பெயரிடுச்செய்துதந்த வேளாண்குலமென்னும்பொன்னினிடத்தே பதித்த பெருமையுள்ள மணியை யொத்த நெடுமை யாகிய நிலைமை வாய்ந்த திருவல்லிக் கேணியில் வாழ்கின்ற நற்குணங்களால் நிறைந்திருக்கின்ற வரதப்பன் என்னும் பெயருள்ளநேயனது உதவியால், முன்னேசொல்லப்பட்ட நாயனார் சந்நிதிகயிங்கரியோத்தேச சபைக்கு முதல்வனும் எக்காலத்தும் அடியார்களைப்போற்றுதலும் அவரது பாதங்களைப்பணிதலும் அவரது பூசையை முறையாகச் செய்தலும் எல்லா வற்றிற்குங் காரணமாகிய மெய்ப்பொருளைக் கூறுகின்ற அழிவில்லாத வேதாகம நெறியைக் கடைப்பிடித்தலுமாகிய இவ்வொழுக்கங்களேதனக்குப் பெரும்பயனெனக் கொண்டிருப்பவனும், கங்கை மரபென்று சொல்லும் வலம்புரிச்சங்கம் பெற்ற குளிர்ச்சியுள்ள முத்தினைநிகர்த்தவனும் விரிகின்ற தேனையுடைய மலர்களினிடத்தே வண்டுகள் முரலுகின்ற சோலைகள்பக்கங்களிற் சூழ்ந்திருக்கின்ற அனுக்காவூரி லிருக்கும் தாண்டவ ராய னென்னும் வேளாணவன் செய்த பெருமைபொருந்திய தவத்தினாலுதித்த புத்திரனுமாகிய கந்தசாமி யென்னும் மாலானவன் இனிமை யுண்டாகச்செய்து கருமையாகிய கடல்சூழ்ந்த பூமியில் வழங்கும்படி அழகு பெருகு கின்ற அச்சிற பதித்துத் தந்தனனென்க

சிறப்புப்பாயிரம் - முற்றிற்று.

சிவமயம்.

திருவள்ளுவநாயனார்

இரட்டைமணிமாலை.

காப்பு

உலகுபுகழ்மயிலையுற்றுமனையேனையுன் .. . *
குலவுதிமிரவினைகொடபிற்-பலவா ... ...*
வருகோட்டியானைவறவதித்துணாகரு .. *
மொருகோட்டியானையுவத்து . ... . *

நால்வர்துதி.

மாவாரமுந்திபசங்கோலிபிக்கடல்வையகத்திற் *
மேகாவாரமுந்தியணிவேணியாடி-கூடியுய்யத் . ... .. *
தேவாரமுந்திருவாசகமுந்தத்தசெல்வர்பத ... *
நாவாரமுந்தித்துதிப்போடபிறவிநவையறவே . *

நூல்

அன்பராய்வாழ்வோமகமேபமராமே .. .. . *
தம்பராய்வாழ்த்துஞ்சீரத்தன்மயிலை-யின்பார் .. *
திருவள்ளுவனொன்னநிணபார்வணங்கு ... *
மொ வெள்ளலாபாதமுள்ளு ... ... (க)

உள்ளதிருக்கும் படித்திருவள்ளுவ ரொண்பதநதனைத், தெள்ளதிருக்கும பவமுமகலுங் குறியறியாக், கள்ளத்திருக் குமுணரானருளும் வருங்கடனீர்த, துள்ளத்திருகரு வளைய லாதொன்மயிலைகணினறே . .. ... (உ)

நினைநனைநில்லாதநிலையிவ்விலையெனன .. ... *
மொன்றமனமேனயுணர்ந்தின்னே-நன்றி *
வருமயிலைநண்ணுதிருவள்ளுவனைப்போற்றி . *
லருளமயிலைநம்பவநீங்கல். ... ... (ங)

கற்றுமாரக்கவெனும் மொழியின்றிக் கசடறத்தம், பொற்றுமரைகழல் போற்றத்திருவள் ளுவர்க்கடிமை, பெற் றுமனாகட் புனல்போற்பெரும்புவிப்பாசத்தினிற், பற்றும னக்கட் செவியுடையான்மயிலைப்பதிக்கே ... ... (ச)

பதியாதஞ்ஞானம்பதியுமெய்ஞ்ஞான . ... *
முதியாரெந்தாளுமுறலாங்-கதிசேகணமியீர் .. *
பற்றுவணங்கடிநதுபணனுதிருவள்ளுவர்தாள் .. *
பெற்றுவணங்கப்பெறின் (௫)

பெருந்தாரணிகொண்டாறபாடரவானம்பிராட்டிவரன், பொருந்தாரணியுங் கபாலிவளர்மயி லாபுரியி, லிருந்தாரணி சொல திருவள்ளுவர்புக ழேத்துநாதாம், வருந்தாரணியதவர்க்கழியாவின்பவாழ்க்கையுமே , - ... .. (௬)

வாழ்வைதிலையென்னமதிபாவுழலவேமுன் *
ஊழ்வைபடற்போருதறியதே யேழ்வையற் *
தேற்றுமுயர்போதத்திருவள்ளுவரொன்று .. *
சாற்றுமுயர்போதகமே . .. .. (௭)

போதந்தராவெனப்பற்றும்வினைத்தொடர்ப்பூட்டறுத்தில், கோதந்தராகமுதலானசேடனைபோட்டுயெயாற்பற, மாதந்தராறுமுகற்பயந்தார்மயிலைப்பதியிற், பாதந்தராவெனைக்காகருந்திருவள்ளுவர்பணியே . . .. (௮)

பணியப்பணியப்பரமன்மயிலை ... . *
மணிமெய்த்திருவள்ளுவனை-யணிமா . *
நரவாவினைநீத்தமமேதொழவே .. ..*
விரவாவினைசெயிலை .. . .. (௯)

கையார்க்குதவத்தகையார்திருவள்ளுவர்கரிசு, வையார் வருநல்லவையாரனருணமனனுநலவித, வையாரடியன்சிந்தை யாமயிலைத்தலத்தினரி, மையார்புகழ்மகி மையாராளநவழுத்துவரோ . ... (௰)

வழுக்குடலோம்பிமகிழாவிராமல் .. .. .. *
விழுத்தகைமையார்மயிலைமேவிப்-பழிச்சுநருக *
ஈண்டவருநன்மைபருளெந்தைத்திருவள்ளுவனை *
வேண்டவருநன்மைநெஞ்சமே . . . . (௰௧)

நெஞ்சிற்கருதுவனபிறராலறியுநிலையென்-றஞ்சொற்பனுவலுவன்றனுபின்னிடவாங்குலகோர்-தஞ்சிந்தனைதுள்ளுவ வெல்லாமளந்தறை சால்புகொண்ட, செஞ்சொற்றிருவள்ளுவர்மேன்மைகொப்பரிதேயளதே .. .. (௰௨)

தேங்கமழும்பூங்கமலச்செல்வனென்பதே துணிவா
மாங்கவனுமூவுலகுந்தமன்றுவிதித்-தாங்கெவர்க்கு *
நன்றுவருந்துமுப்பானவின்றதிருவள்ளுவர்தா . *
மென்றுவந்தவோருருவமீங்கு (௰௩)

ஈண்டொன்றெனவுலகோர்கருத்தவிருதலைசெய்தவே,
மூன்றொன்ற பகுதியின் முன்செய்தருளித் தம்முள்ளொருவர்,
மேயான்றார்ந்திருந்ததம வள்ளண்மைநோக்கிப்புவிசெய்வதா,
வான்றொப்புகழ்க்கதிருவள்ளுவர்க்கென்னைகம்மாறுளதே (௰௪)

மாறறிகொற்றந்துமாலயானையன்றுரு .. ,, *
மீறடையாகவெனமகிழே றுறுடைப்பூ... ...*
மெய்ப்பூகமார்மயிலைமேவுதிருவள்ளுவனை . ...*
பொய்ப்பூருகநெஞ்சேயெண்ணு ... .. (௰௫)

எண்ணரும பாவப்பிறவியிலாழ்ந்தங்கிளைத்துளதிந்,
தபடிநீரிறைஞ்சுமின்பூம்பொழிலிற், றண்ணரு
மயிலைத்திருவள்ளுவர்தத்துவமெய, வண்ணரும்பால்வந்
மெய்ஞ்ஞானநவகுகர்வாய்மையிதே . .. (௰௬)

யிலாமானனையாள்வள்ளலார்தந்தையொடு ...*
தாயிலார்ப்போற்றியுறைதணமயிலை-மேயதிரு...*
வள்ளுவநாயனாவணபுகழைப்பேசநா .. . *
முள்ளுவநாளு மறும ... . (௰௭)

நாவலங்கம்பானமையுறப்பாடியின்பனைநாதனருட், பா
வலம்பாவையதாஞானசமபந்தாசொலபதிசெய்மேவலங்கம்பா
ர்கருமயிலைத்திருவள்ளுவாவியனமுணை, மாவங்கமபாவப்பிறவிக
கடற்கிநதமாநிலத்தே .. . . (௰௮)

தேனந்துமபூம்பொழிலுஞ்செல்வியனையார்களனும்
வானந்திகழுமயிலையாய-யானப்புந் .. *
தாயனொன றனையாசசார்ந்ததிருவள்ளுவரா . *
நாயனொன்றுமுறைநாடு . (௰௯)

நாடும்பாலை வெலவெற்றியுங்கல்வியுநற்பொருளுநீ,
கூடுமெபாவு மெய்ஞ்ஞான முடின்னதுவலபத்தி-னீடுமெபாவை
தொழு மயிலைதலம்நயாமன்று, னாடுமெபரமனையோர்திருவள்
ளுவரன்பினாகவே ... ... (௨௰)

திருச்சிற்றம்பலம்.

இஃது புரசை - வேங்கடாசலமுதலியார - சகோதரராகிய
அட்டாவதானம் - சபாபதிமுதலியாரவாகளியற்றியது

உ

சிவமயம்

நாயனார்சொருபஸ்துதி.

ஆசிரியவிருத்தம்

திருமுடியிசையார் மயிர்முடியழகுந் . - *
தீர்க்கபுண்டரநுதலழகும் . ... . - *
திரண்மணிபுயந்தை வருஞ்செவியழகுந் .. . *
திகழ்நெடுரதாடியினழகும . *
அருமுடிசெபமாலிகை யின்முகத்திலாங்கே . . *
ரபபநேர்வலகலையினழகும . - . - *
அமிழ்துறந்தமிழ்மா மறைமுறைகரத -- . *
மணமதருமிடகையினழகும -. *
கருமுடியோகப்பட்டையினழகுங் . . - . . *
கடிகொள்கோவணவழகும . .. .. . *
கழலகளிறுமிகிரி வினைவகாயழகுந் - - *
கமலநல்லாதனத்தழகும . .. ..- . - *
தருமுடிமுடிமுய்மயிலையினிடைமா - - . *
தவாகள்கணடிமறைஞ்சவீற்றிருக்கும் . - . *
தனழடிபுசந்தகிருவள்ளுவநோனுநாம . *
சற்குருசரணமேசரணம . . . - *

[ஆசிரியர்திருநாமங்கள்கூ]——[நூலின்திருநாமங்கள்-கூ]

திருவள்ளுவர்... .. *	திருக்குறள் . ... .. *
நாயனார்... .. *	முப்பானூல் . *
தேவர் . *	உத்தரவேதம .. *
முதற்பாவலர்... . *	தெய்வநூல .. .. *
தெய்வப்புலவர் ... .. *	திருவள்ளுவர் . ... *
நான்முகனார் .. ... *	பொய்யாமொழி .. . . *
மாதாநுபங்கி .. .. *	வாயுறைவாழ்த்து ... *
செந்நாப்போதார்... *	தமிழ்மறை ... *
பெருநாவலர் ... *	பொதுமறை... ... *

சிவமயம்

திருவள்ளுவமாலை.

(அசரீரி)

திருத்தகு தெய்வத் திருவள்ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க - விருக்க
வுருத்திர சன்மரென வுரைத்து வானி
லொருக்கவோ வென்றதோர் சொல் (௧)

(நாமகள்)

நாடா முதனான் மறைநான் முகனாவிற்
பாடா விடைப்பாரதம் பகர்ந்தேன் - கூடாரை
யெள்ளிய வென்றி யிலங்கிலைவேன் மாறபின்னை
வள்ளுவன் வாயதென் வாக்கு (௨)

(இறையனார்)

என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினு
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க் - குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் றெய்வத் திருமலர்போன்
மன்புலவன் வள்ளுவன் வாய்ச்சொல் (௩)

(உக்கிரப்பெருவழுதியார்)

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோ
ன்- றான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த - நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி (௪)

(கபிலர்)

தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால் - மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி (௫)

(பரணர்)

மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞாலமுழுது நயந்தளந்தான் - வாலறிவின்

வள்ளுவருந்தங்குறள்வெண் பாவடியால்வையத்தா... *
ருள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து... (௬)

(நக்கீரர்)

தானேமுழுதுணர்ந்து தண்டமிழின்வெண்குறளா *
லானவறமுதலா வந்நான்கு-மேனோருக் *
கூழினுரைத்தார்க்கு மொண்ணீர்முகிலுகுக்கும் *
வாழியுல கெனலுற்று மற்று (௭)

(மாமூலனார்)

அறம்பொருளின்பம்வீ டென்னு மந்நான்கின் *
றிறந்தெரிந்து செப்பிய தேவை-மறந்தேயும் *
வள்ளுவனென்பானோர் பேதையவன்வாய்ச்சொற் *
கொள்ளா ரறிவுடை யார்... (௮)

(கல்லாடர்)

ஒன்றேபொருளெனின் வேறென்பவேறெனின் *
அன்றெனப வாறு சமயத்தார்-நன்றென *
எப்பாலவரு மியைபவேவள்ளுவனார் *
முப்பான் மொழிந்த மொழி (௯)

(சீத்தலைச்சாத்தனார்)

மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியு *
மும்முரசு முத்தமிழு முக்கொடியு-மும்மாவுந் *
தாமுடையமன்னர்தடமுடிமேற்றாரன்றோ *
பாமுறைதேர்வள்ளுவர்முப் பால்

(மருத்துவன்றாமோதரனார்)

சீந்திநீர்க்கண்டந் தெறிசுக்குத்தேனளாய் *
மோந்தபின்யார்க்குந் தலைக்குத்தில்-ஆந்தை
மலைக்குத்துமால்யானை வள்ளுவர்முப்பாற்
றலைக்குத்துத்தீர்வுசாத் தற்கு (௰௧)

(நாகனறேவனார்)

தாளார்மலர்ப்பொய்கைதாங்குடைவார்தண்ணீரை *
ளொழிதல்வியப்பன்று-வாளாதா *
மப்பாலொருபாலையாய்பவோவள்ளுவனார் *
முப்பான் மொழிமூழ்குவார் (௰௨)

(அரிசில்கிழார்)

பரந்தபொருளெல்லாம் பாரறியவேறு... *
தெரிந்துதிறந்தோறுஞ்சேரச்-சுருங்கிய *

சொல்லாக் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல் -
வல்லாரார் வள்ளுவரல்லால் (௰௩)

(பொன்முடியார்)

காணின்ற தொங்கலாய் - காசிபனார் தந்து முன்
கூறின் றளந்த குறளெஃப - நான்முறையான் -
வானின்று மண்ணின் றளந்ததே வள்ளுவனார் -
தானின் றளந்த குறள் - (௰௪)

(கோதமனார்)

ஆற்றலழியுமென் றந்தணர்கணான்மறையைப் -
போற்றியுரைத்தேட்டின் புறத்தெழுதா - ரேட்டெழுதி -
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச் -
சொல்லிடினு மாற்றல் சோராதின்று - (௰௫)

(நத்தத்தனார்)

ஆயிரத்து முந்நூற்று முப்பதருங் குறளும்
பாயிரத்தினோடு பகர்ந்ததற்பின் - போயொருத்தர் -
வாய்க்கேட்க நூலுளவோ மன்னுதமிழ்ப் புலவ -
ராய்க்கேட்க வீற்றிருக்கலாம் - (௰௬)

(முகையலூர்ச்சிறுகருந்தும்பியார்)

உள்ளுந ருள்ளியு ளாந்துளாதததனைத் -
தெள்ளுதலிற் செய்தபால - வள்ளுவனார் -
முப்பாலிற் சொல்லிய மொழியுண்டேயெனப்பகர்வா
ரொப்பாவலரினுமில - (௰௭)

(ஆசிரியர்நல்லந்துவனார்)

[illegible] யுந்தப்பா வருமறையும் -
பொறுதியும் தந்பொருளெல்லாந் - தோற்றவே -
முப்பான் மொழிந்த முதற்பாவலரொப்பா -
ரொப்பாவலரினுமில - (௰௮)

(கீரந்தையார்)

தப்பா முதற்பாவாற் றமாண்ட பாடலினன் -
முப்பாலி னாற்பான் மொழிந்தவ - ரொப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத் -
தெய்வத்திருவள்ளுவர் - (௰௯)

(சிறுமேதாவியார்)

வீடொன்று பாயிர நான்கு விளங்கற -
நாடிய முப்பத்து மூன்றொன்றாங் கூடுபொரு -

ளெள்ளி லெழுபதிருபதிற் றைந்தினையுட் - *
வள்ளுவர்சொன்னவகை - - (உ௰)

(நல்கூர்வேள்வியார்.)

உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தா- *
னுத்தரமாமதுரைக்கச்சென்ப விப்பக்க - - *
மாதானுபங்கி மறுவில்புலச்செந்நாப்- - - *
போதார்புனற்கூடற்கச்சு- - - - - (உக)

(தொடித்தலைவிழுத்தண்டினார்)

அறநான் கறிபொருளே ழொன்று காமத்- - *
திறமூன்றெனப்பகுதிசெய்து-பெறலரிய *
நாலுமொழிந்தபெருநாவலர்நற்குணர்வார்- - *
போலுமொழிந்தபொருள்- - - (உஉ)

(வெள்ளிவீதியார்)

செய்யாமொழிக்குந்திருவள்ளுவர்மொழிந்த - - *
பொய்யாமொழிக்குமொருபொருளே-செய்யா- -*
வதற்குரியரந்தணரேயாராயினேனை- - - *
யிதற்குரியரல்லாதாரில்- - - - (உங)

(மாங்குடிமருதனார்)

ஓதற்கெளிதாயுணர்தற்கரிதாகி - - - *
வேதப்பொருளாய்மிகவிளங்கித்-தீதற்றோ - - *
ருள்ளுதோறுள்ளுதோறுள்ளமுருக்குமே - *
வள்ளுவர்வாய்மொழிமாண்பு - - (உச)

(எறிச்சலூர்மலாடனார்)

பாயிரநான்கில்லறமிருபானான்குமூன்- - *
றூயதுறவறமொன்றூழாக வாய- - - *
வறத்துப்பாலுள்வகையாவாய்ந்துரைத்தார்நூலின் - *
திறத்துப்பால் வள்ளுவனார்தேர்ந்து- - - (உரு)

(போக்கியார)

அரசியலையைந்தமைச்சியலீரைந்- - - - *
தருமரணிரண்டொன்றொண்கூழ்- இருவி- - -*
ரணபடை நட்டப்பதினேழ்குடிபதின்மூன் - - *
றெணபொருளேழாமிவை- - - - - (உசு)

(மோசிகீரனார்)

ஆண்பாலேழாறிரண்டுபெண்பாலடுத்தன்பு- - -*
பூண்பாலிருபாலோராறாக மாண்பாய .. ... *

காமத்தின்பக்கமொருமூன்றுக்கட்டுரைத்தார் ... *
நாமத்தின்வள்ளுவனார்நன்கு ... ... (உஎ)

(காவிரிப்பூம்பட்டினத்துக்காரிக்கண்ணனார்.)

ஐயாறுநூறு மதிகாரமூன்றுமா ... ... *
மெய்யாயவேதப்பொருள்விளங்கப்-பொய்யாது ... *
தந்தானுலகிற்குத்தான்வள்ளுவனென்னு ... ... *
மந்தாமரைமேலயன் ... ... (உஅ)

(மதுரைத்தமிழ்நாயகனார்.)

எல்லாப்பொருளு மிதன்பாலுளவிதன்பா ... ... *
லில்லாதவெப்பொருளுமில்லையாற்- சொல்லாற் ... ... *
பரந்தபாவாலென் பயன்வள்ளுவனார் ... ... *
சுரந்தபாவையத்துணை .. .. (உகூ)

(பாரதம்பாடியபெருந்தேவனார்.)

எப்பொருளும்யாரு மியல்பினறிவுறச் ... ... *
செப்பியவள்ளுவர்தாஞ்செப்பவரு-முப்பாற்குப் ... *
பாரதஞ்சீராம கதைமனுப் பண்டைமறை ... ... *
நேர்வனமற்றில்லைநிகர் ... ... (௩௰)

(உருத்திரசன்மகண்ணனார்)

மணற்கிளைக்கநீரூறு மைந்தர்கள் வாய்வைத் ... ... *
துணச்சுரக்குந்தாய்முலையொண்பால்-பிணக்கிலா ... *
வாய்மொழிவள்ளுவர்முப் பான்மதிப்புலவோர்க் ... *
காய்தொறூஉமூறுமறிவு ... . (௩௧)

(பெருஞ்சித்தனார்.)

ஏதமில்வள்ளுவரின் குறள்வெண்பாவினு .. ... *
லோதியவொண்பொருளெல்லா-முரைத்ததனாற் ... *
றூதவிழ்தார்மாற தாமேதமைப்பயந்த ... ... *
வேதமேமேதக்கன ... ... (௩௨)

(நரிவெருத்தலையார்.)

இன்பம்பொருளறம்வீடென்னுமிந்நான்கு ... ... *
முன்பறியச்சொன்னமுதுமொழிநூன்-மன்பதைகட் ... *
குள்ளவரிதென் றவைவள்ளுவருலகங் ... ... *
கொள்ளமொழிந்தார்குறள் .. .. (௩௩)

(மதுரைத் தமிழாசிரியர் - செங்குன்றூர்க்கிழார்.)

புலவர்திருவள் ளுவரன்றிப் பூமேற் ... ... *
சிலவர்புலவரெனச் செப்ப-னிலவு ... ... *

நிறங்கொளிமாலைக்கும் பெயர்மாலைமற்றுங் ... *
கறங்கிருண்மாலைக்கும்பெயர் ... ... (௧௪)

(மதுரையறுவை வாணிகர் இளவேட்டனார்)

இன்பமுந்துன்பமுமென்னுமிவையிரண்டு .. *
மன்பதைக்கெல்லாமனமகிழ- வன்பொழியா .. ... *
துள்ளியுணர வுரைத்தாரேயோதுசீர் *
வள்ளுவர்வாயுறைவாழ்த்து .. .. (௧௫)

(கவிசாகரப்பெருந்தேவனார்)

பூவிற்குத்தாமரையேபொன்னுக்குச்சாம்புநத .. *
மாவிற்கருமுனியாயானைக் - கமரருமப . *
றேவிற்றிருமாலெனச்சிறந்ததென்பவே .. *
பாவிற்குவள்ளுவர்வெண்பா ... (௧௬)

(மதுரைப்பெருமருதனார்)

அறமுப்பத்தெட்டுப்பொருளெழுபதின்பத் . *
திறமிருபத்தைந்தாற்றெரிய-முறைமையால் . *
வேதவிழுப்பொருளை வெண்குறளால்வள்ளுவனா .. *
ரோதவழுக்கற்றதுலகு .. (௧௭)

(கோவூர்கிழார்)

அறமுதனான்குமகலிடத்தோரெல்லாந் . .. *
திறமுறத்தேர்ந்து தெளியக- குறள்வெண்பாப் . *
பன்னியவள்ளுவனார்பான்முறைதேரொவ்வாதே .. *
முன்னைமுதுவோர்மொழி .. .. (௧௮)

(உறையூர்முதுகூத்தனார்)

தேவிற்சிறந்ததிருவள்ளுவர்குறள்வெண் .. *
பாவிற்சிறந்திடும் பாலபகரார்-நாவிற் . . *
குயவிலேச்சொற்சுவையோர்விலைமற்றுஞ் .. .. *
செயலில்லையென்னுந்திரு .. .. (௧௯)

(இழிகடபெருங்கண்ணனார்)

இம்மைமறுமையிரண்டுமெழுமைக்குஞ் .. .. . *
செம்மைநெறியிற்றெளிவுபெற மும்மையின் .. *
வீடவற்றினின்பவிதிவழங்கவள்ளுவனார் ... *
பாடினாரின்குறள்வெண்பா... ... .(௨௰)

(செயிர்க்காவிரியார்மகனார்சாத்தனார்)

ஆவனவுமாகாதனவுமறிவுடையார்
யாவருடவல்லாரெடுத்தியம்பத்-தேவர்
திருவள்ளுவர்தாமுஞ்செப்பியவேசெய்வார்
பொருவிலொழுக்கம்பூண்டார் (௪௧)

(செயலூர்க்கொடுஞ்செங்கண்ணனார்)

வேதப்பொருளைவிரகால்விரித்துலகோ
ரோதத்தமிழாலுரைசெய்தா-ராதலா
லுள்ளுநருள்ளும்பொருளெல்லாமுண்டென்ப
வள்ளுவர்வாய்மொழிமாட்டு (௪௨)

(வண்ணக்கஞ்சாத்தனார்)

ஆரியமுஞ்செந்தமிழு மாராய்ந்திதனி னிது
சீரியதென்றொன்றைச்செப்பரிதா லாரியம
வேதமுடைத்துத் தமிழ்திருவள்ளுவனா
ரோதுகுறட்பாவுடைத்து (௪௩)

(களத்தூர்க்கிழார்)

ஒருவரிருகுறளே முப்பாலினோதுந்
தருமமுதனான்குஞ் சாலு-மருமறைக
ளைந்துஞ்சமயநூ லாறுநம்வள்ளுவனார்
புந்திமொழிந்தபொருள் (௪௪)

(நச்சுமனார்)

எழுத்தசைசீரடி சொற்பொருள்யாப்பு
வழுக்கிலணிப்பாவி வண்ணம் மிழுக்கின்றி
யென்றவர்செய்தனவெல்லாமியம்பின
வின்றிவரின்குறள்வெண்பா (௪௫)

(அக்காரக்கனிநச்சுமனார்)

கவிதிரம்பிகாண்டற்கினிதாங்கனைவி
விலதிரமடநீர்மைத் தெளிந்த சொல்லிலா
வாளூர்மதியந்தனைக்கண்டோவள்ளுவர்முப்
பாலானமதத்தின்பயன் (௪௬)

(உப்பாலத்தனார்)

அறந்தகளி யான்ற பொருடிரியின்பு
சிறந்தநெய்செஞ்சொற்றீத்தண்டு-குறும்பாவா
வள்ளுவனாரேற்றினார்வையத்துவாழ்வார்க
ளுள்ளிருணீக்கும்விளக்கு (௪௭)

(குலபதிநாயனார்

உள்ளக்கமலமலர்த்தியுளத்துள்ள *
தள்ளற்கரியவிருடள்ளுதலால்-வள்ளுவனார் *
வெள்ளைக்குறட்பாவும வெங்கதிருமொக்குமெனக *
கொள்ளத்தகுங்குணத்தைக்கொண்டு (சஅ)

(தேனீக்குடிக்கீரனார்)

பொய்ப்பாலபொய்யேயாயப்போயினபொய்யல்லாத *
மெய்ப்பாலமெய்யாய் விளங்கினவே-முப்பாலிற் *
றெய்வத்திருவள்ளுவர்செப்பியகுறளால் *
வையத்துவாழ்வார்மனத்து (சகூ)

(கொடிஞாழன்மாணிபூதனார்)

அறனறிந்தேமான்றபொருளறிந்தேமின்பின் *
றிறனறிந்தேம்வீடுதெளிந்தே-மறனெறிந்த *
வாளார்நெடுமாறவள்ளுவனார்தம்வாயாற் *
கேளாதனவெல்லாங்கேட்டு (ருO)

(கவுணியனார்.)

சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய *
வந்தவிருவினைக்கு மாமருந்து- முந்திய *
நன்னெறிநாமறியநாப்புலமைவள்ளுவனார் *
பன்னியவின்குறள்வெண்பா (ருக)

(மதுரைப்பாலாசிரியனார்)

வெள்ளிவியாழம் விளங்கிரவி வெண்டிங்கள் *
பொள்ளெனநீக்கும்புறவிருளைத்-தெள்ளிய *
வள்ளுவரின்குறள்வெண்பாவகிலத்தோ *
ருள்ளிருணீக்குமொளி (ருஉ)

(ஆலங்குடிவங்கனார்)

வள்ளுவர்பாட்டின்வளமுரைக்கின்வாய்மடுக்குந் *
தெள்ளமுதின்றீஞ்சுவையுமொவ்வாதாற்-றெள்ளமுத *
முண்டறிவார்தேவருலகடையவுண்ணுமால் *
வண்டமிழின்முப்பான்மகிழ்ந்து (ருங)

திருவள்ளுவமாலை-முற்றியது.

(இடைக்காடர்பாடல்.)

கடுகைத்துளைத்தேழ்கடலைப்புகட்டிக் *
குறுகத்தறித்தகுறள் *

உ

சிவமயம்.

திருவள்ளுவ நாயனார்

சரித்திரம்.

உலகத்துள் மஹா சிறப்புப்பொருந்திய கைலாசகிரியிலே அரசிருக்கை மண்டபத்தில் பிரம்மாதி முப்பத்து மூக்கோடி தேவர்கள் - நாற்பத்தெண்ணாயிர முனிவர்கள் - கின்னரர்- கிம்புருடர் - கருடர் - காந்தருவர் - சித்தர் - வித்தியாதரர்- முதலானவர்கள் வணங்கிச் சூழும்படி பார்வதிசமேதராய்ப் பரமசிவன் திருவோலக்கமாக எழுந்தருளியிருந்தார் — அப்போது தேவியானவள் எழுந்து வணங்கி நின்று - ஸ்வாமி திரிலோகத்திலே இல்லறம்வழுவாது நடந்து கதியடைந்தவருண்டோ வென்றுவினவ, ஸ்வாமி திருவுளம் பற்றுகிறார் — உமையவளே தெய்வலோகத்தில் வசிஷ்டர் - அகஸ்தியா அயன் - புயங்கன் - சம்பு - என்றைந்துபேருண்டு பூலோகத்தில் திருவள்ளுவனென் றொருவருண்டு இவர்கள் தென்புலத்தார்கடன் - தேவர்கடன் - விருந்தோம்பல் - சுற்றந்தழுவல்- கபிலைபூசைசெய்தல் - முதலிய இல்லறத்தில் கற்பின்வழுவாத நற்குண நற்செய்கையுள்ள மனைவியரோடிருந்து இல்லறக் கடன் நடத்திக் கதியடைந்தாரென்று திருவாய்மலர்ந் தருளப், பூலோகத்திலே திருவள்ளுவர் என்பவர்-யாரென்று கேட்க, பூர்வத்திலேஒருபிரளயம்வந்தது, அதுவருமென்று பிரம்மா முன்னமே தெரிந்து அதிலே இறவாது பிழைக்கும்படி வேற்றுவடிவமாய் ஒருசுரைக்கூட்டைத் தனக் கிடமாகக்கொண்டு அதிற்புகுந்து அவ்வெள்ளத்தின்மேல் மிதந்துவந்தார். அதுகண்டு, நாம் அறியாதவர்போல் இதற்குளிருப்பவன் யாரென்று கேட்டோம். தான் வருங்காலமறிந்து செய்தற்கேற்ப வள்ளுவனென்றார் — இப்பிரளயத்தில் நீர் எப்படிப் பிழைத்திருந்தீரெனக்கேட்க, ஸ்வாமியென்றுதெரிந்து-மிகுந்தபோனந்தத்தை யடைந்து - பரமசிவனே உமது திருவருளினால்

பிழைத்திருந்தேன். ஆயினும் இந்தப்பிரளயத்தை நீக்கியருள் வேண்டுமென்று வேண்டிக்கொள்ள, நாம் அந்த அதிகாரம் உமக்கே கொடுத்தோமென்று அவராலே முன்புபோல் உலகத்தைச் செய்வித்தோம் - அத்தன்மையுடைய அவர் பூமியிலே பிறந்த காரணமுஞ்சொல்லுகிறோம்.

ஆதிகாலத்தில் பூமியிலே பாண்டிநாட்டில் மதுரைமாநகரத்திலிருந்த சங்கப்புலவர்கள் நம்மை அவமதிப்புச்செய்ததின்பொருட்டு அவர்கள் கர்வபங்கமாகுமட்டி பிரமஸ்வரூபராகிய திருவள்ளுவனையும - மஹாவிஷ்ணுவையும் - சரஸ்வதியையும் - பூமியில் அவதரிக்கும்படி அனுப்பினோம் அவருள மஹாவிஷ்ணு - இடைக்காடராய்ப் பிறந்தார், சரஸ்வதியும - திருவள்ளுவரும் வந்த மரபுங்கேட்பாயாக

ஆதியிலே பிரம்மபுத்திரர்களாகிய காசிபர்முதலிய நவப்பிரம்மாக்களில் காசிபர் ஊர்வசியைச்சேர்ந்து வசிஷ்டனைப்பெற்றார், அவர் அருந்ததியைச்சேர்ந்து சத்தியனைப் பெற்றார், அவா புங்கனூர்ப் புலைச்சியைச்சேர்ந்து பராசரைப்பெற்றார், அவர் மச்சகந்தியைச்சேர்ந்து வியாசரைப்பெற்றார், இவர்கள் நால்வரும் வேதங்களுக்குரியவரானார்கள்,

பின்பு பிரம்மாவானவர் இன்னுஞ் சில புத்திரரால் வடமொழியையுந் - தென்மொழியையும் விளங்கச்செய்ய வேண்டுமென்றெண்ணி - வேதவிதிப்படி ஒரு யாகஞ்செய்ய அதன் கணவைத்திருந்த கும்பத்திருந்து கலைமகளவதரித்தனள, அவளைப் பிரமன் விவாகஞ்செய்துகொண்டார், பின்பு அகஸ்தியர் குறியவடிவோடு அககும்பத்துதித்தனர், அவர் சமுத்திரகம்னிகையை மணந்து பெருஞ்சாகர னென்பவனைப் பெற்றார், அவா திருவாரூர்ப் புலைச்சியைச்சேர்ந்து பகவனென்பவனைப்பெற்று அவனுக்குச் சகலசாஸ்திரங்களையுங் கற்பித்தார். அந்நாளில் பிரம்மவம்சத்தில் தவமுனியென்பவர் அருண்மங்கையென்னும் பிராமண மாதைச்சேர்ந்து ஒருபுத்திரியைப் பெற்றுவைத்து விராலிமலையில் தவஞ்செய்யச் சென்றனர், அக்குழந்தையை உறையூர்ப் பெரும்பறையன் கண்டெடுத்துச் சிலகாலம் வளர்த்து வருகையில மேல் நடக்கப்போகிற காரணத்தினால இந்தப்பெண்தவிர மற்றவர்கள்யாவரும் இறக்கும்படி அந்தச்சேரியில் யாதுகாரணமோ மண்மாரிபெய்

தது, பின்பு அந்தப்பெண் அதற்கடுத்த மேலூர் அகரத்திலே நீதியையன்வீட்டில் வளர்ந்திருந்தனள்

அப்போது பகவனென்பவர் சகலசாஸ்திர பண்டிதராய்க் கண்டவர் யாவரும் மரியாதைபண்ணும்படி பிராமண கிர்த்தியத்தில் வழுவாதவராயிருக்கையில, யாத்திரைபண்ணும்படி இச்சைகொண்டு - காசிக்குப்போகும்போது இவ்வகரத்துக்கடுத்த ஒருசத்திரத்தி லிறங்கி நித்தியகருமங்களை முடித்துக்கொண்டு சமையல்செய்திருந்தார்— அவ்விடத்தில் அந்தப்பெண்வர அவளைக்கண்டு நீயார் புலைச்சியோ - வலைச்சியோ- இங்கேவந்தாயென்று அதட்டி மிகுந்தகோபங்கொண்டு சட்டுவத்தால் அவளது தலையிலே உதிரஞ்சோர அடித்தோட்டினார்,— அவள் அழுதுகொண்டு தன்னிடத்துக்குப் போய்விட்டாள்

மறுபடியும் பகவனென்பவர் ஸ்நானஞ்செய்துபோசனம் பண்ணி அதிசீக்கிரத்தில் வழிகொண்டு சிலநாளிற் காசிக்குப் போய்க் கங்காஸ்நானஞ்செய்து பிரயாகையிலிருந்து தீர்த்தக்காவடி கட்டிக்கொண்டு வரும்போது அந்தச்சத்திரத்தில் வந்திறங்கினார் மேற்சொல்லிய பெண்ணானவள் அப்போது மஹாலட்சுமியைப்போலும் அழகும்,எவ்வரிலன பருவமும், உடையவளாய்-அங்கேவந்தாள், பகவனென்பவர் இவளுடைய சௌவுந்தரிய முதலிய குணங்களைப்பார்த்து-மோகங்கொண்டார், அச்சத்திரத்துக்கு அதிபராகிய நீதியையனென்பவர் அக்குறிப்பினைக்கண்டு என்பெண்ணை விவாகம் பண்ணிக்கொண்டு இங்கேயிருமென்றுசொல்ல - அதற்கவர் நான் கொண்டு வந்த காவடியை இராமேசுரத்திற் செலுத்திவந்து அப்படியே செய்கிறேனென்று அவரிடத்திற செலவுபெற்றுக்கொண்டுபோய் இராமலிங்கத்துக்கு அபிஷேகம்பண்ணித் திரும்பி வந்தார் அப்போது நீதியையர் விவாக எத்தனங்கள் பண்ணிப் பந்துக்களோடிருந்து விசேஷமாய் நாலுநாளைய சடங்குகளும் செய்து ஐந்தாநாள் மங்களஸ்நானஞ் செய்விக்கும் போது பகவனென்பவர் அந்தப்பெண்ணுடைய தலையில் எண்ணெயைப்பெய்யும்படி பயிலாவிருந்தார்கள்,— அப்போது தான்முன்பு சட்டுவத்தாலடித்த வடுவைக்கண்டு அனுமானித்து இந்தப் பெண்ணினது வரலாற்றையும் விசா

ரித்து விசனங்கொண்டு நீ ஆதிய எல்லளாவென்று சொல்லி
விட்டு ஓடினார், அதுவே அவளுக்கு ஆதியென்றக் காரணப்
பெயராயிற்று.

அப்படி யோடிய பகவனென்பவர் பொழுது போகையா
ல் எதிரேகனாட பாணர்சேரியிலிருந்த ஒருமண்டபத்திலே
தங்கினார், ஆதியென்பவளும் அவர்பின்னே தொடர்ந்து அவ
ரைக்கண்டு தெய்வச்செயலால் உனக்கும் எனக்கும் இந்தக்கா
ரியம் நடந்திருக்க நீரென்னைவிட்டுப்போகுதல் உமக்குத்தகு
மோ, அல்லது தருமமோவென்றும் உம்மைநீங்கின‌ல உயிர்
வாழேனென்றும் மிகவும் இரக்கத்துடன் சொல்லப் பிரார்த்
திவத்தால் இவர் புத்தியினும் அதுசரியென்றுபட்டுப் பெண்
ணே எவ்விடத்தில் உனக்கு அன்பிருக்குமானால் யான்சொ
ன்னபடி கேட்கவேண்டும், அஃதென்னெனில் உனக்குப்பிள்
ளைகள் எங்கெங்கே பிறக்கிறதோ அங்கங்கே யதுகளை அப்
பொழுதே விட்டு வருவையானால் யான் உன்னைக்கூடச் சம்ம
திப்பே னென்றுசொல்ல அவளதற்கு உடன்பட்ட படியால்
அன்றிரவில் அம்மண்டபத்தி லிருவருங்கூடினார்கள்

ஔவை.

அப்போது பரமசிவன் உத்தரவின்படி சரஸ்வதி யாவரா
லும் புகழப்பட்ட ஔவையாகிப்பிறந்தாள், இந்தக்குழந்தை
யையாவர் காப்பாற்றுவரென்று விட்டுநீங்கத் தாய் வருந்
தும்போது அது சொல்லியது.

(வெண்பா)

இட்டமுடனென்றலையி லின்னபடியென்றெழுதி . *
விட்டசிவனுஞ்செத்து விட்டானோ - முட்டமுட்டப் *
பஞ்சமேயானாலும் பாரமவனுக்கன்றோய் .. *
நெஞ்சமேயஞ்சாதே நீ , . , .. *

அதுகேட்டு மனந்துணிந்து போயினள், பின்பு அக்குழந்
தையை அச்சேரியிலுள்ள பாணர்களெடுத்து வளர்க்க வளர்ந்
து சரஸ்வதி யாகையால் இயல்பாகவே கலைமுழுவது மறிந்து,
(சீதக்களபவென்னும்) கணபதி அகவல்பாடி அவரை உபாசித்
து லோகோபகாரமாக (ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூது
ரை, நல்வழி, குறள், அசதிக்கோவை, நன்னூற்கோவை, நான்
மணிக்கோவை, பந்தனந்தாதி, அருந்தமிழ்மாலை, தரிசனப்

பத்து)முதலியவுஞ்செய்து ஒவ்வொரு காரியத்தின்பொருட்டுத் தனிகவிதைக ளநேகமும்பாடி அநேக அற்புதங்களெல்லாஞ்செய்து முடித்துவருநாளில் ஒருநாள் கணபதிபூசை விரைவாகச்செய்தாள் அவர் வழக்கப்படியன்றி விரைந்து செய்வது ஏனென்றுகேட்க ஸ்வாமி சுந்தரமூர்த்தியாரும் சேரமான்பெருமாளும் கைலாசத்துக்கு போகின்றார்கள் என்னையும் அழைத்தார்களென்ன அவர்களுக்கு முன்னே உன்னை அங்கேவிடுவேன் நீ பூசையை வழக்கப்படிமுடியென்றார் தம்பூசையைக் கிரமப்படி முடித்தாள் உடனே கணபதி துதிக்கையா லெடுத்து விடக் கைலாசமலையை யடைந்தாள் பின்பு போன அவ்விருவரும் ஔவையைகண்டு அதிசயப்பட்டார்கள்.

உப்பை

இதற்கு முன்புபோன இருவர்களும் தொண்டைநாட்டில் ஊற்றுக்காடென்னும் ஊரிலுள்ள தோர் மடத்திற்சென்று கூடினார்கள் அப்பொழுது உப்பையென்பவள் பிறந்தாள் இந்தக்குழந்தையை யாவர் காப்பாற்றுவா ரென்று அதை விட்டு நீங்கத் தாய் வருந்தும்போது அது சொல்லியது.

அத்திமுதலெறும்பீ றானவுயிரத்தனைக்குஞ் *
சித்தமகிழ்ந்தளிக்குந் தேசிகன் - முற்றவே *
கற்பித்தான்போனானோ காக்கக்கடனிலையோ *
வற்பனோவன்னா யரன் *

அதுகேட்டு மனந்துணிந்து போயினர் அவ்வுப்பை [illegible] பிறப்பில் யாரெனில், பிருகுவின் பத்தினியாகிய [illegible] யென்பவள் திரிமூர்த்திகளும் அவள் அழகின் [illegible] கேள்விப்பட்டுப் பார்க்க மாறுவேஷங்கொண்டுபோய் [illegible] ணபிட்சைகேட்டார்கள் அவள் மஹாபதிவிரதையா [illegible] இவர்களைப் பாலராக்கி அப்படியே பால்கொடுத்து [illegible] ப் பரிசோதித்ததற்குக் கோபங்கொண்டு அவர்களை மூன்று சனனம் எடுக்கும்படிசொன்னாள் அதுகண்ட திரிமூர்த்திகளுந் தங்களை அவள்மதிக்காமல் பாலராக்கி மூன்றுசனனம் பண்ணும்படி சொன்னதற்காகச் சினங்கொண்டு நீ அழகின்றி மாறுவடிவாகக் கடவையென்று சபித்துப்போயினார் பின்பு

பிருகுவானவர் இவள் வேற்றுவடிவங்கண்டு நீர்ப்பூமியில் பிறக்கக்கடவையென்றனர் அவள் கணவனுத்தரவின்படி உப்பையென்னவுந் தவதரித்து வண்ணார் வளர்க்க வளர்ந்து, மாரியம்மையாய் உலகமெல்லாந் தன்னைப்போற்ற இப்பொழுதும் அவ்வூரில் தெய்வமா யிருக்கின்றனள்.

அதிகமான்

இதுநிற்க முன்புபோன அவ்விருவருஞ் சோழதேசத்திற் கருவூரி லடைந்து ஒருசோலையிற்கூட அதிகமானென்பவர் பிறந்தார், இந்தக்குழந்தையை யாவர் காப்பாற்றுவா ரென்று அதைவிட்டு நீங்கத் தாய்வருந்தும்போது அது சொல்லியது.

(வெண்பா)

கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுட் டேரைக்கும் *
விருப்புற்ற முதளிக்குமெய்ய - னுருப்பெற்
றூட்டிவளர்க்கானோ வோகெடுவாயன்னாய்கேள் *
வாட்டமுனக்கேன் மகிழ் … *

அதுங்கேட்டு மனந்துணிந்து போயினள் — அந்தக் குழந்தையைச் சேரமா னெடுத்துவளர்க்க வளர்ந்து வில்வேதம், மனுவிலக்கியான முதலியவையுங்கற்றுமுடிசூட்டப்பெற்று சொக்கநாதர் திருமுகமெழுதிக் கொடுக்க பாணபத்திரருக்கு வேண்டிய திரவியங்கள்கொடுத்துப் பொன்வண்ணத்தந்தாதி யென்றோர் பிரபந்தம்பாடிச் சிதம்பரத்தி லரங்கேற்றி அரசுசெலுத்திச் சுந்தரமூர்த்தியார் நட்புப்பெற்றிருந்து அவர் கைலைக்குப் போகும்போது உடனேபோய் அங்கே தாம் பாடியருளிய ஆதியுலாவை அரங்கேற்றிச் சிவானுக்கிரகம் பெற்று வீற்றிருந்தார்.

உருவை.

முன்புபோன அவ்விருவரும் காவிரிப்பூம் பட்டினத்தடைந்து ஒருமண்டபத்திற்கூடினார்கள் உருவையென்பவள் பிறந்தாள். இந்தக்குழந்தையை யாவர்காப்பாற்றுவாரென்று அதைவிடுத்து நீங்கத் தாய்வருந்தும்போது அதுசொல்லியது.

(வெண்பா)

சண்டைப்பைக்குள்ளுயிர்தன் றாயருந்தத்தானருந்தும்
அண்டத்துயிர்பிழைப்பதாச்சரிய - மண்டி … *
யலைகின்றவன்றோ யரனுடையவுண்மை. … *
நிலைகண்டுநீயறிந்து நில் … *

அதுகேட்டுத் தாய் மனந்துணிந்துபோயினள். பின்பு அக்குழந்தையைக் கள்விற்போரெடுத்து வளர்க்கவளர்ந்து தவஞ்செய்து பத்திரகாளியாய்த் தாருகனைக்கொன்று திருவாலங்காட்டில் சபாநாயகருடனே நிருத்தஞ்செய்து அதிலேதோற்று அகோரவீரபத்திரரை விவாகம்பண்ணிக்கொண் டவ்விடத்திருந்தாள்

கபிலர்

இதுநிற்க முன்பு அவ்விடம்விட்டுப்போன இருவரும் திருவாரூரை யடைந்து ஒருமடத்திற்கூடக் கபிலரென்பவர் பிறந்தார். இந்தக் குழந்தையை யாவர் காப்பாற்றுவாரென்று அதைவிட்டு நீங்கத் தாய் வருந்தும்போது அதுசொல்லியது.

(வெண்பா.)

கண்ணுழையாக்காட்டிற் கருங்கற்றவளைக்கு *
முண்ணும்படியறிந்தூட்டுமவர் - நண்ணு *
நமக்கும்படியளப்பார் நாரியோர்பாகர் *
தமக்குத்தொழிலென்ன தான். *

அதுகேட்டு மனந்துணிந்துபோயினள் அக்குழந்தையைத் தமக்குப் பிள்ளையில்லாத பாப்பையனெனும் ஒரு பிராமணனெடுத்து வளர்த்து எழுவயதில் உபநயனம் செய்யத் தொடங்குகையில் பிராமணர்கள் ஒத்துக்கொள்ள மாட்டோமென்றுசொல்ல அதைக்கண்ட கபிலர் அவர்களைப்பார்த்து நான்முகத்தோ னென்றோர் அகவல்சொல்லிக் கருமத்தினால் ஜாதியன்றிச் சென்மத்தால் இல்லையென்று சாதிக்க, அதற்குப் பிரதியுத்தரஞ் சொல்லமாட்டாமல் இதுவே விதியென்று யாவரும் ஒத்துக்கொண்டு அச்சடங்கு முதலானவை முடித்தார்கள். அக்கபிலர் இன்னும் பாதாள வுலகத்தில் தவம் பண்ணிக்கொண்டிருக்கின்றனர்.

வள்ளியம்மை.

இதுநிற்க முன்புபோன அவ்விருவரும் வேளின்மலைச் சாரலில் வந்துகூட, அப்பொழுது வள்ளியம்மைபிறந்தனள் இக்குழந்தையை யாவர் காப்பாற்றுவாரென்று அதைவிட்டு நீங்கத் தாய்வருந்தும்போது அதுசொல்லியது.

(வெண்பா)

அன்னைவயிற்றி லருத்தி வளர்த்தவன்று *
இன்னும்வளர்க்கானோ வென்றாயே - பின்னரவஞ் . *

குடும்பெருமான் சுட்டிநின் றவினை . . . . . *
யாடும்பெருமா னவன் . . . *

அதுகேட்டு மனந்துணிந்து போயினள் பின்பு அக்குழந்தையை மலைக்குறவர் வளர்த்தார்கள் அவள் முற்பிறப்பில் யாரென்னில், மகாவிஷ்ணுவினால் மோகிக்கப்பட்ட ஒருவிபுதையென்பவளிடத்திற் பிறந்த குமாரியென்பவள் குமாரக்கடவுளைக் குறித்துத் தவஞ்செய்தபோது அவர் வரப்படி தொண்டைமண்டலத்தில் வள்ளிமலையிலிருந்தகடவுளுக்கு நாயகியானாள்.

திருவள்ளுவர்

முன்புபோன அவ்விருவரும் மயிலாப்பூரில் இலுப்பைத்தோப்பில் கூடினார்கள் அப்பொழுது திருவள்ளுவர் பிறந்தனர் இந்தக்குழந்தையை யாவர் காப்பாற்றுவாரென்று அதை விட்டு நீங்கத் தாய்வருந்தும்போது அது சொல்லியது.

(வெண்பா)

எவ்வுயிருங்காககவொரு வீசனுண்டோ வில்லையோ *
வவ்வுயிரில்யானொரு வனல்லவோ - வவ்வி . . *
யருகுவதுகொண்டிங் கலைவதேனன்னே . . *
வருகுவதுதானே வரும் . . *

அதுகண்டு மனந்துணிந்து அவ்விருவருந் தீர்த்தயாத்திரைக்குப் போயினர் பின்பு சிவாலயத்தின் அருகேயுள்ள இலுப்பைமரத்தின்கீழிருந்த குழந்தை அவ்விலுப்பைமலரிற் றுளிக்குந் தேனையுண்டு பூர்வம் பிரம்மா வாதலால் சிகை எக்யோபவீதம் சதுர்வேத புஸ்தகமுங்கொண்டு வளர்கையில் கங்காகுல சிரேஷ்டனாகிய ஒருவேளாளன் மனைவி புத்திரனைக் குறித்து அச்சிவாலய சந்நிதியில் தவஞ்செய்திருந்தாள்—அப்பொழுது உமாதேவி அவளுடைய தவத்திற்கிரங்கி, தெய்வச்செயலாலுண்டாகிய இந்தக்குழந்தையை நீ யெடுத்துககொள்ளென்றருள்செய்து திருவள்ளுவரென்று பூர்வநாமகரணமுஞ் செய்தாள் அவளும் அந்தக்குழந்தையை எடுத்து மகிழ்ச்சியடைந்துக் கொண்டுபோய்த் தன்புருஷன்கையிற் கொடுத்தாள்—அவனுந் தன்கையில் வாங்கி பேரானந்தம் பெற்று அதுவந்த வரலாறு கேட்டு இப்படி இருவரும் அந்தப் பிள்ளையை நாளொருமேனியாகவளர்க்குங்காலத்தில் அவர்கள்சுற்றத்தார்கள் ஏதோ ஒரு பிள்ளையை வளர்க்கிறார்களென்று இவர்களைஇகழ்ந்

பெண்ணை, அதற்குஅவர்களஞ்சிப் புறத்திலுள்ள தோர்தொழு
வத்திலே தொட்டிலிட்டு அதில் அக்குழந்தையைக் கிடத்திப்
பணிக்காரரைக் காவல்வைத்து வளர்த்தார்கள். பின்பு திரு
வள்ளுவரும்ஐந்துவயதானகாலத்துத் தன்பொருட்டுத் தாயும்
தகப்பனும் சுற்றத்தார்களால் நிந்தைசெய்யப் படுகிறார்களெ
ன்று அவர்களைப்பார்த்து, என்னால் உங்களுக்கு வருத்தம் வே
ண்டுவதில்லை நான்வேறிடத்திலிருக்கின்றேன் நீங்கள்வருந்தாதி
ருங்களென்று சொல்ல, அவர்கள் அப்பா உன்னைப்பிள்ளைக்
கலிதீர்க்கவந்த பெருமானென்றெண்ணியிருந்தோமே நீஇப்
படி சொல்லலாமாவென்ன, நாயனார் நீங்கள் என்னை நினைக்கு
ம்போது வந்துங்களுக்கு வேண்டியதைச் செய்வேனென்று
சொல்லிப் புறப்பட்டு அவ்வூர்க்கருகே ஒருபனைமரத்தி னிழ
லிலேயிருந்தார். அப்பனைமரம் தன்னடிவிட்டு நிழல் சாயாதி
ருக்கக் கண்டவர்கள் இப்பிள்ளை தேவனோ, முனிவனோ, கடவு
ளோ, இவ்வுருவோடுவந்ததென்று துதிக்க - அவர்களைப்பார்த்
து நாயனார் இங்கே தவமேது - மகிமையேது-யாதொன்றும்
என்னிடத்திலில்லைபோமென்று,தாம் அவ்விடத்தைவிட்டு நீங்
கித் திருமூலர் - போகர் - முதலாகிய சித்தர்களும் - மாதவர்
களும் - வாசஞ்செய்கின்ற மலைக்கெழுந்தருளித் தவஞ்செய்
வார்களோடு கூடியிருந்தார். அங்கிருந்த திருமூல ரிவரைக்
கண்டு வள்ளுவரே, பூர்வத்தில் நந்தி எனக் கனுக்கிரகம்பண்ண
னும்போ தங்கே யிருந்தீரே, உலகத்தாருக்குச் சித்தி முத்தி
யருளும்படிக்கும், அறம்பொரு ளின்ப மென்னு முப்பாலை
யுந் தமிழில் அருளிச்செய்யும்படிக்கும், இங்குவந் தவதரித்தீ
ரோவென்று துதிக்க, நாயனாருமகிழ்ந்து அங்கே தவஞ்செய்
வோரில் ஒருவராயிருந்து சகலசாஸ்திர பண்டிதரானார் அக்
காலத்தில் தொண்டைமண்டலத்தி லொரு வேதாளமானது
பயிர்களை அழித்தும், உயிர்களை வதைத்தும், அநேகந்துன்ப
ஞ் செய்துவந்தது. அப்பொழுது காவேரிபாக்க மென்னும்
ஊரில் ஆயிரம் ஏர்கொண்டுழுது பயிர்செய்கின்ற மார்க்
சகாயனென்னும் ஒரு வேளாளன் இந்தவேதாளத்தை அடக்கி
னவருக்கு அளவற்ற திரவியமும் ஊரும் வேண்டியவைகளை
யுந் தருகிறேனென்று பிரசித்தம்பண்ணினான். அதுஒருவரா
லும் ஆகாமலிருந்தது. பின்பு அவ்வேளாளன் திருமூலரா

யர் வாசஞ்செய்யும் மலையிலே யிருக்கும் பெரியோர்களை அடுத்துச்சொல்ல, அவர்கள் திருவள்ளுவரோ தீர்ப்பரெனென்றார்கள். அவரை வணங்கிச்சொன்னான். அப்போது சிவகாருணியராகிய திருவள்ளுவர் அவ்வேளாளன் வேண்டிக்கொள்வதை நிறைவேற்றும்பொருட்டு அவ்வேதாளத்தை விபூதி பஞ்சாட்சரத்தால் வென்று யாவரையும் ரக்ஷித்தார். பின்பு அவ்வேளாளன் ஒருரும் அளவற்றதிரவியமுமில்லாமலும் நாயனார்யோக்கியத்தையும் மகத்துவத்தையும் பார்த்து, வாசுகியென்னும் தன்பெண்ணையுங் கொடுக்கும்படி நிச்சயித்து நாயனாரிடத்து வந்து என்பெண்ணைத் தேவரீருக்குக் கொடுக்க நினைத்திருக்கிறேன் அப்படியே அங்கீகரிக்க வேண்டுமென்று சொன்னான். நாயனார்உலகத்தாருக்கில்லறநடத்திக்காட்டவேண்டுங்காரணத்தை யோசித்து, அந்தப்பெண் நான்கொடுக்குமணலை அன்னமாக்கி எனக்கிடுமானால் விவாகஞ்செய்து கொள்ளுவேனென்றார். அந்தப்பெண் அப்படியே சம்மதித்து சமைத்துப் படைத்தனள். நாயனாரும் அங்கீகரித்து விதிப்படி வாசுகியை விவாகஞ்செய்து சிலநாளங்கிருந்து பின்பு மனைவியுடன் மயிலையில் வந்தோரில்லாக்கிக்கொண்டு இல்லறஞ்செய்து நெய்தற்றொழில் பாபமில்லாததென்று ஏலேலசிங்கனென்னும் வர்த்தகனிடத்தில் [illegible]வாங்கி ஆடைநெய்து அக்கூலியால் சீவனஞ்செய்திருந்தனர். பின்பொருகாலத்தில் திருவாலங்காட்டில சபாநாயகர் மடசங்காரஞ்செய்து கெர்வித்திருந்த பத்திரகாளி கெர்வபங்கமாகப் பலவிதநடனஞ்செய்ய அவளுந் தோல்வியடையாம லாடிவந்தாள். பின்பு ஸ்வாமி குண்டலங் கழன்றதைக் காதிலேதானே சேரும்படி ஊர்த்துவபாதமாக நடனஞ்செய்தார் அவளு மப்படியாட நாணித்தோற்றாள். அப்பொழுது தேவர்கள் சுவாமீ தேவரீ ரூர்த்துவதாண்டவம் பண்ணிய தென்னகாரணமோ தெரியவில்லை யென்றுகேட்க, நீர் திருமயிலையிலிருக்குந் திருவள்ளுவரைக் கேட்டீர்களானால் தெரியுமென்று சொல்ல, தேவர்களங்கேபோ யவரைக்கேட்க, அவர்சொல்லியது.

(வெண்பா.)

பூவிலயனும் புரந்தரனும் பூவுலகைத் .... *
தாவியளந்தோனுந் தாமிருக்க - தாவி .... *

விழைநக்கி நூனெருடு மேழையறிவேனோ . . *
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து . . . . . *

அதிலே தெரிந்து தங்கள சந்தேகந் தெளிந்தார்கள் ஒரு
நாள் நூல்வாங்கும்பொருட்டு ஏலேலசிங்கன்வீட்டுக்குப்போ
ய் செட்டியார் எங்கேயென்றுகேட்க, அவர் சிவபூசை செய்கி
றா ரென்றார்கள். அவர் சிவபூசை இங்குசெய்கிறாரோ குப்பத்
திற் செய்கிறாரோ வென்ன, அதை அவர்பத்தினி உள்ளேபோ
ய் அவருக்குச் சொல்ல, அவர்கேட்டுச் சிவபூசையை விட்டுத்
திடுக்கிட்டோடிவந்து நாயனாருடைய உபயபாதங்களில் வண
ங்கி ஸ்வாமீ என்னைப் பந்தசாகரத்தினின்று மெடுத்துக் கரை
யேற்றவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, நாயனார் அவர
து பக்குவத்தையும் இன்னுஞ்சில மாணாககர் பக்குவத்தையும்
சோதிக்கவெண்ணி, ஒருநாள் அவர்களை யழைத்துக்கொண்டு
ஒருவனத்திற்சென்று அங்குவெள்ளம்பெருகிவரச்செய்தனர்.
அவர்கள்பயந்து மனோதிடமின்றிஇக்கரையிலிருந்துடன்போ
கமாட்டாமல்விழிக்க,ஏலேலசிங்கர்மாத்திரம்தம்மைதொடர்
ந்துவர,அவ்வெள்ளம் வழிவிட்டது பின்புஉயர்ந்த ஒருமரத்தி
னுனியி லேறென்று சொல்ல, ஏலேலசிங்கரேறினர் பின்புபிடி
த்த கொம்பையும் நின்றகொம்பையும் விட்டுவிடென்றருள,
யோசியாமல் விட்டனர் விட்டும் ஒரு அபாயமில்லா திருந்த
ஏலேலசிங்கரைத் தமது மடியின்மேல் வைத்து ஞானோபதே
சம்பண்ணி எப்படிப்பட்ட சௌந்திரியமுள்ள மங்கையர்கள்
மயக்கினு மயங்காத திடச்சித்தத்தையும் அனுக்கிரகித்தார் பி
ன்பு தம்மிடத்துக்கு வந்துவிட்டார்கள் அப்படி யிருககு நா
ளில், அந்நாட்டுக்கரசனாகிய அச்சுதராஜன் ஒருநாள்ஏலேலசிங்
கரோடு பேசிக்கொண் டிருக்கும்போது உமக்குப் புத்திரப்
பேறில்லையே உம்முடைய ஞானாசிரியரை அப்பேறுண்டாக
க் கேட்கலாகாதா வென்ன, அவர் நல்லதென்று போய் மற்
றொருநாள் நாயனாரைக்கண்டு விண்ணப்பஞ் செய்ய, அவர்
ஸ்வாமிகடாக்ஷிப்பாரென்றுஅனுக்கிரகம்பண்ணினார் பின்புஒ
ருநாள்பரமசிவமே சிறுகுழவியாய் ஏலேலசிங்கரும்அவர்மனை
வியும் நித்தியந்தரிசிக்கும் பசுவின் வாலின்புறத்திற் கிடந்தழு
வதைக்கண்டு அவ்விருவரும் இக்குழந்தையை ஏதெனவெடுத்

தார்கள் உடனே அந்த அம்மாள் ஸ்தனங்களிலே பால்சுரந்து பெருக, அக்குழந்தைக்குப் பாலீந்து ஞானகுருவாகிய நாயனார் சந்நிதானத்திற் கொண்டுபோனார்கள். அவர் அக்குழந்தைக்கு அழகானந்தமென நாமகரணம்பண்ணினார். உடனே ஏலேலசிங்கர் அசுகத ராஜனென்னும் அரசனிடத்திற் சென்று எனக்குத் தெய்வீகத்தினால் குழந்தை யுண்டாயிற்றென்று சொல்ல, அவன் அப்படி தெய்வீகமானால் என்னிடத்திலும் அது வரலாமேயென்றான்.—அவ்விருவரும் இப்படி பேசிக்கொண்டிருக்கும்போது அக்குழந்தை அரசனது மடியில்வந்திருந்தது

அதை அவன்கண்டு இது அழகானந்தமோவென்று ஆனந்தமடைந்து அணைத்துக்கொண்டு தன்மனைவிகையிற் கொடுக்க, அவள் வாங்கினவுடனே ஸ்தனங்களினின்று பால்பெருக, அதனைக் குழந்தைக்குப் புகட்டினாள் இப்படியற்புதமாய் வளர்ந்து பின்பு அனேகருக்கு ஞானோபதேசஞ் செய்து மகிமையோடிருந்தனர்.—மற்றொருதினத்தில் ஏலேலசிங்கரது கப்பல் கரைதட்டிப்போக அதைக் கேள்விப்பட்டு அவர் தம்மரசனுடனே சொல்ல, அவன் நம்மாலாவதென்ன உம்முடைய ஆசாரியருடனே சொல்லுமென்ன, அவர்போய் விண்ணப்பம்பண்ணிக்கொள்ளுவதற்குமுன்னமே நாயனாரறிந்து ஏலேலசிங்கரை அழைப்பித்துக் கூட்டிக்கொண்டுபோய்க் கப்பலிற் கயிறுபூட்டி அனேகம் படவுகாரரிழுத் திழுத் தெவ்வளவும் அசையாமற் பதிந்திருப்பதனால் அவர்களெல்லாஞ் சோர்ந்து கிடப்பதைக்கண்டு நாயனார் அதனருகிற்சென்று தமது திருக்கையாற்றொட்டு ஏலேலையா வென்றிழுங்களென்று கட்டளையிட, அப்படியே யிழுத்தார்கள். உடனே நிற்கவேண்டியபடி கப்பல் நின்றது.

பின்பொருகாலம்மழையில்லாமையால் உலகத்திற்றானியங் கொள்ளக்கிடையாமல் அனேகரிறந்துபோவதைக்கண்டு நாயனார் தமக்கு அன்புள்ளமாணாக்கனாகிய ஏலேலசிங்கரைப்பார்த்து, நீர் இந்தப்பஞ்சகால மாறுகிறவரைக்கும் வாங்கிக்கட்டி வைத்திருக்கிற நெல்லையெல்லாம் வாங்கின விலைக்கு குறுணி யேற்றமாக விற்ககடவை யென்றருள, அவரதுசொல்லை ஆக

மாகக்கொண்டு விற்றார் — பொருள் அதிவிருத்தியாய் மலைபோலுங் குவிந்தன, அவர் கட்டிவைத்திருந்த நெல்லு ஏழு வருஷங் குறைந்ததில்லை பின்பு மழைபெய்து உலகம் க்ஷேமமடைந்தது மறுபடி யவரை யழைத்துக் குறுணி குறைய வில்லென்றார் அப்படியே விற்றார் அவரிடத்திருந்த நெல்லெல்லாம மறுநாள் அஸ்தமயத்துக்குள்ளே செலவாய்ப் போய்விட்டன பின்பு நாயனார் நீர் நெல்லுவிற்று விர்த்தியான பொருளையெல்லாம் உருக்கித்திரட்டிக் கடலிற் போட்டுவிடுமென, அவர் அப்படியே செய்தார் அதை யொரு பெருமீன் விழுங்கிற்று, சிலநாளைக்குப்பின்பு அம்மீன் வலைக்காரர்கையி லகப்பட்டது அதனை அவர்கள் சோதிக்கும்போது அதன் வயிற்றில் மலினமும் பாசியும் படிந்ததொரு ஸ்தம்பமிருக்க அதனை ஏலேலசிங்கருக்குக்கொடுத்தார்கள் அவர் கருங்கல்லென்றெண்ணி ஸ்நானம்பண்ணுமிடத்திற் போடுவித்தார் அதன்மேல் நடத்தன்முதலிய பயிற்சியால் மலினம் நீங்கிப் பிரகாசித்தது அதில் தமது பேர்வெட்டியிருத்தலால் தம்பொருளென்றறிந்து, குருவருளென்று அற்புதமடைந்தார் இப்படியிருக்குங்காலத்தில் அளவில்லாத மகிமைசெய்து லோகப்பிரசித்தமா யிருக்கிறவரும் ஏலேலசிங்கருடைய புத்திர நிற்பாக்கியத்தை நீக்கினவருமாகிய அழகானந்தரும் சில பெரியோர்களும் திருவள்ளுவரைப்பார்த்து கற்றற் கெளிதாய் இம்மையாதி மும்மைக்கு முதவியாய் லோகோபகாரமாய் உமது பெயரால் ஒருநூல் செய்யவேண்டுமென்று சொல்ல, நாயனார் வேதாகம ஸாரங்களைத்திரட்டி - அறம் - பொருள்- இன்பமென முப்பாலாக்கி, (௲௩௱௩௰) குறள் வெண்பாவாற் பாடியருளினர் பின்பு அழகானந்தர் முதலாயினோர் நாயனாரே, இதைக்கொண்டு சங்கத்தாரைச் செயிக்கலாம் போமென்ன, அப்போதே நாயனார் புறப்பட்டுத் தமது மனைவியை இல்லின்க ணிறுத்தித் தாம் வழிக்கொண்டு நடந்து இடைக்காடர் வசிக்கிற இடைக்கழி நாட்டை அணுகச்சேர்கையில், ஔவை நேர்பட - அவளோடும் இடைக்காடரைக்கண்டு தாஞ்செல்லும் வகையைச்சொல்ல, இடைக்காடரும் நாயனாரைநோக்கி இடையாலுங் கடையாலு மழியக்கடவதென்று ஸ்வாமி தம்மை நிராகரித்த நக்கீரராதி சங்கத்தாரைச் சபித்திருக்கிறார் —

ஆதலால் என்றும் மும்மாறு மழிவுபடப்போகிறதாகையால் நாமும் வருகிறோம் வாருமென்று இடைக்காடரும் ஔவையுங் கூடவரப்பெற்று மதுரையை யடைந்து சொக்கலிங்க ஸ்வாமியினுடைய ஆலயத்தைப் பிரதட்சணம்பண்ணி, ஸ்வாமியையும் அம்மனையும் தரிசனஞ்செய்து, ஸ்வாமி சந்நிதானத்தில் பாண்டிய ராஜா மந்திரி பிரதானிகள் மற்றச்சனங்கள் ஔவை இடைக்காடர் முதலான பெரியோர்களிருந்து கேட்கும்படி தாமருளிச்செய்த திருக்குறள் முப்பாலையும் சங்கத்தார்நெஞ்சிற் றிகிலேறவும், ஏனையர்நெஞ்சிற் களிப்பேறவும், அரங்கேற்றிமுடித்தனர் — அதனைக்கேட்டோர்கள் யாவரும் மிகுந்த சந்தோஷமடைந்து ஆனந்தமாகி, நாயனாரைப்புகழ்ந்து துதித்தனர்

பின்பு நாயனார் இடைக்காடரும் ஔவையும் மற்றவர்களுஞ் சூழ்ந்துவர பொற்றாமரைத் தீர்த்தத்தின்கணுள்ள சங்கப்பலகையின்கண் தமிழ்க்கரசராக வீற்றிருக்கின்றவர்களும் தவத்திலும் ஞானத்திலுஞ் செந்தமிழ்வாக்கிலும் அமைந்த பெரியோராகிய திருவாதவூரரென்னும் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருக்கோவையார் நானூற்றுக்கும் நூற்றுக்குற்றங் கூறினவர்களும், சொக்கலிங்க ஸ்வாமி தமதன்பனாகிய தருமியென்னும் பிராமணனுக்குப் பொற்கிழி கொடுத்தற்பொருட்டு அருளிச்செய்த கொங்குதேரென்னும் பாடலுக்குக் குற்றங்கூறச் சோமசுந்தரனே வித்வானாயெழுந்தருளிவர, நெற்றிக்கண்காட்டினுங் குற்றங் குற்றமே யென்று கூறினவர்களும், மற்றப் புலவர்கள் பாடிய பாடலையெல்லாங் கொள்ளையிட்டு, அகஸ்தியனையும் வெற்றிகொள்ளத்தக்க விலக்கண விலக்கிய வாராய்ச்சி யுள்ளவர்களுமாகிய நக்கீரராதிப் புலவர்களுடைய தைரியமும் தருக்கும் புத்தியுங் கலங்கிச் சோர்வடையும்படி ஆட்டுக்கூட்டத்தில் புலிபுகுந்தாற்போலவும், அராக்கூட்டத்தில் கருடனடைந்தாற்போலவும், யானைக்கூட்டத்தில் சிங்கவேறு சென்றாற்போலவும், மூங்கில்வனத்திற் றீப்பற்றியதுபோலவும், அவர்களிடத்திற்சென்று அவர்கள் தம்மை வினவின அசதிவினாவிற் கெல்லாஞ் செந்தமிழ்ப்பாவா லுத்தரங்கொடுத்தார்

பின்பு சங்கத்தார் நாயனாரைநோக்கி வள்ளுவரே, நீபாடிய குறளை நாங்க ளொப்புக்கொள்ளுவதற்கு ஐயமொன் றுளது அஃதியாதெனில், நாங்களிருக்கு மிந்தப்பலகைதெள்ளிய செந்தமிழ் நூல்களுக்கன்றி இடங்கொடுக்குமாதலால் அது ஒப்புக்கொள்ளுமாகில் எங்களுக்கெல்லாஞ் சம்மதியென்று சொல்ல, அவ்வாறே நாயனார் தம்மால் அருளிச்செய்யப்பட்ட திருக்குறள் முறையை அச்சங்கப்பலகைமீது வைத்தார் - உடனே அப்பலகை தன்னிடத்திருந்த சங்கத்தார் யாவரும் பொற்றாமரையில் விழும்படி தெய்வத்தன்மை பொருந்திய திருக்குறட் புத்தகத்தி னளவாய்ச்சுருக்கி அதற்குமாத்திர மிடங்கொடுக்கக் கண்டவர்கள் யாவருங் களிகூர்ந்தனர் அவருட் சிலர் இது தெய்வீகமாகிய வேதமென்றுஞ் சிலர் அங்கங்களென்றுஞ் சிலர் ஞானநூலென்றுஞ் சிலர் ஆகமமென்றுஞ் சிலர் புராணங்களென்றுஞ் சிலர் வாலிபா மதனுகமமென்றுந் தத்தமக்குத் தோன்றியவாறே சொல்லித்துதித்தனர் — அன்றியும் அநேக விசேஷமான தெலுங்காதி சாஸ்திரங்களும் கிரந்தமுதலான பாஷைகளிலிருக்கின்ற பலநூல்களும், இத்திருக்குறளினது பாயிரத்தினோர் பாடலின்பொருளுக்கு மொவ்வாதென்றும் இதுவே வித்வான்களுடைய பாக்கியமென்றும் இந்தப்பயன் அநேகமாயிரம் அகஸ்தியர்கள் ஒருருவாகிவந்து பாடப்பட்டதோ வென்றும் பலவித விலக்கண விலக்கியங்கட்கும் இஃதங்கத்தை யொக்குமென்றும் விஷ்ணுவானவ ரிவ்வுலகை இரண்டடியா லளந்தார் இதுவெல்லாருளத்தையு மீரடியாலளந்ததென்றும் இதுசட்சமயத்தார்க்கும் பொதுநூலென்றும் உட்சமயத்துக்கே யுரியநூலென்றும் இப்படிக் கலைவிமான்களும் அரசர்களும் மற்றவரும் கொண்டாடித் துதிக்கும்போது பொற்றாமரையில் விழுந்து தடுமாறி வருந்திய புலவர் நாற்பத்தொன்பதின்மரும் மிக்கக்கலங்கிக் கரையேறி நாயனாரையும் திருக்குறளையும் பணிந்து துதித்து நாற்பத்தொன்பதின்மரும் நாற்பத்தொன்பது பாடல் அருளிச் செய்தனர். அஃது திருவள்ளுவமாலையெனப் பெயர்பெறும்.

அச்சங்கத்தாரும் உக்கிரப்பெருவழுதியென்னும் பாண்டியன் முதலானவர்களும் அத்யந்தம் ஆனந்தமடைந்து வெகு

பூசித்தப்பண்ணி இந்நூலை அகஸ்தியரும் ஒப்புக்கொளளில் நல்ல தென்ன விடைபெற்றுப் பொதியமலைக்குப்போய் அகஸ்தியர் முதலானவர்களைக்கண்டு தாஞ்செய்தநூலைக் காண்பிக்க அவர்கள் அடைந்த சந்தோஷத்தையும் புகழ்ந்தபாடலையும் அனந்தனொருவனு சொல்லமுடியாது அவ்விடத்தில் கொங்கண சித்தர் வழிபட அவருக்கநுக்கிரகித்து நாயனார் அவர்களிடத்தில உத்தரவுபெற்றுத் தாம முன்பு போமபோது வழியினேர்படாத ஸ்தலங்களையெல்லாந்தரிசனமபண்ணிக்கொண்டு திருமயிலைக்குச சமீபமாக வருவதை அப்பதியாரும ஏலேலசிங்கருங்கேளவிப்பட்டு எதிர்கொண்டுபோய் அழைத்துவந்தார்கள் அவருமவந்து தமதில்லறத்தில் வாசுகியோதிதோடு மிருந்தார்

இப்படி இருக்கையில் ஒருபெரியவர் அவரில்லிடஙகட்சென்று ஸ்வாமீ இல்லறம பெரிதோ துறவறம் பெரிதோ அடியேனுக்குநுக்கிரகிக்க வேண்டுமென்று பலநாள்பணிசெய்து காத்திருக்க நாயனார் அவருக்குததர மொன்றுஞ் சொல்லாமல அவரோ அறிந்துபோமபடி ஒருநாள் தமது வாசுகியென்னும மனையாள கிணற்றில ஜலந்தூக்கிக்கொண்டிருக்கையில அழைக்க அந்தமமாள பாதிகிணற்றளவினில தூக்கினகுடத்தை அப்படியே நிறுத்திவிட்டு வந்ததையும் மற்றொருநாள் அந்தமமாள் நாயனாருக்குப் பழையது பரிமாறி நிறகையில் நாயனாரெனககிச்சாதஞ் சுடுகின்றதென - அந்தமமாள் சீக்கிரம் விசிறி கொண்டு விசிறியதையும மற்றொருநாள் நலலமத்தியானத்தில்சிறிது மிருளானகாலத்தில தாம நெய்யும்போது கையிலிருந்த குழல தவறி விழுந்ததை யெடுக்க மனையாளை நோக்கித் தீபங கொண்டுவாவெனக் கொண்டுவந்ததையும் - வந்திருந்தவர்கண்டு இப்படிப்பட்ட மனையாள்வாய்க்கில இல்லறமே பெரிதென்றும - இல்லையேல துறவறமே பெரிதென்று மெணணிக கொணடு ஒன்றுங்கேளாமற போய்விட்டார்

இப்படிநாயனாருந் திருமனைவியும் இல்லறநடத்திவருங் காலத்தில வாசுகியம்மாள் மோட்சமடையும்போது நாயனார்திருமுகத்தைப்பார்க்க- நாயனாரும் என்னென்றா என்னைமணஞ்செய்தவன்று தேவரீருக்கு யானன்னம பரிமாறும போது

ஒருசிறுபாத்திரத்திற் சலமும் ஊசியும் வையெனக் கட்டளை யிட்ட தின்னகாரணமெனத் தெரியவில்லையென்று வினவப் பணுஞ்செய்ய அதறகு நாயனூர் அன்னம் புறத்திற சிதறில எடு த்துப் பரிசுத்தஞ்செய்வதற் கென்றுசொல்ல - உடனே மோ ட்சமடைந்தனள்

அப்போது நாயனூர் சொல்லியது.

(வெண்பா)

அடிசிற்கினியாளே யன்புடையாளே *
படிசொறறவருத பாவா - யடிவருடிப் *
பின்றூங்கிமுன்னெழுந்த பேதையேபோதியோ*
வென்றூஙகுமென்க ணிரா *

என்றருளி அந்தஅம்மாள் திருமேனியைச் சமாதிபண்ணி ஞர்—நாயனூர் பின்னும் அநேகநாளிருந்து அநேக மகிமை களசெய்து ஏலேலசிங்கர் முதலாகிய சீஷர்களுககுப் பூரண அனுககிரகம்பணணிப் பின்பு ஏலேலசிஙகரையழைத்து நமக் குப் பரிபூரணதிசை நேரிட்டிருககின்றதால் நாம் பரிபூரண மானபின்பு நமதுதேகத்தைப் புரிகட்டி இழுதது ஊாககுப் புறத்தில புதாிறபோடடுவிடுமென் றனுக்கிரகஞ்செய்து நிஷ் டைகூடிப் பரிபூரணமானவர்போ லிருககககணடு ஏலேலசிங் கா பொறபெட்டியிலவைத் தடககம்பணண வெத்தனிததனை அறிந் தடனே நாயனூர் விழித்துப்பார்த்து, அப்பா நான் சொன்னசொல்லை கடவாதையென்று அனுககிரகித்து உட னே பரிபூரணமானூர் - ஏலேலசிங்கரும் நாயனூா கடடளைப் படி செய்யுமளவில், திருமேனியிற் சிதறிய தசைகளைக காக முதலானதுக எருந்திப் பொன்மயமானதைககணடு பெரிதா ன ஆச்சரியமடைந்தா அவர் திருமேனி இருந்தவிடத் தாலய மெடுப்பித்துப் பூசித்துவந்தாாகள்.

மேற்படி சரித்திரத்தி னுட்பட்ட பாட்டுகள் சொக்கநாதர் தருமியென்னும் பிராமணனுககு அருளிச்செய்த
(திருமுகப்பாசுரம்)

அகவல்.

கொங்குதேர்வாழ்க்கையஞ்சிறைத்தும்பி *
காமஞ்செப்பாதுகண்டதுமொழிமோ *
பயிலியதுகெழீஇய்நட்பின் *
மயிலியற்செறியெயிற்றரிவைகூந்தலி *
னறியவுமுளவோநீயறியும்பூவே *

சொக்கநாதர் - நக்கீரரைப்பார்த்துச் சொல்லியது.

(வெண்பா)

அங்கங்குலைய வரிவாளினெய்பூசிப் *
பங்கம்படவிரண்டு கால்பரப்பிச்-சங்கதனைக்
கீர்கீரெனவறுக்குங் கீரனோவென்கவியை *
யாராயுமுள்ளத் தவன் *

சொக்கநாதரைப்பார்த்து-நக்கீரர் சொல்லியது

(வெண்பா)

சங்கறுப்பதெங்கள்குலஞ் சங்கரனார்க்கேதுகுலம் *
பங்கமறச்சொன்னால் பழுதாமே - சங்கை *
யரிந்துண்டுவாழ்வோ மரனேநின்போல *
விரந்துண்டுவாழ்வ திலை *

சங்கத்தாரை வெல்லவேண்டி ஔவைஞானக்குறியாற் கைசை கைகள்பண்ணி இவையென்னென்று கேட்கச் சங்கத்தார் சொல்லியது.

(வெண்பா)

இவ்வளவுகண்ணினு னிவ்வளவுசிற்றிடையா *
ளிவ்வளவுபோன்ற விளமுலையா - ளிவ்வளவாய்க் *
காமத்தலைவனையுங் காணாதுகன்றினு *
ணாமத்தைகாட்டுகுறி நன்கு *

இஃது—தகுதியான உத்தரவன்றென்று அக்குறிகளுக்கு ஔவை சொல்லியது.

(வெண்பா)

ஐயமிடுமி னறநெறியைக்கைப்பிடிமி *
னிவ்வளவேனும்மனத்தை யிட்டுண்மின் - தெய்வ

மொருவனேயென்ன வுணரவல்லீரோ *
வருவினைகளோந்து மறும் *

இப்படியென்று ஔவைசொல்லச் சஙகத்தார் நாணமுற்று இவனை வெலலப்படாதென்று திருவள்ளுவனைப் பார்த்து நீ யெந்தவூ ரென்றதற்கு அவர் சொல்லியது

(வெண்பா)

எந்தவூ ரென்றீ ரிருந்தவூர் நீர்கேளீ *
ரந்தவூ ரெய்தி யறியீரோ - வந்தவூர் *
முப்பாழும்பாழாய் முடிவிலொரு சூனியமா *
யப்பாழும்பாழா யறும் *

என்றிதுமுதலான ஞானார்த்தமான செய்யுட்களா லவர் வினவியவைகளுக் கெல்லாம் உத்தரவு சொல்ல, இவரையும் வெலவ தரிதென்று இடைக்காடருடனே பேச அவர் சொல்லியது

(வெண்பா)

ஆற்றஙகரையி னருகிருந்தமாமரத்திற் *
காக்கையிருந்து கம்கம்மெனக - காகைதனை *
யெய்யககோனில்லாம விச்சிச்செனவெய்தான் *
வையக்கோனார்தன் மகன் *

இதுபோன்ற அனேகஞ்செய்யுட்களை அவாகளா லெழுதப்படாமலும் கற்றுககொள்ளப்படாமலுஞ் சொலல நாணித் தோறபடைந்தாாகள்

திருவள்ளுவ நாயனார்

சரித்திரவரலாறு முற்றிற்று.

உ

சிவமயம்.

பாயஞாதுணை

திருக்குறளதிகாரஸ்வரூபஸூசகம்.

அறத்துப்பால்.

திருவள்ளுவமாலையுள்- எறிச்சலூர்மலாடனார்
அருளியஅறப்பால் அதிகாரத்தொகை

வெண்பா

பாயிரநான் கில்லற மிருபான் பன்மூன்றே ... *
தூய துறவறமொன் றூழாக - வாய ... . *
வறத்துப்பா னல்வகையா வாய்ந்துரைத்தா ரூலின் *
றிறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து . ...*

முதல் இயல்-பாயிரம்.

முதலாம் - அதிகாரம் - கடவுள் வாழ்த்து.

“கவி,, தான் வழிபடுகடவுளையாதல், எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக்கடவுளையாதல், வாழ்த்துதல். அவற்றுள் இவ்வாழ்த்து ஏற்புடைக்கடவுளையெனவறிக [என்னை,சத்துவ முதலிய குணங்களான் மூன்றாகிய வுறுதிப் பொருட்கு. அவற்றான் மூவராகியும், முதற்கடவுளோ டியைபுண்டாகலான் அம்மூன்றுபொருளையுங் கூறலுற்றார்க் கம்மூவரையும்வாழ்த்துதன்முறைமையாகலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும்பொதுப்படக் கூறினாரெனவுணர்க.]

௨-ஆம்-அதி- வான்சிறப்பு.

மழையினது சிறப்பு (அஃதாவது) கடவுளது ஆணையால் உலகமும், அதற்குறுதியாகிய அறம்பொருளின்பங்களும்,

டத்தற் கேதுவாகியது மழையாதலால—அதன் சிறப்பைச் சொல்லுதல.

௩-ஆம்- அதி- நீத்தார்பெருமை

முற்றத்துறந்த முநிவரது பெருமை அவ்வற முதலாகிய பொருள்களையுலகத்திற்குள்ளதா றறிவிப்பவரவராதலால்—இது வான்சிறப்பின் பின் வைக்கப்பட்டது.

௪-ஆம-அதி-அறன்வலியுறுத்தல்.

அம்முநிவரால றிவிக்கப்பட்டமூன்றுள் அறமானது-மற்றப்பொருளின்பங்களபோலாகாமல, இம்மை - மறுமை- வீடு-என்கிற மூன்றையுந்தருதலால், அவற்றினும் உறுதியுடைத்தெனபது சொலலுகலாட்— அதிகார முறைமையு மிகனுல் விளஙகும.

உ - வது, இலலறவியல்

இல்லறமாவது - இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லப்படுகிற வழியிலேநின்று அதற்குத்துணையாகிய கற்புடைடமனைவியோடு கூடிச்செய்யப்படுவதாம்—ஆதலின், அதனை முதலிலே சொலலத்தொடங்கினர்

முதல்-ஆட்-அதி இலவாழ்கை.

(அஃதாவது) மனையாளோடுகூடி வாழ்கயினது சிறப்பு. இவ்வாழ்க்கை நிலையானது அறஞ்செய்தற்குரிய இருவகைநிலைகளுளளே முதலாதலின—இது, அறனவலியுறுத்தலின்பின் வைக்கபபட்டது.

உ-ஆம- அதி-வாழ்க்கைத்துணைநலம்.

அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய மனையாளது நன்மை— இதனுலே அதிகாரமுறைமையும் விளங்கும்.

௩ ஆம- அதி- புதல்வரைப்பெறுதல்.

முநிவாகடன் கேள்வியாலும், தேவாகடன் வேள்வியாலும் தெனபுலத்தார்கடன் புதல்வரைப்பெறுதலாலு மல்லது செலுத்தகூடாமையால் - அக்கடன்செலுத்தற்பொருட்டு நல்ல மகவைப் பெறுதல— அதிகார முறைமை [illegible] முன் பெறப்பட்டது.

௪-ஆம்-அதி-அன்புடைமை.

அம்மனைவி புதல்வர் முதலியோர் சம்பந்த முடையவரிடத்து ஆசையுடையவனாயிருக்கை.—அதிகாரமுறைமையு மிதனு லிளங்கும். [இல்லறத்தினிது நடத்தலும், பிறவுயிர்களின்மேல் அருள்பிறத்தலும், அன்பின் பயனாதலால் இது வேண்டப்பட்டது.]

௫-ஆம்- அதி- விருந்தோம்பல்.

விருந்தினரையுபசரித்தல் - தென்புலத்தார் - தெய்வம் - விருந்தினர் - சுற்றத்தார் - தான் - என்கிற ஐவகையோரை - உபசரித்தல்களிலே முன்னவையிரண்டும் கண்ணாற் காணப்படாது அவரை நினைத்து செயப்படுவனவாதலாலும் - பின்னவையிரண்டும் - பிறர்களுக்குக்கொடுத்த லல்லாமையாலும் - நடுநின்ற விருந்தோம்பல் சிறப்பையுடையதாகி - அவ்வில்லங்களுக்கு முதலாயிற்று வேறுபாடில்லாத அன்பையுடைய கணவனும் மனையாளுங்கூடியல்லது - செய்யகூடாமையால் இது அன்புடைமையின் பின்வைககப்பட்டது.

௬-ஆம்-அதி- இனியவைகூறல்.

மனதினுள்ள மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிற - இனிய சொல்லுகளைச்சொல்லுதல்.—இதுவும் - விருந்தோம்புவார்க்கு அவசியம் வேண்டுவதாகலின் அதன்பின்வைக்கப்பட்டது

௭-ஆம்- அதி- செய்நன்றியறிதல்.

தனக்குப் பிறர்செய்த நன்றியைமறவாமை. இனியசொற்களைச்சொல்லி இல்லறத்தின் வழுவாதவர்க்கு - நன்றிமறத்தல் தீராக்குற்றமாதலின், இதனை நீக்குதற்பொருட்டு அதன்பின் வைக்கப்பட்டது

௮-ஆம்-அதி-நடுவுநிலைமை.

பகைவர் - அயலோர் - நட்பினர்-இம்மூவகையோரிடத்தும் அறத்தின் வழுவாமல் ஒப்பநிற்கு நிலைமை. இது- நன்றி செய்தவரிடத்து அந்நன்றியை நினைத்தவிடத்தே கெடுமன்றே அவ்விடத்தும் கெடலாகாதென்றற்கு—இது செய்நன்றியறிதலின் பின்வைக்கப்பட்டது.

௯-ஆம்-அதி- அடக்கமுடைமை.

காயமும் - வாக்கும் - மனமும் - தீயவழியிலேசெல்லாமல் அடங்குத லுடையனாயிருத்தல்.—இது பிறர்குற்றம்போலக்க

னுற்றங்காணும் நடுவுநிலைமையுடையவனுக்கு உரித்தாதலால் அந்நடுவுநிலைமையின் பின்வைக்கப்பட்டது.

௰ ஆம்-அதி- ஒழுக்கமுடைமை

தங்கள் - தங்கள் - வருணாசிரமங்களுக்குச் சொல்லப்பட்ட ஆசாரத்தை யுடையவனாயிருக்கை. இது காயமுதலானவையடங்கினவாகவல்லது முடியாதாகலின் — அதன்பின்வைக்கப்பட்

௰௧-ஆம்- அதி- பிறனில்விழையாமை

காமமயக்கத்தாற் - பிறர்மனையாளை விரும்பாமை — இது- ஒழுக்கமுடையவரிடத்தே யுண்டாகுவதாகலின அதன்பின் வைகப்பட்டது

௰௨-ஆம்- அதி- பொறையுடைமை.

காரணம்பற்றியாவது - அறியாமையாலாவது - தமமிடத் திற்குத்தீங்குசெய்தவிடத்துத் தாமுமதனையவனிடத்திற் செய்யாது பொறுத்தலுடையராதல் — இதுபிறனில விழையாமைபோல அவசியம்வேண்டுவதாதலின் - அதன்பின் வைக்கபபட்டது

௰௩-ஆம்- அதி- அழுக்காறாமை

பிறர்செலவ முதலியவை கண்டவிடத்துப் பொறாமைப்படாமை—இப்பொறாமையும்பொறாமைகெதிரியதாதலின் இதனைவிலக்குதற இது பொறையுடைமைபின் பின்வைக்கப்பட்டது.

௰௪-ஆம்- அதி - வெஃகாமை.

பிறர்பொருளை வெளவுதற்கு நினையாமை.—பிறருடைமை கண்ட விடத்துப்பொறாமைப்படுதலேயன்றி அதனைத் தான் வெளவுதற்கு நினைத்தலுங்குற்றமென்றற் கிது அதன்பின்வைகப்பட்டது.

௰௫-ஆம்- அதி- புறங்கூறாமை.

பிறனைக்காணுவிடத்து இகழ்ந்து பேசாமை. —வாக்கின் குற்றம் - மனக்குற்றத்தின் வழியாக[illegible]றலால் இது- அழுக்காறாமை வெஃகாமைகளின் பின்வைக்கப்பட்டது.

௰௬ ஆம்-அதி- பயனிலசொல்லாமை

தமக்காவது- பிறர்க்காவது-அறம்பொருளின்பங்களிலொன்றை யேனுந்தராதசொற்களைச்சொல்லாமை பொய்-குறளை-கடுஞ்சொல் - பயனிலசொல் - என - வாக்கினிடத்தேயுண்டாட் நான்கினுள் - பொய்துறந்தோர்க்கல்லது பற்றறவிடக்கூடாமையால் - அதனையொழித் தில்வாழ்வாரால் விடக்கூடுமையாகிய மற்றைமூன்றினுள் - கடுஞ்சொல் இனியவைகூறலாலும் - குறளைபுறங்கூறாமையாலும், விலக்கிநின்றபயனில சொல்லை இதனால் - விலக்குகின்றமையால் — இதுபுறங்கூறாமையின் பின்வைக்கப்பட்டது.

௰௭-ஆம்-அதி-தீவினையச்சம்

பாவங்களாயுள்ளவைகளைச் செய்தற்கு அஞ்சுதல் இதனால் - காயத்தினிடத்தே விளைகின்ற பாவங்களையெல்லாந் தொகுத்து விலக்குகின்றமையால — இதுபயனிலசொல்லாமையின் - பின்வைக்கப்பட்டது

௰௮-ஆம-அதி-ஒப்புரவறிதல்.

உலகநடையை யறிந்துசெய்தல் (மனோவாக்குக் - காயங்களால் செய்யத்தகாதவைமுன்சொல்லினார்) இனிசெய்யத்தகுமவைகளில - முன்சொல்லப்பட்டவற்றுள - அடங்காதவைகளைச்சொல்லுகின்றார் - ஆகையால் - இது - தீவினையச்சத்தின் பின்வைக்கப்பட்டது.

௰௯ ஆம்- அதி-ஈகை.

வறியவராய் இரந்தவர்க்கு இல்லையென்னாமல் - கொடுத்தல் இது - மறுமையைக்குறித்ததாகலின் — இம்மையைக்குறித்த- ஒப்புரவறிதலின் - பின்வைக்கபபட்டது.

௨௰- ஆம்-அதி-புகழ்

இல்வாழ்க்கை முதலீகை யீறாகச்சொலலப்பட்ட - இல்ல

றத்தில் தவறாதவர்க்கு இம்மைப்பயனாகி இவ்வுலகத்திலேசெய்தபடியே நிற்பதாகிய - கீர்த்தி — இது - பெரும்பாலும் - ஈகை பற்றிவருதலால் அதன்பின்வைக்கப்பட்டது.

௩-ஆவது துறவறவியல்.

துறவறமாவது - முன்சொல்லப்பட்ட இல்லறத்தின்வழுவாது நடத்து அறிவுடையராய்ப்பிறப்பினையஞ்சி முத்திபெறுதற் பொருட்டுத்துறந்தவர்க்குரித்தாகிய அறமாம் (விரதம்) அது - விரதம் - ஞானம் - எனவிருவகைப்படும் - விரதமாவது வினைமாசுதீர்ந்து அந்தக்கரணங்கள் பரிசுத்தமாதற்பொருட்டு - இன்ன அறங்களைச்செய்வேனென்றும் - இன்னபாவங்களை விடுவேனென்றும் - தமதுவல்லமைக்கேற்க - அளவுசெய்துகொண்டு - துறந்தோராலே - காப்பாற்றப்படுவது - அவ்விரதங்கள் - அளவிலவாயினும், அவைபலவற்றையுந்தமமுளடக்கிநிற்குஞ் சிறப்புடையசிலவற்றையிங்கே சொல்லத்தொடங்கிமுதலிலே - அருளுடைமையைச் சொல்லுகின்றார்.

முதல்-ஆம் அதி - அருளுடைமை

தொடர்பு - பற்றுமல்இயல்பாக - எல்லாவுயிர்களின்மேலுஞ்செல்வதாகிய கருணையையுடையராதல் - இல்லறத்துக்கு அன்புடைமைபோல — இது - துறவறத்துக்குச்-சிறத்தலால்-முன்வைக்கப்பட்டது.

உ-ஆம்-அதி-புலான்மறுத்தல்.

ஊனுண்ணுதலை யொழித்தல் - இது - கொலைப்பாவத்தைப்பின் உண்டாக்கலால் அதற்குக்காரணமாதலையும், முன்னுமைச்செல் வருதலால் அதன்காரியமாதலையும், ஒருசேரஉடைத்தாகிய ஊனுண்ணுதல் அருளுடையார்களையவதன்றாகலின் அதனைவிலக்குதற்கு - அருளுடைமையின் பின்வைக்கப்பட்டது

௩-ஆம்-அதி-தவம்.

மனம் - பொறிவழிசெல்லாது நிற்றற்குவிரதங்களினாலே. உண்டிசுருங்குதல முதலானசெயல்களை மேற்கொண்டு அவை

களாற்றம்முயிர்க்குறுந் துன்பங்களைப் பொறுத்தலும், பிற கொலைக்காப்பாற்றல் - புலாலைமறுத் துயிர்கண்மேலருளுடையாரந்த விடத்தே செய்யப்படுவதாகலின் - இதன்பின்வைக்கப்பட்டது

௪-ஆம்-அதி-கூடாவொழுக்கம்

(தாம்) விட்டகாமவின்பத்தை உறுதியில்லாமையாலே பின்னும விரும்புமவழி தோன்ற அவ்வழியேகொண்டுநின்று, தவத்தோடு பொருந்தாதாகிய தீயவொழுக்கம் — ஆதலினிது தவத்தின் - பின்வைக்கப்பட்டது

௫-ஆம்-அதி கள்ளாமை

பிறருடைமையாயுள்ளவைகளில் யாதொருபொருளையும் அவரைவஞ்சித்துக்கொள்ள நினையாமை நினைத்தலுஞ்செய்தற்குச் சமானமாதலால் கள்ளாமையெனலாயிற்று இல்லறத்தாருக்குந் தமமனோரோடுவிளையாட்டாக வாவதுசெய்யக்கூடும் - துறவறத்தாருக்கு நினைத்தவிடத்தும் பெரியகுற்றமாதலின் புறத்திலே போகாமல்அடங்கி ஓரிடத்தையுற்று உயிர்நோக்க வேண்டியதாகிய அவசியமனம அதைவிட்டுப்புறத்திலேபோய்ப் பலவிடத்தையுற்று உடம்பின்பொருட்டுப்பொருளைநோக்குதலல்லாமலும், அப்பொருளையும் வஞ்சித்துக்கொள்ள நினைத்தல அவருக்குப்பெரியகுற்றமாதலறிக இவ்விதமவாய்மைமுதற்கொல்லாமை முடிவாகிய நான்கதிகாரத்திற்கும ஒக்கும் — இது பொருளைப்பற்றி யுண்டாங் குற்றத்தை விலக்குவதாகலின் காமமபற்றியுண்டாங்கூடாவொழுக்கத்தின் பின்வைக்கப்பட்டது.

௬-ஆம்-அதி-வாய்மை.

மெய்யினது தன்மை-பெரும்பாலும், காமமும் பொருளும் பற்றி யுண்டாவதாகிய பொய்ம்மையை விலக்கலால் — இது- கூடாவொழுக்கங்கள்ளாமைகளின் பின்வைக்கப்பட்டது.

௭-ஆம்-அதி-வெகுளாமை.

கோபஞ்செய்தற்குக் காரணமாகியகுற்றம் ஒருவனிடத்தே

யுண்டாகிய விடத்தும், கோபஞ்செய்யாமை. — இது பொறுமைபற்றி யுண்டாங்கோபத்தை விலக்கலால் வாய்மையின்பின் வைக்கப்பட்டது

௮ ஆம்-அதி-இன்னாசெய்யாமை.

தனக்கொருபயனைக்குறித்தாவது வைரம்பற்றியாவது ஒருயிர்க்குந் துன்பந்தருமவைகளைச்செய்யாமை அவைகளைச்செய்தல்வெகுளியொழியவும் உண்டாமென்பதையறிவித்தற்கு— இதுவெகுளாமையின் பின்வைக்கப்பட்டது.

௯-ஆம்-அதி-கொல்லாமை

ஐயறிவுடையவைமுதல ஓரறிவுடையவை கடையாகிய உயிர்களை சோர்வினாலுங்கொல்லுதல் செய்யாமை இதுமுன் சொல்லப்பட்ட அறங்களெல்லாவற்றினுஞ்சிறப்புடைத்தாய்ச் சொல்லாது ஒழிந்தமற்றையவறங்களையெல்லாம் அடக்கி நிற்கையால் —இறுதியில்வைக்கப்பட்டது

ஞானம்.

ஞானமாவது அவ்விரதங்களினாலே கரணங்கள் பரிசுத்தமானவிடத்து உண்டாவதும், மோட்சத்தைத்தருவதுமாம், ஆகிய அறிவு-அது நிலையாமைமுதல் அவாவறுத்தல் இறுதியாக நான்கதிகாரத்துளடக்கிச்சொல்லப்படுகின்றது

௰ ஆம்-அதி-நிலையாமை.

தோற்றமுடையவையெல்லாம் நிலைபெறாததன்மை. இது அறிந்தவிடத்தே யல்லாமற்பொருள்களிலே பற்றுவிடாதாகலின் முன்வைக்கப்பட்டது

௰௧-ஆம்-அதி-துறவு

புறமாகியசெல்வத்திலும், அகமாகிய உடம்பிலும், உண்டாகியபற்றை அவைகளது நிலையாமையைப்பார்த்துவிடுதல், அதிகாரம்வைத்தமுறைமையும் இதனால்விளங்கும்.

௩௬-ஆம்-அதி-மெய்யுணர்தல்.

பிப்புவீடுகளையும், அவற்றின் காரணங்களையும், ‡ விபரீத * சந்தேகங்களால் அல்லாமல் உண்மையால் அறிதல் — இதை வடநூலார் தத்துவஞான மென்பர்.— இதுவும் பற்றற்றான் பற்றினைப் பற்றியவிடத்தே யுண்டாவதாகையால் அக்காரண வொற்றுமைபற்றி துறவின்பின் வைக்கப்பட்டது.

‡ விபரீதஞானமாவது ஒன்றை மற்றொன்றாக வறிதல்- அது கயிற்றைப் பாம்பென்றறிதல் போல்வன.

* சந்தேகஞானமாவது ஒன்றை இதுவோ அதுவோ வெனக்கொள்ளுதல்·

அது கயிறோ பாம்போவெனத் துணியாது நிற்பது போல்வன·

௩௭-ஆம்-அதி-அவாவறுத்தல்.

முன்னும் பின்னும் வினைத்தொடர்பறுத்தார்க்குநடுநின்ற வுடம்பும் அதுகொண்டவினைப்பயன்களுமே நின்றமையால் அதுபற்றி ஒரோவிடத்துத்துறக்கப்பட்டபுலன்களின் மேலே பழைய பழக்கவசத்தினாலே நினைவுசெல்லுமன்றே அந்நினைவும் பிறவிக்குவித்தாமாகலால அதனை இடைவிடாதமெய்ப்பொருளுணர்வால் அறுத்தல்— அதிகாரமுறைமையுமிதனால் விளங்கும்.

௩௮-ஆம்-அதி-இயல்-ஊழ்

நல்வினைப்பயனாகிய இன்பமும், தீவினைப்பயனாகிய துன்பமும், அவ்வினைகளைச்செய்தவனையே சென்றடைவதற்கேதுவாகியநியதி. (ஊழ்-பால்-முறை - உண்மை-தெய்வம் நியதி- விதி - என்பவையொருபொருட்சொற்கள்) இதுபொருள் இன்பங்கள் இரண்டற்கும்பொதுவாய்ஒன்றனுள்வைக்கப்படாமையாலும், சொல்லப்பட்டஅறத்தோடு சம்பந்த முடைமையாலும், அதனிறுதியில்சொல்லப்பட்டது

ஆக-அதிகாரம்-௩௮.

அறத்துப்பால்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

நாயனார் துணை

இரண்டாவது

பொருட்பால்.

திருவள்ளுவமாலையுள் - தொடித்தலைவிழுத்தண்டினார்
இயற்றிய - இயற்றொகை

வெண்பா

அறநான்கறிபொருளேழொன்றுகாமத் *
திறமூன்றெனப்பகுதிசெய்து-பெறலரிய .. *
நாலுமொழிந்தபெருநாவலரோதஞ்சுணர்வார் . *
போலுமொழிந்தபொருள் ... ... *

திருவள்ளுவமாலையுள்போககியார்அருளியபொருட்பால்
அதிகாரத்தொகை.

வெண்பா

அரசியலையைந்-தமைச்சியலீரைந் . . *
தருவலரணிரண்டொன்றொண்கூ-ழிருவிய *
திணைபடைநட்புப்பதினேழ்குடிபதின்மூன் *
றெண்பொருளேழாமிவை .. .. *

————*

முதலாவது - அரசியல்.

முதல் ஆம்-அதி- இறைமாட்சி.

(அஃதாவது) அரசனது நற்குண நற்செய்கைகள்

உ-ஆம்-அதி-கல்வி.

(அவ்வரசன்) கற்றற்குரிய நூல்களைக்கற்றல். அவையாவன- அறநூல் - நீதிநூல் - (தேர்-யானை-குதிரை-படைக்கலம்) என்னப்பட்ட இவற்றினூல்களும்.

௩-ஆம்-அதி-கல்லாமை.

கற்றலைச்செய்யாமையின்இழிவு. முற்கூறியகல்வியின் சிறப்புமுடிவுபெறுமைநோக்கி எதிர்மறையாலும், கூறலாகிய கல்லாமையை அதன்பின்வைக்கப்பட்டது

௪-ஆம்-அதி-கேள்வி

கேட்கத்தகுநூலின்பொருள்களைக் கற்றறிந்தவர் சொல்லக் கேட்குதல் கற்றவிடத்தே அதனாலாகிய அறிவை யுறுதிப்படுத்தலாலும், கல்லாதவிடத்தும் அதனையுண்டாக்கலாலும், இது கல்வி - கல்லாமைகளின் பின்வைக்கப்பட்டது.

௫-ஆம்-அதி-அறிவுடைமை

கலவி கேள்விகளினாலாகிய அறிவோடு உண்மையறிவுடையனாதல். அதிகாரமுறைமையும் இதனாலவிளங்கும்.

௬-ஆம-அதி-குற்றங்கடிதல்

காமம் - குரோதம் - உலோபம் - மானம் - உவகை - மதம் (என்னப்பட்ட ஆறுகுற்றங்களையும் அரசன்றன்னிடத்தேதோன்றாமல்கடிதல — இவைகளைக குற்றமென்றறிதலும் கடிதலும் அறிவுடையார்க்கல்லது மற்றையர்க்குக்கூடாமையால், ஈது அதன்பின் வைக்கப்பட்டது.

௭-ஆம்-அதி-பெரியாரைத்துணைக்கோடல

(அவ்வறுவகைக் குற்றங்களையுங்கடிந்த அரசனைத்தன்னைத்தீய வழியில்விலக்கி நல்வழியிற் செலுத்தும) (பேரறிவுடையவரைத்தனக்குத்துணையாக்கிக்கொள்ளுதல். அதிகாரமுறைமையும இதனால்விளங்கும். [பேரறிவுடையார் அரசாட்சிக்குக்குற்றம்வாராமற் காத்தற்குரிய- அமைச்சர் -புரோகிதர]

௮ ஆம-அதி-சிற்றினஞ்சேராமை

சிறியவினத்தைப்பொருந்தாமை சிற்றினமானது - நல்லதிலேநன்மையுந் தீயதில தீமையுமில்லையென்பாரும், விடரும தூர்த்தரும முதலானகூட்டம். அறிவை வேறுபடுத்தி இருமையுங்கெடுக்குமியல்பினதாகிய இதனைப்பொருந்தினால், பெரியாரைத்துணைக்கோடல், பயனிலலையென்பதறிவித்தற்கு இது அதன்பின் வைக்கப்பட்டது.

௪௭-ஆம்-அதி- தெரிந்துசெயல்வகை.

அரசன் தான்செய்யுந்தொழில்களை ஆராய்ந்துசெய்யுந்திறம். அச்செயல் - பெரியோரைத்துணைகோடல் - பயனுடைத்தாயவிடத்து அவருடன் செய்யப்படுவதாகலின்— இதுசிற்றினஞ்சேராமையின் பின்வைக்கப்பட்டது.

௪௮-ஆம்-அதி-வலியறிதல்.

(அவ்வுபாயங்களுள் - தண்டஞ்செயக்குறித்த அரசனானவன்) வினைவலி - தன்வலி - மாற்றான்வலி - துணைவலி-என்னும் நால்வகை வலிவைகளையும், அளந்துஅறிதல் அதிகாரமுறைமையும் இதனால்விளங்கும்.

௪௯-ஆம்-அதி-காலமறிதல்

வலிமையினாலே மிகுதியுடையவனாய்ப்பகைவன்மேற்போர்க்குச்செல்லுமரசன்ஏற்றகாலத்தினையறிதல். அதிகாரமுறைமையும் இதனால்விளங்கும்.

௫௰-ஆம்-அதி-இடனறிதல்.

வலியுங்காலமுமறிந்து பகைமேற்செல்வோன்தான்வெல்லுதற்கேற்ற நிலத்தினையறிதல். அதிகாரமுறைமையும் இதனால் விளங்கும்.

௫௧-ஆம்-அதி-தெரிந்துதெளிதல்.

(மந்திரிமுதலானவர்களைப் - பிறப்பு - குணம் - அறிவு -என்னப்படுகின்றவைகளையும், செய்கையையும், காட்சி-கருத்து-ஆகமம் - என்கின்றபிரமாணங்களினாலே ஆராய்ந்து தெளிதல் வலிமுதலாகிய மூன்றையுமறிந்து பகைமேற்செல்வோனுக்குச்சேனைகருத்தோடு தொழில்செய்தற்கும, எதிரிடாமைக்கும் - இதுதெளிவுவேண்டுதலால் அவைகளின்பின் வைக்கப்பட்டது.

(௫௨-ஆம்-அதி-தெரிந்துவினையாடல்)

அத்தெளியப்பட்டவரை அவர்செய்யவல்ல தொழில்களை யறிந்து அவைகளிலேஆளுந்திறம் அதிகாரமுறைமையுமிதனுல்விளங்கும்

(௫௩-ஆம்-அதி-சுற்றந்தழால்)

அரசன்-தனதுசுற்றத்தாரைத்தன்னை விட்டுநீங்காதிருக்கும் படித்தழுவுதல [தொழில்செய்வாரைச்சொல்லி மற்றுஞ்சுற்றத்தாரைச்சொல்லுதலால் இதுதெரிந்துவினையாடலின் பின்வைக்கப்பட்டது

(௫௪-ஆம்-அதி-பொச்சாவாமை)

அழகு செலவம்-ஆற்றல்- முதலானவைகளால் மகிழ்ந்து தன்னைக்காத்துக்கொள்ளுதலிலும், பகையழித்தல்முதலாகியகாரியங்களிலும், மறதிசெய்யாமை முன்சொல்லப்பட்ட சுற்றத்தாரால்பயனுள்ளது இம்மறதியில்லாவிடத்தாதலால் இது சுற்றந்தழாலின்பின்வைக்கப்பட்டது

(௫௫ ஆம்-அதி- செங்கோன்மை)

அரசனாற்செய்யப்படுமுறையினதுதன்மை அந்தமுறையானது ஒருபக்கத்திலேசாயாமல செவ்வையாகிய கோல்போலுதலாலே செங்கோலெனப்பட்டது அது மறதியில்லாதஅரசனாற் செய்யத்தக்கதாதலா லிது பொச்சாவாமையின் பின்வைக்கப்பட்டது

(௫௬ ஆம்-அதி-கொடுங்கோன்மை)

அம்முறையினது கோணுதற்றன்மை இது செங்கோன்மைக்குமாறுதலால் அதன்பின்வைக்கப்பட்டது

(௫௭ ஆம்-அதி வெருவந்தசெய்யாமை)

குடிகள் அஞ்சுவதும், பகுதியென்று சொல்லப்படுகிற மந்திரிமுதலாகிய அங்கங்கள் அஞ்சுவதும், தான்அஞ்சுவதும் ஆகிய தொழில்களைச்செய்யாமை, அவைசெய்தல் கொடுங்கோன்மையிலேசேர்தலால் அதன்பின்வைக்கப்பட்டது

(௫௮-ஆம்-அதி-கண்ணோட்டம்)

தன்னோடுபழகினவரைக்கண்டால், அவராலேசொல்லப்பட்டதை மறுக்கமாட்டாமை இது அவர்மேலே கண்ஓடியவிடத்து

து நிகழ்வதாகலால் அப்பெயர்பெற்றது [தாக்ஷிண்ணியம் முகம்பார்த்தல் என்றுசொல்லப்பட்டது]

(உக-ஆம்-அதி-ஒற்றாடல்)

பகைவர்-அயலோர் நட்பினர் என்னுமூன்று திறத்தாரிடத்தும் நிகழ்ந்தவையறிதற்கு ஒற்றரை ஆளுந்தன்மை முன்சொல்லப்பட்ட இலக்கணமுடைய அரசனுக்குத் தன்னாடுகாக்கும்போதும் பிறநாடுபிடிக்கும்போதும் வேண்டுமவைகளைச்சொல்லத் தொடங்கினாராதலால் அவ்விரண்டுகாரியங்களுக்கும் அவசியம்வேண்டுவதாகிய இது முன்வைக்கப்பட்டது

(உஉ-ஆம்-அதி ஊக்கமுடைமை)

மனமானது தொழில்செய்தலிலே எழுச்சியையுடைத்தாதல் ஒற்றரால் நடந்தவையறிந்து அவைகளுக்கேற்ற தொழில் செய்வோனுக்கு இது அவசியம்வேண்டுதலால் அதன்பின் வைக்கப்பட்டது

(உ௩-ஆம்-அதி மடியின்மை)

நினைக்கப்பட்டவைகளைச்செய்யும்போது சோம்புதல் இல்லாமை ஊக்கமுடையவருக்கு ஒரோவிடத்தே குணவசத்தாற் சோம்பல்வருதலைக்குறித்து இது அதன்பின்வைக்கப்பட்டது

(உச-ஆம்-அதி-ஆள்வினையுடைமை)

இடைவிடாதமெய்ம்முயற்சியையுடையனாதல் அது ஆளும்வினையெனக் காரியத்தாற் சொல்லப்பட்டது சோம்பலைக்கெடுத்தலும், தொழிலை முயற்சியில்லாமல் ஆளக்கூடாமையினாலே இது மடியின்மையின் பின்வைக்கப்பட்டது

(உரு-ஆம்-அதி இடுக்கணழியாமை)

தொழிலின்மேல்முயல்பவன் ஊழினாலாவது, பொருளில்லாமையினாலாவது, மெய்வருத்தத்தினாலாவது, தனக்குத் துன்பம் வந்தவிடத்து அதற்கு மனங்கலங்காமை. அதிகாரமுறைமையும் இதனால்விளங்கும்

இரண்டாவது—அங்கவியல்.

இது "இராசாங்கம்" அஃதாவது அமைச்சு- அரண்- கூழ் படை நட்பு- குடி ஆகிய (அரசருக்குரிய) அங்கம் (௬) அவையுள்

முதல்- அங்கம்- அமைச்சியல்

(க-ஆம்-அதி அமைச்சு)

அமைச்சனது தன்மை. அத்தன்மை அவன் குணங்களும், செய்கைகளும்

(உ-ஆம்-அதி-சொல்வன்மை)

தான் நினைத்த தொழின் முடியும் வழியால் வார்த்தை சொல்ல வல்லவனாதல் முன்னதிகாரத்திலே ஒருதலையாச் சொல்லுமென்றதையே சிறப்புப்பற்றி விரித்துச்சொல்லுதலால் அதனபின் வைக்கப்பட்டது

(௩-ஆம்-அதி-வினைத்தூய்மை)

செய்யப்படுந்தொழில்கள் பொருளைமாத்திரமல்லாமல் அறமும் புகழுந்தந்து நல்லவையாதல். சொல்லேயல்லாமற் செயலும் நன்றாகவேண்டுமென்கின்றமையால் ஈததன்பின் வைக்கப்பட்டது

(௪ ஆம்-அதி- வினைத்திட்பம்)

அப்பரிசுத்தமாகிய தொழிலை முடிப்பவனுக்குவேண்டுவதாகிய மனவலிமை அதிகாரமுறைமையுமிதனால்விளங்கும்

[௫-ஆம்-அதி வினைச்செயல்வகை)

அவ்வலிமையுடைய மந்திரியானவன் அத்தொழிலைச்செய்யுந்திறம் அதிகாரமுறைமையும் இதனால்விளங்கும்

(௬-ஆம்-அதி தூது)

பொருத்தல் பிரித்தல்களுக்கு வேற்றரசரிடத்துச்செல்லுவானது தன்மை அவ்விரண்டனையும், முன் செயல்வகையென்றமையால் ஈததன்பின் வைக்கப்பட்டது—[தான் வகுத்துச்சொல்வோன், சொல்லியது சொல்வோன், எனத் தூது இருவகைப்படும் அவருள் - முன்னோன் மந்திரியோடு சமானனுவானாதலாலும், பின்னோன் - அவனிலே காற்பங்கு குணங்குறைந்தோனாதலாலும்- இஃது அமைச்சியலுள் வைக்கப்பட்டது]

(எ-ஆம்-அதி- மன்னரைச்சேர்ந்தொழுகல்)

மந்திரியரசனைப்பொருந்திநடக்கும்விதம்—இது "வேந்தர்க்காம் பண்புடைமை" எனமுன்சொல்லப்பட்டமையால் அதின்பின் வைக்கப்பட்டது.

(அ-ஆம்-அதி குறிப்பறிதல்)

அரசர்நினைத்ததை அவர்சொல்லாமலறிதல்—இவைமன்னரைச்சேர்ந்து நடப்பவர்க்கு அவசியமானதாகலால் அதன்பின் வைக்கப்பட்டது

(கூ-ஆம்-அதி-அவையறிதல்)

அரசனோடிருந்த சபையியல்பையறிதல்—காரியஞ்சொல்லுங்கால் அவன் குறிப்பறிதலேயல்லாமல் இதுவும் வேண்டுதலால் அதன்பின் வைக்கப்பட்டது

(ய-ஆம்-அதி-அவையஞ்சாமை)

சொல்லுதற்குரிய சபையறிந்து சொல்லுங்கால் அதற்கு அஞ்சாமை—அதிகாரமுறைமையுமிதனால் விளங்கும்

—*—

இரண்டாம்- அங்கம் அரண் இயல்

(முதல்-ஆம்-அதி-நாடு)

அவ்வரசனாலும், மந்திரியராலும், கொண்டுசெலுத்தப்படுவதும் மற்றைய அரண்முதலிய அங்கங்களுக்கு அவசியமவேண்டுவதும் ஆகியது—அதிகாரமுறைமையுமிதனால்விளங்கும்

(உ-ஆம்-அதி-அரண்)

இனி (அந்நாட்டிற் குறைபாடடங்குமாயினும்) பகைவராற்றொல்லைவந்தவிடத்து அதற்கும் அரசனுக்குங் காப்பாதலாற் சிறப்புப்பற்றியே வேறோர் அங்கமாகச் சொல்லப்பட்டது—அதிகாரமுறைமையுமிதனால் விளங்கும்

மூன்றாம்-அங்கம்-கூழ்-இயல்

(க-ஆம்-அதி-பொருள்செயல்வகை)

பெரும்பாலும்-நாட்டாலும்-அரணாலும்-வளர்க்கவுங் காக்கவும் படுவதாகிய பொருள்சம்பாதித்தலின்விதம் (அதிகாரமுறைமையுமிதனால்விளங்கும்)

நான்காம்- அங்கம் படை இயல்

முதல்- ஆம் - அதிகாரம்- படைமாட்சி

சேனையினது தன்மை அதிகாரமுறைமையுமிதனால் விளங்கும [மூலப்படை - கூலிப்படை - நாட்டுப் படை - காட்டுப்படை - துணைப்படை - பகைப்படை - என்று அறுவகைப் படையுள்ளுஞ்சிறந்தது - மூலப்படை]

௨- ஆம்-அதி-படைச்செருக்கு

அச்சேனையினது மறமிகுதி மறமிகுதியென்பது வீரத்துசௌரிய பராக்கிரமம அதிகாரமுறைமையுமிதனால் விளங்கும

ஐந்தாம்-அங்கம்-நட்பு இயல்

முதல்- ஆம அதிகாரம்- நட்பு

சிநேகம் இது, இயற்கை- செயற்கை-என இருவகைப்படும் அவைகளில் இயற்கை நட்பு பிறப்புமுறையாலாகியது செயற்கை முறையாலாகியதும என விருவகைப்படும் அவைகளுள் முன்னையது சுற்றம் ஆதலால் சுற்றந்தழாலிலடங்கிற்று மற்றது பகையிடையிட்டதாகலால் துணைவலி யென்பதில் அடங்கிற்று (இனி இவ்வதிகாரம முன்செய்த உதவி பெற்று வருவதாகிய செயற்கை நட்பேயாதலால் அதன் சிறப்பு இதனாற் சொல்லப்பட்டது

௨-ஆம் அதி-நட்பாராய்தல்

முன்சொல்லப்பட்ட இலக்கணமுடையவரை ஆராய்ந்து தெரிந்தே சிநேகிக்கவேண்டுதலால், அவரை ஆராயுந்திறம் அதிகாரமுறைமையுமிதனால் விளங்கும

௩ ஆம்-அதி-பழைமை

விதிமுகநட்பு நட்பினரது பழைமை பாராட்டாது அவர்செய்தபிழைகளைப்பொறுத்தல் ஆராய்ந்து சிநேகிக்கப்பட்டாராயினும் பொறுக்கப்படுங் குற்றமுடையராதலாலும உளப்பவகையாலும நட்புகொள்ளப்பட்டவரிடத்துப் பிழையுளதாம் என்பதறிவித்தற்கு இது நட்பாராய்தலின் பின்வைக்கப்பட்டது

௪-ஆம்-அதி-தீநட்பு

தீகுணத்தாரோடு உண்டாகிய நட்பு பொறுக்கப்படாத குற்றமுடைமையால் விடத்தக்கதாகிய நட்பு நட்பாராய்தலின்

காரத்திற் சுருங்கச்சொல்லி அவ்வளவிலடங்காமையால் அதனை இருவகைப்படுத்தி இரண்டதிகாரத்தாலே சொல்லத்தொடங்கி முன்னே தீநட்புச்சொல்லுகின்றார்.

௫- ஆம்- அதி- கூடாநட்பு.

பகைமைபால உள்ளேகூடாதிருந் தேசமையங்கிடைக்குமளவுமபுறத்திலேகூடி நடப்பவர்நட்பு.

௬- ஆம்-அதி- பேதைமை

யாதொன்றுமஅறியாமை. [இனி அந்நட்பை எதிர்மறுத்துப் பகைமுகததாலே சொல்லத்தொடங்குகின்றார் அப்பகைதான் முழுவதும் விடலாகாதகுற்றமாகிய குரோதத்தாலும் காமத்தாலும்வருவதாம். அவைகளுள் குரோதத்தால்வருபவைஐந்ததிகாரத்தாலும், காமத்தால்வருபவைஐந்ததிகாரத்தாலும், சொல்லுவதற்கு அவ்விரண்டுக்கும் அடியாகிய மயக்கத்தை -பேதைமை - புல்லறிவாண்மை- என இருவகைப்படுத்தி, இரண்டதிகாரத்தாலே சொலலத்தொடங்கி முதலிலே - பேதைமை சொல்லுகின்றார்.]

ஆம்- அதி- புல்லறிவாண்மை.

புல்லியஅறிவை ஆளுதற்றன்மை அஃதாவதுதான்சிற்றறிவினனாயிருந்தே தன்னைப் பேரறிவுளனாகமதித்து உயர்ந்தோரால்சொல்லப்படும் உறுதிச்சொல்லைக் கொள்ளாமை.

௮- ஆம்-அதி- இகல்.

இருவர்தமமுள்ளே போர்செய்து வலிமை தொலைத்தற்கேதுவாகியமாறுபாடு பேதைமைபுல்லறிவாண்மைகளால் வருங்குரோதகாமங்களுள் அரசர்க்குக்குரோதம் அதிகமாயுள்ளதாகலால் அதனால் வருமவைகளைச் சொல்லத்தொடங்கி முதலிலே இகல சொலலுகின்றார்.

௯- ஆம்- அதி- பகைமாட்சி

அறிவில்லாமை முதலாகிய குற்றங்களுடைமையாக பகையைமாட்சிமைப் படுத்தல், அரசர்க்கெவ்வழியாலும் பகையில்லாமை கூடாமையால் மேலேபொதுவகையால் விலக்கப்பட்ட இகலை, இவ்விடத்தே சிறப்புவகையால்விதிக்கின்றாராதலால் இது அதன்பின்வைக்கப்பட்டது.

௰-ஆம்-அதி பகைத்திறந்தெரிதல்.

மாட்சிமைப்படாதபகையை, ஆகுதற்குற்றமும், முன்னாப்நின்றபகையுள்நடபாகுந் தன்மையதும அயலாக்குந்த

ன்மைபதும், அவைகளிலே செய்வதும், மற்றைகளையுந்தன்மையதும், அதனிடத்திலேசெய்வனவும், வினையும் பருவமும், களையாமற்போனால் படுமிழுக்கமும், என்று இவ்விதங்களை, ஆராய்தல் இவையெல்லாம் மாட்சிமைப்படாத பகையினவாகலால் இது பகைமாட்சியின் பின்வைக்கப்பட்டது.

௯௧- ஆம்-அதி- உட்பகை

புறப்பகைக்கிடமாக்கிக் கொடுத்து அதுவெல்லுமளவும் உள்ளாய் நிற்கும்பகை. இதுவுங்களையப்படுவதிலே சேர்ந்ததாகலால் அதன்பின் வைக்கப்பட்டது

௯௨- ஆம்- அதி- பெரியாரைப்பிழையாமை.

பெரியாரை அவமதித்துநடவாமை இதுகுரோததால் வருமவைகளின் முடிவில்வைக்கப்பட்டது

௯௩- ஆம்- அதி- பெண்வழிச்சேறல்.

தன்வழிநடத்தற்குரியவளாகிய மனையவள் வழியேதான் நடத்தல் இனி காமத்தால் வருபவைநேரேபகையல்லவாயினும் பெருககஞ்சிதைத்தல் அழிவைத்தருதல் என்கின்றதொழில்களாலேபகையோடொத்தலால் அவைகளைப் பகைப்பகுதியின் முடிவிலே சொல்லத்தொடங்கி முதலிலேபெண்வழிச்சேறல் சொல்லுகின்றார.

௯௪- ஆம்-அதி- வரைவின்மகளீர்.

தந்நலம் விலைகொடுப்பார்யாவர்க்கும் விற்பதல்லது அகற்குஆவார்ஆகாதார் என்கின்றவரைவு இல்லாதமகளிரது இயல்புஆகலால் இது தமக்குரியமகளிரால வருங்குற்றத்தின் பின் வைக்கப்பட்டது.

௯௫- ஆம்- அதி- கள்ளுண்ணாமை

ஒழுக்கமும் உணர்வுமழித்தலில் பரத்தையரோடொப்பதாகியகள்ளினையுண்ணாமை அதுசிறப்பு எதிர்மறைமுகத்தாலே சொல்லுகிறார்.

௯௬- ஆம்- அதி- சூது.

அறம்பொருளின்பங்களுக்குத்தடையாகிய சூதாடல். இச்சூதாடலும் பிணியனுபவித்தலுஞ் சொல்லத்தொடங்கி முதலிலே சூதின தியல்பு சொல்லுகின்றார்.

௯௰ ஆம்- அதி- மருந்து

பழவினையாலுங் காரணங்களாலு மனிதர்க்குவரும் பிணிகளுள்பழவினையால்வருவன அவ்வினை கழியுமபோதலலாற்றீராமையாலவையொழித்து மற்றைக்காரணங்களால் வருமவை தீர்க்குமருந்தின்றிறம. காரணங்களாவன உணவுதொழில்களினது ஒவ்வாமை

ஆறாம் அங்கம் குடி இயல்

இதுவே "ஒழிபியல்,, எனப்பட்டது. (அரசியல்முதல்-மற்றைத் தங்கவியல்களினு மடங்காதொழிந்தவையாவும-இதனுள விரித்தலால்) இது ஒழிபியல் எனப்பெயராயிற்று

முதல- ஆம்- அதிகாரம்- குடிமை

உயர்ந்தகுடியினிடத்துப் பிறந்தவரதுதன்மை உயர்குடிப்பிறப்பு நாலவகைவருணத்தார்க்கும் அவசியம வேண்டியதாகலால அச்சிறப்புப்பற்றி முனனவைககபபடடது

உ- ஆம- அதி- மானம

எந்நாளுந் தன்னிலையிலேதாழாமையும ஊழால் தாழ்வுவந்தவிடத்து உயிர்வாழாமையுமாம (இது அக்குடிப்பிறப்பை அழியாமல நிறுத்துதலாலே அச்சிறப்புப்பற்றி அதனபினனவைக்கப்படடது)

௩ ஆம்-அதி-பெருமை

செய்தற்கரியசெய்தல் செருக்கிலலாமை பிறர்குற்றஞ் சொல்லாமை எனறிவைமுதலிய நற்குணஙகளாலே பெரியராயிருத்தன்மையாம (நிலையிலிருந்துமேலுமேலு முயாத்துவதாகிய விகதணஙகளுண்டாவது நிலையிலிருந்து தாழாமையுள்ளவிடத்தேயாகலால் இது மானத்தின் பின்வைககப் படடது)

௪- ஆம்- அதி- சான்றாண்மை

பலகுணங்களாலுநிறைந்து அவைகளை ஆளுகற்றன்மை பெருமையு ளடங்காத பலகுணங்களையுந் தொகுத்துககொணடு நிறகையால் இது அதனபின்வைககப்பட்டது.

௫ ஆம்- அதி- பண்புடைமை

பெருமைசான்றாண்மைகளில் காமவழுவாது நின்றே எல்லாரியலபுகளும அறிந்துநடத்தலுடையராதல் அதிகாரமுறைமையு மிதனால்விளங்கும-

சு-ஆம்-அதி-நன்றியிற்செல்வம்

சம்பாதித்தவனுக்கும் பிறர்க்கும் - பயன்படுதலில்லாத செல்வத்தினியல்பு - செல்வமுடையானது குற்றஞ் செல்வத்தின்மேல் ஏற்றப்பட்டது.

எ-ஆம்-அதி-நாணுடைமை.

முன்சொல்லப்பட்ட சார்பு - பண்புமுதலிய குணங்களாலுயர்ந்தோர் - தமக்குத் தகாதகருமங்களில் - நாணுதலுடையராந்தன்மை - அதிகாரமுறைமையும் இதனால்விளங்கும்

அ-ஆம்-அதி-குடிசெயல் வகை

ஒருவன் தான்பிறந்த குடியை உயரச்செய்தலின் விதம் இது தாழ்வினிடத்தது நாணுடையவர்க் குண்டாகுவதாகலின் அதன்பின் வைக்கப்பட்டது

கூ-ஆம்-அதி-உழவு

சிறுபான்மை - வாணிகர்க்கும், பெரும்பான்மை* - வேளாளர்க்கும், உரித்தாகிய உழுதற் றொழில்.—இதுசெய்விக்கும் போது மற்றவர்க்கு முரித்தாகும் இது-முன்னே குடி உயர்தற்கேதுவென்ற முயற்சியாகலால், குடிசெயல்வகையின்பின் வைக்கப்பட்டது

ய-ஆம்-அதி-நல்குரவு.

அநுபவிக்கப்படுவனயாவுமு - இல்லாமை அதிகாரமுறைமையும் இதனால் விளங்கும்

யக-ஆம்-அதி-இரவு.

மானங்கெடாத [illegible] - இனி மானங்கெடாத விரத்தலிரவாமையோடொத்தலால், [illegible]னாலும் வீடுபெறுவதற் குதவிசெய்வதாகிய [illegible] காக்கலாமென்கிற அறநூல்வழக்குப்பற்றி முன் [illegible]நின்ற இறத்தலை விலக்குதற்பொருட்டு [illegible]. அதிகாரமுறைமையும் இதனால் விளங்கும்.

யஉ-ஆம்-அதி-இரவச்சம்

மானங்கெடவரு மிரத்தலுக்கு அஞ்சுதல். அதிகாரமுறைமையும் இதனால் விளங்கும்.

௱௮-ஆம்-அதி-கயமை.

கீழோரது தன்மை *(முன்னே) அரசியலுள்ளும், மற்றை அங்கவியலுள்ளும், சிறப்புவகையாற் சொல்லப்பட்ட குணங்களுள் ஏற்புடையவைகளை குறிப்பினால் யாவர்க்கும் பொருந்த வைத்தமையால் அங்கே குறிப்பாற் சொல்லியவையும், இங்கே ஒழிபியலுள் வெளிப்படச்சொல்லியவையும், ஆகிய குணங்களுள் யாதுமிலராகிய கீழோரது தன்மையாதலால், இது- எல்லாவற்றிற்கும்பின் வைக்கப்பட்டது.

ஆக-அதிகாரம்-௭௰

பொருட்பால்

முற்றிற்று



சிவமயம்

நாயனார் துணை.

மூன்றாவது

காமத்துப்பால்.

திருவள்ளுவமாலையுள் - மோசிகீரனாரருளிய
காமத்துப்பால - அதிகாரத்தொகை
வெண்பா

ஆண்பாலே ழாறிரண்டு பெண்பாலடுத்தன்பு *
பூண்பா லிருபாலோ ராறாக - மாண்பாய *
காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார் *
நாமத்தின் வள்ளுவனார் நன்கு *

இனி - அப்பொருளைத் துணைக்காரணமாக வுடைத்தாய் இம்மையே பயப்பதாகிய - இன்பத்தைச் சொல்லும்படி எடுத்துக்கொண்டார்

இவ்விடத்து "காமம்" என்றது. (ஒருகாலத்தில் ஒருபொருளால் கண்டுகேட் டுயிர்த்துற் றறிவதென்னும் ஐம்புலன்களையும், அநுபவித்தற் சிறப்புடைத்தாகிய இல்பத்தினை

இது-புணர்ச்சி-பிரிவு-என இருவகைப்படும் மற்றை இருத்தல்-இரங்கல்-ஊடல்-என்பனவோவெனில், இவர் பொருட்பாகுபாட்டினை அறம்-பொருள்-இன்பம்-என வடநூல்வழக்குப் பற்றிச் சொல்லுதலால் - அப்படியே அவைகளைப் பிரிவினிடத்து அடக்கினார்.

இனி-அவைகளையே தமிழ்நூல்களோடும் பொருந்த புணர்ச்சியைக் (களவு) என்றும், பிரிவைக் (கற்பு) என்றும், பெரும்பான்மைபற்றி வகுத்து அவைகளைச் சுவைமிகுதி யுண்டாக்க உலகநடையோடு ஒத்தலும், ஒவ்வாமையு முடையனவாகச் சொல்லுகின்றார்—அகைகோள் இரண்டினுள்ளும் * களவாவது (பிணி-மூப்பு-இறப்புகளில்லாமல எந்நாளு மொருதன்

மையராய் உருவும் - திருவும் - பருவமும்-குலமும்-குணமும்-அன்பும் - முதலானவைகளாலே தம்முள் ஒப்புமையுடையராகிய) தலைவனும், தலைவியும், பிறர் கொடுப்பவும், அடுப்பவும், இல்லாமல் ஊழ்வகையால் தாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்து வருவது * அதனை எழுதிகாரத்தாலே சொல்லத்தொடங்கி முதலில் தகையணங்குறுத்தல் சொல்லுகின்றார்.

களவியல்.

ஆண்பால்

முதல்-ஆம்-அதி-தகையணங்குறுத்தல்

(பொழிலவிளையாட்டு விருப்பால் மகளிர்கூட்டம் நீங்க-அதனிடத்துத் தனித்து நின்றவளை வேட்டைவிருப்பால் இளையவர் நீங்க தனித்துவந்து கண்ட தலைவன்) அவள் அழகு தனக்கு வருத்தமுண்டாகுதலைச் சொல்லுதல்.— இது - கண்டபொழுதே தோன்றுவதாகலால் முதலிலேசொல்லப்பட்டது

உ-ஆம்-அதி- குறிப்பறிதல்

தலைவன் தலைவிகுறிப்பை யறிதலும் - தோழிகுறிப்பை யறிதலும் - அத்தோழி அவ்விருவர்குறிப்பை யறிதலும் - தலைவியழகைக்கண்டு வருந்திய தலைவன் தலைவியைக் கூடும்போது இதுவேண்டுமாதலால் தகையணங்குறுத்தலின்பின் வைக்கப்பட்டது

ங-ஆம்-அதி-புணர்ச்சிமகிழ்தல.

அப்படிக் குறிப்பறிந்து புணர்ந்ததலைவன் அப்புணர்ச்சியை மகிழ்ந்துசொல்லுதல் அதிகாரமுறைமையு மிதனால் விளங்கும்

ச-ஆம்-அதி-நலம்புனைந்துரைத்தல்

தலைவன் - தலைவிநலத்தினை வருணித்துச் சொல்லியது — இது - புணர்ச்சியின் மகிழ்ந்தவிடத்து நிகழ்வதாகலால் அதன் பின்வைக்கப்பட்டது

ரு-ஆம்-அதி-காதற்சிறப்புரைத்தல்

தலைவன் தன் ஆசைமிகுதியைச் சொல்லலும் - தலைவி தன் ஆசைமிகுதியைச் சொல்லலுமாம் —இது-புணர்ச்சியும் - நல

னும் பற்றி நிகழ்கின்றதாகலால், அவற்றினதிகாரங்களின்பின் வைககப்பட்டது

க-ஆம்-அதி-நாணுத்துறவுரைத்தல்

தாரப்படுத்தப்பட்டுப் பொருதவருகிய தலைவனும், அறத்தோடு நிற்பிக்கத்தொடங்கிய தலைவியும், தமது நாணமிழத் தலைச்சொல்லுதல் —இது-காதல் மிகுந்தவிடத்து நிகழ்வதாகலால், காதற்சிறப்புரைத்தலின்பின் வைக்கப்பட்டது

எ-ஆம்-அதி-அலரறிவுறுத்தல்

களவொழுக்கம் வேண்டியதலைவன் - பிறர்சொல்லுகின்ற அலர் தனக்கு ஆகின்ற விதத்தைத் தோழிக்கு அறிவித்தலும், மணமாக உடன்போக்காக ஒன்றுவேண்டிய தலைவியுந், தோழியும, அவ்வலரை அவனுக்கு அறிவுறுத்தலுமாம்.

இனிக்-கற்பியல்பதினெட்டு அதிகாரத்தாலே சொல்லத் தொடங்கி, அவற்றுள் இருகூறுகப் பிரிவாற்றுமை முதல் அவர்வயின்விதும்பல் வரைக்கும், (யஉ) அதிகாரம் பெண்பாலாகவும், குறிப்பறிவுறுத்தல் முதல ஊடலுவகைவரைக்கும், (சு)அதிகாரம் (ஆண்பாலும்பெண்பாலுமாகிய) இருபாலாகவும், வகுத்துச் சொல்லுகின்றார்

(இறையனாரகப்பொருள்) சூத்திரம்.

கற்பினுட்டுறவே கடிவரையின்றே *
ஓதல்காவல் பகைதணிவினையே *
வேந்தர்க்குற்றுழிப் பொருட்பிணி பரத்தையென் *
றாங்கவ்வாறே யவ்வயிற்பிரிவே. *

(தொல்காப்பியம்) சூத்திரம்.

கற்பெனப்படுவது கரணமொடுபுணரக் *
கொளற்குரிமரபிற் கிழவன்கிழத்தியைக் *
கொடைக்குரிமரபினோர் கொடுப்பக்கொள்வதுவே.

(அகப்பொருள்விளக்கம்) சூத்திரம்.

பொற்புமைசிறப்பிற் கற்பெனப்படுவது *
மகிழ்வுமூடலு மூடலுணர்த்தலும் *
பிரிவும்பிறவு மருவியதாகும் *

கற்பியல்.
பெண்பால்.

முதலாம்- அதி- பிரிவாற்றாமை.

(மணஞ்செய்துகொண்டபின் தலைவன் அறம்- பொருள்- இன்பங்களின்பொருட்டுத் தலைவியைப்பிரிந்து தூரத்திலும், அவவிடத்திலிருந்து செல்லுநாளில்) அப்பிரிவை அவள் பொறுக்கமாட்டாதவளாந்தன்மை. அது - இங்கே பிரிவை யறிவித்த தலைவனுக்குத் தோழிசொல்லலும், தோழிக்குத் தலைவி அவன் குறிப்பால் அறிந்துசொல்லலும், பிரிவை அறிவித்தவிடத்துச் சொல்லலும், பிரிந்தவிடத்து ஆற்றுவிக்குமிடத்துத் தோழிக்குச்சொலலலும், எனும் நால்வகையாலே சொல்லப்படும்.

உ-ஆம்-அதி-படர்மெலிந்திரங்கல்

பிரிவுபொறுக்க மாட்டாதவளாகிய தலைவி தான் உறுகின்ற துன்பத்தை எப்போதும் நினைத்தலின் அந்நினைவால் மெலிந்து இரங்கலாம். அதிகாரமுறைமையு மிதனால விளங்கும்

ங-ஆம்-அதி-கண்விதுப்பழிதல்

கண்கள் தலைவனைக்காணுதற்கு விரைதலாலே வருந்துதல் இது-படராலே மெலிந்தவிடத்து நிகழ்வதாகலால்,அதன்பின் வைககப்பட்டது

ச-ஆம்-அதி-பசப்புறுபருவரல்.

(பசப்புறுதலாலாகிய வருத்தம்) பசப்பாவது பிரிவு பொறுமையால் வருவதோர் நிறவேறுபாடு இது-தலைவனைக்காணப்பெறுதவிடத்து நிகழ்வதாகலால் கணவிதுப்பழிதலின்பின் வைககப்பட்டது

ரு-ஆம்-அதி-தனிப்படர் மிகுதி

(தனியாகிய துன்பமிகுதி) அது - பசப்புற்று வருந்தியவளுக்கு உரியதாகலால் பசப்புறுபருவரலின்பின் வைககப்பட்டது.

சு-ஆம்-அதி-நினைந்தவர்புலம்பல்

முன்கூடியகாலத்தி னின்பத்தை நினைந்து பாசறையிடத்துத் தலைவன் தனிமையடைதலும், தலைவி தனிமையடைதலுமாம்.—இது - படர்மிகுதி தம்மிடத்ததாக நினைந்த தலைவி

கும் உரித்தாகலால், இச்சம்பந்தம் பற்றித் தனிப்படர் மிகுதி யின்பின் வைக்கப்பட்டது.

௭-ஆம்-அதி-கனவுநிலையுரைத்தல்

தலைவி - தான்கண்ட கனவினது நிலைமையைத் தோழிக்குச் சொல்லியது —அக்கனவு நனவினிடத்து நினைவுமிகுதியாலே கண்டதாகலால், இது-நினைந்தவர் புலம்பலின்பின் வைக்கப் பட்டது.

௮-ஆம்-அதி-பொழுதுகண்டிரங்கல்

மாலைப்பொழுது வந்தவிடத்து - அதனைக்கண்டு தலைவி இரங்குதல் கனவு முந்துறுதலினை யில்லையென்பதுபற்றி - பகற் பொழுது பொறுத்திருந்த தலைவிக்கு உரியதாகலால், இது-கனவுநிலை யுரைத்தலின்பின் வைக்கப்பட்டது

௯-ஆம்-அதி-உறுப்புநலனழிதல்

தலைவியினுடைய கண்ணுந்-தோளும - நெற்றியும்-முதலாகிய அவயவங்கள் தம் அழகு அழிதல் இது - இரக்கமிகுந்தவிடத்துநிகழ்வதாகலால், பொழுதுகண்டிரங்கலின்பின் வைக் கப்படடது

௰-ஆம்-அதி-நெஞ்சொடுகிளத்தல்.

பிறிவுபொறுமை மேற்படத் தனக்கோர் பற்றுக்கோடு காணாத தலைவி தன்னெஞ்சொடு செய்திறன் அறியாது சொல்லுதல் —இது - உறுப்புகள் தமது நலனழிந்தவழி நிகழ்வதாகலால், அதன்பின் வைக்கப்பட்டது.

௰௧-ஆம்-அதி-நிறையழிதல்.

தலைவி மனதிலே அடக்கப்படு மவைகளை ஆசைமிகுதியால் அடக்கமாட்டாமல் வாய்விடுதல் அது - அழிதற்குக்காரணம் நெஞ்சொடு சொல்லுதலால், ஈததன்பின் வைக்கப்பட்டது.

௰௨-ஆம்-அதி-அவர்வயின்விதும்பல்.

தூரதேசப்பிரிவிலே தலைவனுந் - தலைவியும் - ஆசைமிகுதியால ஒருவரையொருவர் காணுதற்கு விரைதல் இதனுள் தலைவிசொல் நிறையழிவார் துண்டாதலால், அச்சம்பந்தப்பற்றி அதன்பின் வைக்கப்பட்டது

(ஆண்பாலும்-பெண்பாலுமாகிய).

இருபால்.

முதலாம்-அதி-குறிப்பறிவுறுத்தல்

தலைவன்-தலைவி-தோழி என்றிவர்கள் ஒருவர்குறிப்பையொருவர்க் கறிவுறுத்தல்.—இது - பிரிந்துபோகிய தலைவன் வந்து கூடியவிடத்தே நிகழ்வதாகலால், அவர்வயின் விதும்பலின் பின் வைக்கப்பட்டது

௨-ஆம்-அதி-புணர்ச்சிவிதும்பல்

தலைவனுந் தலைவியும் புணர்ச்சிக்கண்ணேவிரைதல் மேலே புணர்ச்சி மிகுதிபற்றி - தலைவன் பிரிதற்குறிப்பை யறிவுறுத்த தலைவி அவனிடத்தே நிகழாது, ஆசைமிகுதியினாலே பின்னுந் தன்னிடத்தே நிகழ்தலால், இது - குறிப்பறி வுறுத்தலின்பின் வைக்கப்பட்டது

௩-ஆம்-அதி-நெஞ்சொடுபுலத்தல்

காரணமுண்டாகியவிடத்தும், பிணங்கநினையாமல் புணர்ச்சியை விரும்புகின்ற நெஞ்சுடனே தலைவி பிணங்கலும், தலைவன் பிணங்குதலுமாம்.— அதிகாரமுறைமையு மிதனால் விளங்கும்

௪-ஆம்-அதி-புலவி

இருவர்நெஞ்சும் புணர்ச்சிவிரும்பாது பிணங்க நினைத்தவிடத்து ஒருவரோடொருவர் பிணங்கல் அதிகாரமுறைமையு மிதனால் விளங்கும்

௫-ஆம்-அதி-புலவிநுணுக்கம்.

தலைவனுந் தலைவியு மொருபடுக்கையிலே கூடியிருந்த விடத்து அவ்விடத்துப் பிணங்குதற்குக் காரணமில்லாதிருக்கவும், ஆசை அதிகப்படுதலால் நுட்பமாகிய ஒருகாரண மிருக்கிறதாக உட்கொண்டு அதனைஅவன்மேலேற்றி அவள்பிணங்குதல், காரணத்தி னுணுக்கங் காரியத்தின்மே னின்றது அதிகாரமுறைமையு மிதனால் விளங்கும்

௬-ஆம்-அதி-ஊடலுவகை.

அப்படிப்பட்ட ஊடலால் தமக்குக்கூட வின்பஞ்சிறந்த விடத்து அச்சிறப்புக்கு ஏதுவாகிய அவ்வூடலைத் தலைவி மகிழ்தலும், தலைவன் மகிழ்தலுமாம்

காமத்துப்பால்-முற்றிற்று.

உ

நாயனார் துணை.

ஔவையார்
அருளிச்செய்த

ஆத்திசூடி.

குறளுதாரணத்துடன்

மூலமும்-உரையும்.

கடவுள் வாழ்த்து.

ஆத்திசூடி-யமர்ந்ததேவனை . . *
யேத்தியேத்தித்-தொழுவோமியாமே *

(இதன்பொருள்.)

ஆத்திசூடி - ஆத்திமாலையைச் சூடிய பரமசிவன், அமர்ந்த - விரும்பிய, தேவனை - மூத்தமகனாகிய விநாயகனை, ஏத்தி யேத்தி, துதிசெய்து துதிசெய்து, தொழுவோம்-வணங்குவோம் யாம்-யாங்கள்.

௧-அறஞ்செயவிரும்பு.

அறம்-தருமத்தை, செய-செய்தற்கு, விரும்பு-நீ யாசை கொள்ளு.

குறள்-௪-ம்- அதி- அறன்வலியுறுத்தல்-௬-ம்-செய்யுள்.

அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது . *
பொன்றுங்காற் பொன்றாத் துணை *

நாமிப்போ திளமைப்பருவமுடையேமாகையாலிறக்குங் காலத்திற் செய்வோமென்று நினையாது தருமத்தைச் செய்தாலதுசரீரமழிந்துபோம்பொழு துயிர்க்கு அழிவில்லாத துணை யா யுடன்செல்லு மென்பதாம்.

௨-ஆறுவதுசினம்.

ஆறுவது- உனக்குள்ளே தணியத்தகுவது, சினம்-கோபமேயாம்.

௩௰௧-ம்-அதி வெகுளாமை-௩௱௩ம்-செய்யுள்.

மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய . . . . . *
பிறத்த லதனான் வரும். . . . . *

தன்னினுயர்ந்தோரு மொத்தோரு மிழிந்தோருமாகிய-மூத்திறத்தாருள் யாரொருவரிடத்துக்கோபஞ்செய்தாலும் அது தியநினைவுகளை யெல்லா முண்டாக்கித் தன்னைக்கெடுக்கு மாதலால் ஒருவரிடத்துங்கோபஞ்செய்யலாகா தென்பதாம்.

௩-இயல்வது கரவேல்.

இயல்வது-கொடுப்பதற்கிசைவதை, கரவேல்-இரப்பவர்கரு ஒளியாதே

௨௰௩-ம்-அதி-ஈகை-௩-ம்-செய்யுள்.

இலனென்னு மெவ்வ முரையாமை யீதல் . *
குலனுடையான் கண்ணே யுள . *

யான் வறியனென்றிரப்பவன் சொல்லுகின்ற சொல்லைத்தான் பிறரிடத்துச்சொல்லாமையும், அதனைத்தன்னிடத்துச்சொன்னாக கில்லையென்னாது கொடுத்தலும், ஆகியவிரண்டும் நல்லகுடியிற பிறந்தவனிடத் துண்டென்பதாம்.

௪-ஈவது விலக்கேல்.

ஈவது- ஒருவருககு ஒருவர்கொடுப்பதை, விலக்கேல்- விலககாதே

௰௭-ம-அதி-அழுக்காறாமை-௬-ம்-செய்யுள்

கொடுப்ப தழுக்கறுப் பான்சுற்ற முடுப்பதூஉ *
முணபதூஉ மின்றிக கெடும .. . *

பிறாபேற்றின்பொறாமை தன்பேற்றையேயன்றித் தன்சுற்றத்தின் பேற்றையு மிழப்பிக்கு மென்பதாம்

௫-உடையது விளம்பேல்

உடையது-உனககுள்ள ஆஸ்தியை, விளம்பேல்-பிறரறிய சொல்லாதே

௮௰௫-ம்-அதி-புல்லறிவாண்மை-௪-ம்- செய்யுள்.

வெண்மை யெனப்படுவ தியாதெனி னொண்மை *
யுடையம்யா மென்னுஞ் செருக்கு. . *

உலகத்தாரிகழ்ந்த லறிந்திருந்தும் யாம் நல்லறிவினை யுடைய

மென்று தம்மைத்தாமே மதிக்கின்ற மயக்கமே புல்லறிவாண்மை யென்பதாம்

௬-ஊக்கமது கைவிடேல்.

ஊக்கமது-செய்தொழிலில்- மனஞ்சோராமையை, கைவிடேல்-கைவிடாதே

௬௰-ம்-அதி-ஊக்கமுடைமை-௪-ம்-செய்யுள்

ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா *
ஊக்க முடையா னுழை . . . *

உள்ளக்கிளர்ச்சியை யுடையவனிடத்துச் செல்வந் தானேவழிகேட்டுக்கொண்டுவந்து சேரு மென்பதாம்.

௭-எண்ணெழுத்திகழேல்

எண்-கணித நூலையும், எழுத்து - இலக்கணநூலையும், இகழேல்-இகழாமற் கற்றுக்கொள்ளு.

௪௰-ம்-அதி-கல்வி-௨-ம்-செய்யுள்

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு . *

அறநூன்முதலியவைகளை யறிதற்குக் கணிதநூலு மிலக்கண நூலுங் கருவியாகுமென்பதாம்

௮-ஏற்பதிகழ்ச்சி

ஏற்பது-ஒருவரிடத்திற்போய் இரப்பது,இகழ்ச்சி-உனக்குப் பழிப்பாகும்

௱௭-ம்-அதி-இரவச்சம்-முதலாஞ்-செய்யுள்.

கரவாது வந்தீயுங் கண்ணன்னார் கண்ணு . *
மிரவாமை கோடி யுறும் . . . . *

தமக்குள்ளதை யொளிக்காமற் கொடுப்பவரிடத்தும் - இரந்து செல்வமடைதலின் இரவாமையே மிக நன்றாகுமென்பதாம்

௯- ஐயமிட்டுண்

ஐயம்-பிச்சையை,இட்டு-இரப்பவர்க்குக்கொடுத்து,உண்-நீயுமுண்ணு.

௨௰௩-ம்-அதி-ஈகை-௭-ம்- செய்யுள்

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந் . *
தீப்பிணி தீண்ட லரிது . *

தன்கையி லகப்பட்டதை யாசகர்க்குதவித் தானு முண்பவ னே் தனக்குத்தானே வயித்தியனாகலால் பசிநோயவனைச் சேரா தென்பதாம்

௰-ஒப்புரவொழுகு

ஒப்புரவு-உலகநடையையறிந்து,ஒழுகு-அந்தவழியேநட. உ௰உ-ம் அதி-ஒப்புரவறிதல்-௩-ம்-செய்யுள்,

புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே *
யொப்புரவி னல்ல பிற *

ஒப்புரவைப்போல நல்லசெயல்கள் விண்ணுலகத்து மண் ணுலகத்து மில்லையென்பதாம்

௰க-ஓதுவதொழியேல்,

ஓதுவது-நூல்களைவாசிப்பதில், ஒழியேல்- எப்போதும் நீங்காதே,

சரு௰-ம்-அதி-கல்வி எ-ம்-செய்யுள்

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன் *
சாந்துணையுங்கல்லாத வாறு *

பிறர்நாடுகளுமூர்களுந் தன்னாடுந் தன்னூரும்போல உபச ரிக்குமாதலால் ஒருவன் கல்வியைக்கற்கவேண்டு மென்பதாம்,

௰உ-ஔவியம்பேசேல்.

ஔவியம் - பொறாமையாகிய சொல்லை, பேசேல் - எப் போதும் பேசாதே

௰எ-ம்-அதி-அழுக்காறாமை-௩-ம்-செய்யுள்

அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம் *
பேணா தழுக்கறுப் பான் *

பிறர்செல்வங்கண்டு பொறாமைகொள்பவன் அறத்தையும் புகழையு மிழப்பனென்பதாம்.

௰௩-அஃகஞ்சுருக்கேல்.

அஃகம்-தானியவிலையை, சுருக்கேல்- அதிகலாபத்துக்கா க குறையாதே

உக-ம்-அதி-தீவினையச்சம்-உ-ம்-செய்யுள்

தீயவை தீய பயத்தலாற் றீயவை *
தீயினு மஞ்சப் படும் *

ஒருவன்தனக் கிதத்தைக்குறித்துச் செய்யுந் தீவினை பின்கெ

ன்று வருத்துவதினாலே அப்படிபின்சென்று வருத்துதலில்லாத நெருப்பினுங் கொடியதென்று அதற்கஞ்சவேண்டு மென்பதாம்.

௬௪-கண்டொன்றுசொல்லேல்

கண்டு-ஒன்றைப்பார்த்து, ஒன்று-மற்றொன்றை, சொல்லேல்-சாட்சியாகும்போது சொல்லாதே

௩௰-ம்-அதி-வாய்மை ௩-ம்-செய்யுள்.

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின் *
றன்னெஞ்சே தன்னைச் சுடும் *

தன்னெஞ் சறிவதொன்றைப் பிறரறிந்திலரென் றொருவன் மறைப்பானாயின் அது மறையாதுநின்று பின்வருத்து மென்பதாம்.

௬௫-ஙப்போல்வளை.

ஙப்போல்-ஙகரந் தான் பிரயோசன முள்ளதாகவிருந்து தன்வருக்கத்தைத் தழுவுதல்போல, வளை-நீ பிரயோசனமுள்ளவனாக விருந்து உன் இனத்தைத் தழுவு

௫௩-ம்-அதி-சுற்றந்தழால்-௭-ம்செய்யுள்

காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு *
மன்ன நீரார்க்கேயுள *

காக்கையைப்போ லழைத்து இனத்தொடு ணுண்பவர்க்குச் செல்வம் பெருகு மென்பதாம்

௬௬-சனிநீராடு.

சனி-சனிக்கிழமைதோறும், நீர்-வெந்நீரில், ஆடு-நீயெண்ணெ யிட்டுக்கொண்டு தலைமுழுகு.

(ஆயுளும் வன்மையு மமைக்குமாதலால் சதிப்பயனுக்குரிய காலமாகக் கூறியது)

௪௯-ம்-அதி-காலமறிதல்-௩-ம்-செய்யுள்.

அருவினை யென்ப வுளவோ கருவியாற் *
கால மறிந்து செயின் *

அருவினையென்ப-செய்தற்கரிய தொழில்களென்று சொல்லப்படு மவை, உளவோ-உண்டோ, கருவியால்-அவைகளை முடித்தற்காகுஞ் சாதனங்களுடனே, காலம்-காலத்தை, அறிந்து-தெரிந்து, செயின்-செய்தால், என்பதாம்.

௰௭. ஞயம்பட வுரை.

ஞயம்பட - பேசுஞ்சொல்லிலே நயமுண்டாக, உரை - ஒருவருடன் பேசு

௰-ம்-அதி-இனியவைகூறல்-௬-ம்-செய்யுள்.

அல்லவை தேய வறம்பெருகு நல்லவை *
நாடி யினிய சொலின் *

ஒருவ னன்மையைத்தரு மின்சொற்களை யாராய்ந் தெடுத் துப் பேசுவானாயின் அவனிடத்துப் பாவங் குறையத் தருமம் மேலிட்டு வளருமென்பதாம்

௰௮-இடம்பட வீடெடேல்.

இடம்பட-விசாலமுண்டாக, வீடு-வீட்டை, எடேல்- கட்டாதே

௪௭-ம்-அதி-தெரிந்துசெயல்வகை-முதலாம்செய்யுள்

அழிவதூஉ மாவதூஉ மாகிவழிபயக்கு *
மூதியமுஞ் சூழ்ந்து செயல் *

ஒருகருமத்தைச்செய்யும்போது செலவும் வரவு மிலாபமு மாராய்ந்து பயனுண்டெனின் செய்யக்கடவ னென்பதாம்

௰௯-இணக்கமறிந்திணங்கு

இணக்கம்-தக்ககுணத்தை, அறிந்து-இருக்கப்பார்த்து, இணங்கு-ஒருவரோடுசினேகஞ்செய்.

௮௰-ம்-அதி-நட்பாராய்தல்-௩-ம்-செய்யுள்

குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா *
வினனு மறிந்தியாக்க நட்பு *

குணமுதலாகியநான்குமுடையவனோடு நட்புசெய்கவென் பதாம்

௨௰-தந்தைதாய்ப்பேண்

தந்தை தகப்பனையும், தாய் - தாயையும், பேண் - காப் பாற்று

௯௰-ம்-அதி-பெரியாரைப்பிழையாமை-௨-ம்- செய்யுள்

பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாரால் *
பேரா விடும்பை தரும் *

எல்லாம்வல்லபெரியோரை யவமதித்து நடத்தல் ஒருவனுக் கு நீங்காதுன்பங்களைத் தருமென்பதாம்.

௨௰௧ நன்றிமறவேல்

நன்றி-ஒருவர்செயதஉபகாரத்தை, மறவேல்-எப்போதும் மறவாதே

௰௧-அதி-செய்ந்நன்றியறிதல்-௮-ம்-செய்யுள்.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல *
தன்றே மறப்பது நன்று . *

ஒருவன்றனோ முன்பொருநன்றிசெய்து பின்புதீமைசெய் வானாயின் அவன் செய்தவவ்விரண்டி னுள்ளுந் தீமையையப் பொழுதே மறந்து நன்றியை யெப்பொழுது மறவாமற்கொ ள்வதே தருமமாகுமென்பதாம்

௨௰௨-பருவத்தே பயிர்செய்

பருவத்தே-அது அது விளையுங்காலத்திலே, பயிர்செய்-பயிரிடு.

௪௰௯-ம்-அதி-காலமறிதல்-௨-ம்-செய்யுள்

பருவத்தோ டொட்ட வொழுக றிருவினைத் *
தீராமை யார்க்குங் கயிறு *

காலம்பார்த்துப்போர்க்குச்செல்லுகின்ற வரசனெக்காலத் துஞ் செல்வத்துடனேவாழ்வனென்பதாம்

௨௰௩-மண்பறித்துண்ணேல்.

மண்-பிறர்விளைநிலத்தை, பறித்து-அபகரித்துக்கொண்டு உண்ணேல்- சீவனஞ்செய்யாதே

௰௮-ம்-அதி-வெஃகாமை-முதலாம்-செய்யுள்

நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக் *
குற்றமு மாங்கே தரும் *

பிறர்க்குரியபொருளை யபகரிப்பதுநமகருத் தருமமன்றெ ன்று நினைக்குநடுவு நிலையின்றியவரது நலல பொருளை யொரு வன் விரும்புவானாயி னவ்விருப்பமான தவன்குடியைக கெட ச்செய்து குற்றத்தையு மப்பொழுதேதரு மென்பதாம்.

௨௰௪- இயல்பலாதனசெயேல.

இயல்பலாதன-தகாதகாரியங்களை, செயேல்- எப்போது ம் பண்ணாதே.

௬௰௬-ம்-அதி-வினைத்தூய்மை முதலாம்செய்யுள்.

துணைநலமாக்கந் தரூஉம் வினைநலம் *
வேண்டிய வெல்லாந் தரும் *

நல்லதுணையானது பொருளொன்றையே தருதலாலும், நல்லதொழிலானது அறம்பொருளின்பங்களைத் தருதலாலுங் காட்சிப் பொருளாகிய துணையிற கருத்துப் பொருளாகிய தொழிலே சிறந்ததென்பதாம.

உரு-அரவமாட்டேல்

அரவம்-நஞ்சுள்ளபாம்புகளை, ஆட்டேல்- பிடித்து ஆட்டாதே

அ௰அ-ம்-அதி-பகைத்திறந்தெரிதல் முதலாம்-செய்யுள்.

பகையென்னும் பண்பி லதனை யொருவ *
னகையேயும் வேண்டற்பாற் றன்று . .. *

பகையை விளையாட்டினிடத்து வேண்டினுங் கோபமே விளைந்துபின் மெய்யாமாதலா லவ்விடத்தும் வேண்டலாகாதென்பதாம்

உகா-இலவம்பஞ்சிற்றுயில்

இலவம்பஞ்சில்-இலவம்பஞ்சுமெத்தையில்,துயில்-நீ நித்திரைசெய்

இது வாதசீதப்பிணிகளணுகாமையைச்செய்தலானும் நுன்மையறிவை மிக்க விளைத்தலானும்- துயிலுதற்குரிய தேயமெனக் கூறியது.

௬௰-ஆம்-அதி-இடனறிதல்-ரு-ம்-செய்யுள்.

ஆற்றாரு மாற்றி யடுப விடனறிந்து *
போற்றார்கட் போற்றிச் செயின் *

ஆற்றாரும்-வலிமையில்லாதவரும், ஆற்றி-வலிமையுடையவராய், அடுப-வெல்வார், இடன்- (அதற்கேற்ற) இடத்தை,அறிந்து-தெரிந்து, போற்றி - தம்மைகாத்துக்கொண்டு,போறறார்கண்- தம்மைநொய்யச்செய்யும் விரோதியினிடத்து,செயின் தக்கதொழிலைச் செய்வாராயின் என்பதனாற்காண்க.

உ௰எ- வஞ்சகம்பேசேல்

வஞ்சகம்-வஞ்சனையாகியசொற்களை, பேசேல்-எப்போதும்பேசாதே

உ௰அ-ம்-அதி-கூடாவொழுக்கம்-முதலாம்செய்யுள்.

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க *
ளைந்து மகத்தே நகும் . ... *

காமம் தன்னுள்ளேதோன்றி வருத்த அதனைப் புறத்திலே காட்டாமன்மறைத்து நடப்பவனது திருட்டு நடத்தையைக்கண்டு உடம்பா யவனோடுகலந்துநிற்கின்றபஞ்சபூதங்களுந் தம்முள்ளே சிரிக்குமென்பதாம்

உ௰அ-அழகலாதனசெயேல்.

அழகலாதன- அழகல்லாதகாரியங்களை, செயேல்- செய்யாதே

சுஉ௰சு-ம்-அதி-வினைத்தூய்மை-௬-ம்-செய்யுள்

இடுக்கட் படினு மிளிவந்த செய்யார் .. . *
நடுக்கற்ற காட்சி யவர் . , *

அசைவற்ற வறிவுடையவர் துன்பம் வந்த காலத்திலு மிகழ்வைத்தருந் தொழில்களைச் செய்யாரென்பதாம்

உ௰௯- இளமையிற்கல்

இளமையில்-சிறுவயதிலே, கல்-வித்தையைக் கற்றுக்கொள்ளு.

சுக-ம்-அதி-கல்லாமை-௫-ம்-செய்யுள்

கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து . *
சொல்லாடச் சோர்வு படும் , *

கல்லாதவர் கற்றவர்முன்னின்று பேசுமளவிற்பெருமையிழந்து அவமானமடைவ ரென்பதாம்

௩௰-அறனைமறவேல்

அறனை - செய்யததக்க தருமததை, மறவேல் - எந்நாளு மறவாதே

ச-ம்-அதி-அறன்வலியுறுத்தல்-உ-ம்-செய்யுள்

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை *
மறத்தலினூஉங் கில்லை கேடு *

ஒருவனுக்குத் தருமஞ்செய்தலைப்பார்க்கிலு முயர்வைத்தருவதும், அத்தருமத்தை மயக்கத் தான் மறந்து விடுதலைப்பார்க்கிலுங் கேட்டைத்தருவதும் இல்லையென்பதாம்

௩க-அனந்தலாடேல்

அனந்தல்-நித்திரையை, ஆடேல்-அதிகமாகச்செய்யாதே.

௫௪-ம்-அதி-பொச்சாவாமை-௩-ம்-செய்யுள்

பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத் *
தெப்பானூ லோர்க்குந் துணிவு *

மறதியையுடையவர்க்குக் கீர்த்தியில்லை யென்பது இந்தநூலார்க்குமாத்திரமல்லாமல் மற்றெந்த நூலார்கரு முடன்பாடாம-ஆதலால் மறதியாகாதென்பதாம்

௯௨-கடிவதுமற

கடிவது-ஒருவரைககடிந்துபேசுவதை,மற-மறந்துவிடு.

ம-ம-அதி-இனியவைகூறல்-க-ம்-செய்யுள்

இன்சொலினிதீன்றல் காண்பா னெவன் கொலோ *
வன்சொல் வழங்கு வது *

பிறாசொல்லிய வின்சொல்லானதுதனக கின்பந் தருதலை யறிவிததறிகின்றவன் பிறரிடத்துக் கடுஞ்சொல்லைப் பேசுவதென்ன பிரயோசனத்தைக குறித்தோ வதுதெரிந்திலே மென்பதாம்.

௯௩-காப்பதுவிரதம்

காப்பது உன்னாலே காப்பாற்றத்தகுவது, விரதம்-விரதமேயாம்

உ௪-ம்-அதி-தவம்-க-ம்-செய்யுள்

உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண செய்யாமை*
யறறே தவத்திற் குரு *

உண்டி சுருககுதன்முதலாகிய விரதங்களால் வருந் துன்பங்களைப் பொறுப்பதும், பிறவுயிர்களுக்கு நோய் செய்யாமையுமாகிய விரணடுந் தவததிறகு வடிவமாகு மென்பதாம்.

௯௪-கிழமைப்படவாழ்

கிழமைப்பட - உன்பொருள் பிறருக்கு உரிமைப்பட, வாழ்-நீ வாழு

அ-ம்-அதி-அன்புடைமை-உ-ம்-செய்யுள்

அன்பிலா ரெல்லாந் தமககுரிய ரன்புடையா *
ரென்பு முரியர் பிறர்க்கு *

அன்பில்லாதவ ரெல்லாப்பொருளையுந் தமககெ ன வைத்தனுபவிப்பரென்று மன்புடையவர் தம் மெலும்பைக் கேட்பினும் பிறருக்கு உதவுவரென்றுஞ் சொல்லியதாம்.

௯௫-கீழ்மையகற்று.

கீழ்மை-இழிவுகளை, அகற்று-நீககு

௱௮-ம்-அதி-கயமை-௧-ம்-செய்யுள்

மக்களே போல்வர் கயவரவரன்ன .... *
வொப்பாரி யாங்கண்ட தில் *

மனிதர் சாதிக்குங் கீழோர்சாதிக்கு முருவமுழுது மொத்த லாற் குணங்களாலல்லது அவ்விருசாதிக்குமுள்ள வேற்றுமை யறியப்படா தென்பதாம்

௩௰௬-குணமது கைவிடேல்.

குணமது-குணமுள்ளதாகிய ஒன்றை, கைவிடேல்-விட்டு விடாதே

௬௰௬-ம்-அதி-வினைத்திட்பம்-௯-ம்- செய்யுள்

துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி *
யின்பம பயக்கும் வினை . *

துவக்கத்திலேமுயற்சியாற்றுன்பம்வரினு மதற்குத்தளராம ன் முடிவிற் சுகத்தைத்தருந்தொழிலை மனவலிமையாறசெய்க வென்பதாம்.

௩௰௭-கூடிப் பிரியேல்

கூடி-(நல்லாரோடு) சிநேகித்து, பிரியேல்-பின்புஅவரை விட்டு நீங்காதே

௮௰௧-ம்-அதி-பழமை-௭-ம்- செய்யுள்

அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின் *
வழிவந்த கேண்மை யவர் *

நட்பினார்தமக்குககேடுசெய்தாலு மன்பையும பழைய தாகிய நட்பையுமுடையவ ரவர்மேலன்பு நீங்கா ரென்பதாம்.

௩௰௮-கெடுப்பதொழி

கெடுப்பது-பிறருக்குக கேடுசெய்வதை, ஒழி- எககாலத் திலும் விட்டிரு

௨௰௧-ம்-அதி-தீவினையச்சம-௪-ம்- செய்யுள்

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி *
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு *

ஒருவன் பிறனுக்குக் கேடு செய்தற் கெண்ணுவானாயி னப் பொழுதே யவனைக் கெடச்செய்து தருமம நீங்குமாதலாலே தீ வினையை யெண்ணலாகா தென்பதாம்.

௩௰௩- கேள்விமுயல்

கேள்வி - பெரியோர் சொல்லைக் கேட்பதற்கு, முயல்- முயற்சிசெய்

௪௱௰௪-ம்-அதி-கேள்வி-௪-ம்- செய்யுள்.

கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற் *
கொற்கத்தி னூற்றாந் துணை *

ஒருவற்குக் கல்வியில்லையாயினுங் கேள்விமாத்திர முண்டெனின் அதுவே தளர்ச்சிவந்த விடத் ததை நீக்குமென்பதாம

௩௰௪- கைவினை கரவேல.

கைவினை-உனக்குத்தெரிந்ததொழிலை, கரவேல்- சமையத்தில் ஒளியாதே

௨௱௯௰௪-ம்-அதி- வாய்மை-௪-ம்- செய்யுள்.

உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா *
ருள்ளத்து ளெல்லா முளன் *

தன்மனதறிற்கேற்பவொருவன் பொய்யாம னடப்பானாயின் அவனது தருமத்தி னருமை நோக்கியுயர்ந்தோர்பலருமவனையே யெப்போது நினைப்பரென்பதாம்.

௩௰௫-கொள்ளை விரும்பேல

கொள்ளை- பிறர்பொருளைக் கொள்ளையிட, விரும்பேல் ஆசைப்படாதே

௨௱௮௰௨-ம்-அதி-கள்ளாமை-௨-ம்-செய்யுள்

உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன் பொருளைக் *
கள்ளத்தாற் கள்வே மெனல் *

ஒருவன் பிறன்பொருளை வஞ்சித்துத் திருடுதலேயன்றித் திருடநினைத்தலும அவனுக்குப் பாவமாகுமென்பதாம்

௩௰௬- கோதாட்டொழி

கோது-குற்றம்பொருந்திய, ஆட்டு விளையாட்டை, ஒழி- நீக்கு.

௮௱௩௰௨-ம்-அதி-பேதைமை-௨-ம்- செய்யுள்

பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை *
கையல்ல தன்கட் செயல் *

இருமைக்குமாகாவென்று நூலோர்கடிந்தசெயல்களை விரும்பிச்செய்தலே மிகுந்தபேதைமை யென்பதாம்.

சம௩ - சக்கரநெறிநில்

சக்கரநெறி-அரசனுக்கினைவழியில், நில்- நீ அடங்கியிரு.

- ருரு-ம்-அதி-செங்கோன்மை-உ-ம்- செய்யுள்

வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன் *
கோனோக்கி வாழுங் குடி. *

உலகத்துயிர்களெல்லா மழையினால் வாழுமெனினுங் குடிகளரசன் செங்கோ லுளதாயின் வாழுமென்பதாம்

சச - சான்றோரினத்திரு

சான்றோர்-பெரியோருடைய, இனத்து-கூட்டத்தில், இரு-சேர்ந்திரு.

சரு-ம்-அதி-பெரியாரைத்துணைகோடல் கூ-ம்செய்யுள்.

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச் *
செற்றார் செயக்கிடந்த தில் *

பெரியோரினத்திற்சேர்ந்து அவர்கருத்தின்படி நல்வழியிற் செல்லு மரசனுக்குப் பகைவராலொரு துன்பமு முண்டாகா தென்பதாம்.

சரு-சித்திரம் பேசேல்

சித்திரம் - ஆச்சரியச் சொல்லுகளை, பேசேல் வீணாகப் பேசாதே

உ௰-ம்-அதி பயனிலசொல்லாமை- ரு-ம்-செய்யுள்.

நயனில னென்பது சொல்லும் பயனில *
பாரித் துரைக்கு முரை *

பயனில்லாத சொறகளை விரித்துச் சொல்பவனை அச்சொலைக்கொண்டே நீதியில்லாதவ னென்றறிய லாகு மென்பதாம்

சமகூ-சீர்மைமறவேல்

சீர்மை-சிறப்பானகாரியங்களை, மறவேல் - எப்போதும் மறவாதே

கூஅ-ம்-அதி-பெருமை-உ-ம்-செய்யுள்

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா *
செய்தொழில் வேற்றுமை யான் *

வினைவசத்தாற் பஞ்சபூதவிகாரமாகிய உடம்பைப்பெற்று நின்று அதன் பயனனுபவித்த லெல்லார்க்கு மொக்குமாயினு

ற் தொழில்களது வேறுபாட்டாற பெருமை சிறுமையென்னு
ஞ் சிறப்பியல்க ளொவ்வாவாதென்பதாம்

௬௰௭-சுளிக்கச்சொல்லேல்

சுளிக்க-கேட்பவர் கோபிக்கும்படியாக,சொல்லேல்-ஒன்
றும்பேசாதே

௬௰௫-ம்-அதி சொல்வன்மை

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் *
வேட்ப மொழிவதாஞ் சொல் *

நட்பாய்க்கேட்டவரைப் பின் பிரியாமற செய்யுங் குணங்க
ளை யவாவிப் பகையாய்க் கேளாதாரும நட்பைவிரும்பச்சொ
ல்லப்படுவதே சொலலென்பதாம்

௬௰௮-சூதுவிரும்பேல்

சூது- சூதமாடுதறகு, விரும்பேல-எப்போதும் ஆசைப்
படாதே

௯௪-ம்-அதி-சூது-க-ம்-செய்யுள்

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந் *
தூண்டிறபொன் மீன்விழுங்கி யற்று *

சூதாட்டத்தில் வென்றுகொள்ளும்பொருள் இரையென்று
மீன்விழுங்கிய தூண்டின் முள்ளைப்போலச் சூதாடுவார் நீங்
காமைக்கிட்ட தோர் தளையாகி மற்றைத் தொழில்களை யெல
லாங் கெடுத்தும், பின்பு துன்பத்தைத் தருதலால் ஒருவன்
றனக்குச் சூதாடுதலில வெலலவல்லமையிருந்தாலு மதுசெய்
யாமல் விடுகவென்பதாம

௬௰௯-செய்வனதிருந்தச்செய்

செய்வன-செய்யுங்காரியங்களை, திருந்தச்செய் செவ்வை
யாகச்செய்

௪௭-ம்-அதி-தெரிந்துசெயல்வகை-உ-ம்-செய்யுள்

தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க *
கரும்பொருள் யாதொன்று மில *

நல்லினத்தொடு கூடியாராய்ந்து பின்பு தனித்து மாலோ
சித்துச் செய்பவற்கு முடியாத தொன்றுமில்லை யென்பதாம்.

௭௰-சேரிடமறிந்துசேர்

சேரிடம்-சேரத்தகுமிடத்தை, அறிந்து-தெரிந்து, சேர்-
நீ சேரு.

௪௱௯௰௭-ம்-அதி-இடனறிதல்-எ-ம் செய்யுள்

அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை *
எண்ணி யிடத்தாற் செயின் *

குறைவறமுழுது மெண்ணி யிடம்பெறலும் போர்செய்யு மரசற்கு அஞ்சாமையொன்றே போதும் வேறுதுணை வேண்ட வேயில்லை யென்பதாம்

௫௧-சையெனத்திரியேல்

சையென-சீயென்று பிறரிகழ, திரியேல்-பொல்லாங்கு செய்து திரியாதே

௨௱௪௰-ம-அதி-புகழ்-ய-ம்-செய்யுள்

வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய *
வாழ்வாரே வாழா தவர் *

பழியின்றி வாழ்வாரே உயிர்வாழ்வாரென்றும புகழின்றிவாழ்வாரே இறந்தவரென்றும கூறியதாம்

௫௨-சொற்சோர்வுபடேல்

சொல்-பேசுஞ்சொல்லில், சோர்வு குற்றத்தை, படேல்-அடையாதே

௬௱௪௰௭-ம-அதி-சொல்வன்மை-எ-ம்-செய்யுள்

சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை *
யிகல்வெல்லல் யார்க்கு மரிது *

இம்மூன்று குணங்களையு முடை யவனைப் பகைவராய்ப்பிரித்தல் பொருத்தல்செய்து வெல்லுத லொருவர்க்கு மாகாதென்பதாம்

௫௩-சோம்பித்திரியேல்

சோம்பி-சோம்பலடைந்து, திரியேல்-வீணாகத்திரியாதே

௬௱௩-ம்-அதி-மடியின்மை-உ-ம-செய்யுள்

மடிமடிக்கொண் டொழுகும் பேதை பிறந்த *
குடிமடியுந் தன்னினு முந்து *

சோம்பலை யுட்கொண்டு நடக்கின்ற மூடன் பிறந்த குடி அவ னழிதற்கு முன்னாகவே காப்பவரில்லாம லழியுமென்பதாம்

௫௪-தக்கோனெனத்திரி

தக்கோனென - யோக்கியனென்று சொல்லும்படியாக, திரி-பேரெடுத்துத்திரி.

௯௰௯-ம்-அதி-சான்றாண்மை க-ம்-செய்யுள்

கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து *
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு *

நமக்குத்தகுவ திதுவென்றறிந்து சான்றாண்மையை மேற்கொண்டு நடப்பவர்க்கு நற்குணங்களெல்லா மியல்பாக விருக்கு மென்பதாம்

௫௫-தானமதுவிரும்பு.

தானமது-சற்பாத்திரங்களிலே தானஞ்செய்தற்கு, விரும்பு-நீ யாசைப்படு

௨௰௩-ம்-அதி-ஈகை-௪-ம்- செய்யுள்

இன்னா திரக்கப் படுத லிரந்தவ *
ரின்முகங் காணு மளவு *

இரந்தவரது முகமலர்ச்சியைப் பார்க்குமளவும், எல்லாமிரப்பவர்க் கியாதாயினு மொருபொருள் கொடுத்தற் கிசையாமை கூடுமோவென்னும், பயமுண்டாயிருப்பதினாலே இரத்தலேயன்றிக் கொடுத்தலுந் துன்பந்தரு மென்பதாம்.

௫௬-திருமாலுக்கடிமைசெய்

திரு-ஸ்ரீதேவியினுடைய நாயகனாகிய, மாலுக்கு-நாராயணமூர்த்திக்கு, அடிமைசெய்-அடிமைபண்ணு

க-ம்-அதி-கடவுள்வாழ்த்து--அ-ம்-செய்யுள்

அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற் *
பிறவாழி நீந்த லரிது . *

பெரிய வறவடிவினனாகிய கடவுளது திருவடியை நினையாதவர் விரிவாகிய பொருளின்பங்களி னிச்சையை யொழிக்கமாட்டார்க ளென்பதாம்

௫௭-தீவினையகற்று

தீவினை-பாபத்தொழில்களை,அகற்று-எப்போதுஞ் செய்யாமல் நீக்கு

௨௰௧-ம்-அதி-தீவினையச்சம்-௨-ம்-செய்யுள்.

தீயவை தீய பயத்தலாற் றீயவை . *
தீயினு மஞ்சப் படும் . *

ஒருவன்றனக் கிதத்தைக்குறித்துச் செய்யுந்தீவினை பின்சென்று வருத்துவதினாலே அப்படிப்பின் சென்று வருத்துத லில்லாத நெருப்பினுங்கொடிதென்று அதற்கஞ்சவேண்டு மென்பதாம்.

௫௰௮-துன்பத்திற்கிடங்கொடேல்

துன்பத்திற்கு-துன்பம்வந்துசோதறற்கு,இடங்கொடேல்-இடங்கொடாதே

௪௰௩-ம்-அதி-அறிவுடைமை ௯-ம்-செய்யுள்.

எதிரதாக் காக்கு மறிவினார்க கில்லை *
யதிர வருவதோர் நோய், *

பின்வருங் கெடுதியை முன்னறிந்து விலக்குவார்க்கு ஒருதுன்பமுமில்லையென்பதாம்

௫௰௯- தூக்கிவினைசெய்

தூக்கி-முடிக்குமுபாயத்தை ஆராய்ந்தறிந்து, வினை-ஒருதொழிலை, செய்- அதன்பின்புசெய்

௬௰௮-ம-அதி- வினைசெயல்வகை-௬-ம-செய்யுள்

முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும் *
படுபயனும் பார்த்துச் செயல *

முடிவு முதலாகிய மூன்று மாராய்ந்து வினைசெய்க வென்பதாம்

௬௰-தெய்வமிகழேல்

தெய்வம் - எல்லாருந் துதிக்கிற கடவுளை, இகழேல்-நீ நிந்தைசெய்யாதே

௮௰௫-ம்-அதி-புல்லறிவாண்மை-௰-ம-செய்யுள்.

உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத் *
தலகையா வைக்கப் படும் *

பெரியோ ருண்டென்னுங் கடவுளை மறுபிறப்பு முதலானவைகளை யில்லையென்னும் புல்லறிவாள னுலகத்திற் பேயாவானென்பதாம்

௬௰௧ - தேசத்தோடொத்துவாழ்

தேசத்தோடு-தேசாசாரத்தோடு, ஒத்து- விரோதமில்லாமல்,வாழ்- நீ வாழு

௪௰௩-ம்-அதி-அறிவுடைமை-௬-ம்-செய்யுள்

எவ்வ துறைவ துலக முலகத்தோ *
டவ்வ துறைவ தறிவு *

தானினைத்தபடியே நடவாம லுலகவொழுக்கத்தைத் தழுவி நடப்ப தரசனுக் கறிவாகுமென்பதாம்

௯௰௨-தையல்சொற்கேளேல்

தையல்சொல் - பின்னை கேடுதருவதாகிய பெண்புத்தியை, கேளேல்- எப்போதுங்கேளாதே

௯௰௧-ம்-அதி-பெண்வழிச்சேறல்-௪-ம்- செய்யுள்.

மனையாளை யஞ்சு மறுமை யிலாளன் *
வினையாண்மை வீறெய்த லின்று *

மனையாளை யஞ்சுவோனெடுத்த கருமமுடிவுபெறாதென்பதாம்

௯௰௩- தொன்மைமறவேல்

தொன்மை - பழமையாகிய சினேகத்தை, மறவேல் - நீ மறவாதே

௮௰௧-ம்-அதி-பழமை-முதலாம்-செய்யுள்

பழமை யெனப்படுவ தியாதெனின் யாதுங் *
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு *

பழமையோருரிமையால் தம்மைக் கேளாமலொன்றைச் செய்வதுமுதலானவை செய்தாலுடன்படுமநட்பே பழமையாகுமென்பதாம்

௯௰௪-தோற்பனதொடரேல்

தோற்பன-தோற்கும் வழக்குகளில், தொடரேல்- சம்பந்தப்படாதே

௪௰௭-ம்-அதி-தெரிந்துசெயல்வகை- ௪-ம்-செய்யுள்.

தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னும் *
ஏதப்பா டஞ்சு பவர் *

இகழ்ச்சியைஅஞ்சுவோர் துணியப்படாத காரியத்தைச் செய்யத் தொடங்காரென்பதாம்

௯௰௫- நன்மைகடைப்பிடி

நன்மை - நலமுள்ளவைகளை, கடைப்பிடி - உறுதியாகப் பிடி.

௯௰௬-ம்-அதி-குடிமை- ௮-ம்- செய்யுள்

நலத்தின்க ணாரின்மை தோன்றி னவனைக் *
குலத்தின்க ணையப் படும் *

குலநலமுடையவனிடத்து அன்பில்லாமை தோன்றுமாயின் அதனாலவனை யக்குலப்பிறப்பி லுலகத்தார் சந்தேகப்படுவரென்பதாம

௬௬- நாடொப்பனசெய்

நாடு-நாட்டிலுள்ளவர் பலரும், ஒப்பன - ஒத்துக்கொள்ளத்தக்க-நல்லகாரியங்களை, செய்-நீ செய்

௬௰௪-ம்-அதி-அமைச்சு-௭-ம-செய்யுள்

செயற்கை யறிந்தக் கடைத்து முலகத் *
தியற்கை யறிந்து செயல் *

மந்திரியானவன் செய்வது நூல்வழியேயாயினு முலக நடையோடு பொருந்தச் செய்யக்கடவ னென்பதாம்

௬௰௭-நிலையிற்பிரியேல்

நிலையின்-நிற்கின்ற நிலையிலிருந்து, பிரியேல்-எப்போதும் நீங்காதே

௯௰௭-ம்-அதி-மானம்-௪-ம-செய்யுள்

தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர் *
நிலையி னிழிந்தக் கடை *

தாம் உயர்ந்த நிலையினின்றுந் தாழ்ந்தோர் அந்நிலைவிடாது நின்றபோது விரும்பப்படுதலாலும் விட்டுத்தாழ்ந்தபோ திகழப்படுதலாலுந் தலையினீங்கிய மயிரை யொப்ப ரென்பதாம்

௬௰௮-நீர்விளையாடேல்

நீர்-ஆழமுள்ளநீரிலே, விளையாடேல்- நீந்திவிளையாடாதே

௪௰௪-ம்-அதி-குற்றங்கடிதல்-௪-ம-செய்யுள்

குற்றமே காக்கப் பொருளாகக் குற்றமே *
யற்றந் தரூஉம் பகை *

குற்றந் தனக்கழிவைத்தரும் பகையாதலா லதனை யொழிக்க வேண்டுமென்பதாம்

௬௰௯- நுண்மைநுகரேல்

நுண்மை-நோயைத்தருகிற சிற்றுண்டிகளை, நுகரேல்- உண்ணாதே.

௯௰௫-ம்-அதி-மருந்து-௬-ம செய்யுள்

இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங் *
கழிபே ரிரையான்க ணோய் *

உணவைக் குறைவற வுண்பவ னிடத்தி லின்பம் நீங்காமை போல அதிகமாக வுண்பவனிடத்து நோய்நீங்கா தென்பதாம்

எய- நூற்பலகல்

நூற்பல - அறிவைவளர்க்கிற நூல்கள் பலவற்றையும்,கல்-கற்றுககொள்ளு

எயரு-ம-அதி-அவையஞ்சாமை-ரு-ம்-செய்யுள்.

ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா . *
மாற்றங் கொடுத்தற் பொருட்டு *

மந்திரிகள் வேற்று வேந்தர் சபையி லஞ்சா தெதிர்மொழி கொடுத்தறபொருட்டு அளவைநூலைவழுவறக்கற்கவென்பதாம்

எக-நெற்பயிர்விளை

நெற்பயிர்-நெல்லுப்பயிரை, விளை-நீவேண்டியமுயற்சி செய்து விளை

ாச-ம்-அதி-உழவு-ரு-ம்- செய்யுள்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந் . *
தொழுதுண்டு பின்செல் பவர் *

உழுதுபயிர்செய்து அதினாலுண்டு வாழ்கின்றவரே தமக்குரியவொன்றும் தம்மையொத்த மனிதரைவணங்கி அவர் கொடுக்க வாங்கியுண்டு வாழ்கின்றவா ,தமக்குரிய ரல்லொன்றுஞ் சொல்லியதாம்

எஉ-நேர்படவொழுகு.

நேர்பட-செவ்வையான நடையுற, ஒழுகு-விதிவழியிலே நட

யச-ம்-அதி-ஒழுக்கமுடைமை-சு ம்-செய்யுள்

ஒழுக்கத்தி னெல்கா ருரவோ ரிழுக்கத்தி *
னேதம் படுபாக் கறிந்து *

மனவுறுதியை யுடையவர் தம்மொழுக்கங் குறைவுபடி னிழிகுலத்தா ராவோமென் றறிந் தொழுக்கத்திற் சிறிதும் வழுவா ரென்பதாம்

எரு-நைவனநணுகேல்

நைவன - பின்வருத்த மடையத்தக்கவைகளை, நணுகேல்-சேராதே.

உக-ம்-அதி-தீவினையச்சம்-சு-ம்-செய்யுள்

இப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால *
தன்னை யடலவேண்டா தான் .... *

நோய்செய்யும் பாவங்களாற் பின் வருந்தப்படாதிருக்க வெண்ணினவன் பிறனிடத்துத் தீவினைகளைச் செய்யலாகா தென்பதாம்

௭௪-நொய்யவுரையேல்

நொய்ய-அற்பமாகிய சொல்லுகளை, உரையேல்-சொல் லாதே

உ ம்-ம்-அதி-பயனிலசொல்லாமை-ம்-ம்-செய்யுள்.

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க *
சொலலிற் பயனிலாச் சொல் *

ஒருவன் சொல்லத்தக்கது பயனுடைய சொல்லென்றுஞ் சொல்லத்தகாதது பயனில்லாத சொல்லென்றுங் கூறியதாம்

௭௫-நோய்க்கிடங்கொடேல்

நோய்க்கு-வியாதிகளுக்கு, இடங்கொடேல்- அவபத்திய முதலானவைகளைச் செய்து இடங்கொடாதே

௯௫-ம் அதி-மருந்து-உ-ம்-செய்யுள்

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய . . *
தற்றது போற்றியு ணின் . *

ஒருவன் முன்னுண்டதற்றபடியை யதிக பசிமுதலாகிய குறிகளா லறிந்து பின்னுண்பானாயி னவனுடம்பிற்குப் பிணியி ல்லை யென்பதாம்

௭௬-பழிப்பனபகரேல்

பழிப்பன-பிறர் உன்னைப் பழிக்குஞ் சொற்களை, பகரே ல்-பேசாதே

௯௭-ம்-அதி-மானம் ௪-ம்-செய்யுள்

இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல் *

தங்குடிப்பிறப்புத் தாழவருஞ் செயல்களைச் செய்யாவிட் டால் அதனாலேதமக்குமரணம் வருமாயினும் அவைகளைச் செ ய்யாதிருக்கக்கடவ னென்பதாம்

௭௭-பாம்பொடுபழகேல்

பாம்பொடு-பால்கொடுத்தவர்க்கும் விஷந்தருகிற பாம் புக்கொப்பானவரோடு, பழகேல்-சகவாசஞ்செய்யாதே

அக-ம்-அதி-உட்பகை-டு-ம்-செய்யுள்.

உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட் *
பாம்போ டுடனுறைந் தற்று *

உட்பகையாயினாரோடு கூடிவாழ்வோன் ஒருகுடிசையுள் நாகப்பாம்போடுகூட விருப்பவர் இடச்சிறுமையாலும் பழக்கத்தாலும் நிச்சயமாகக் கடிக்கப்பட் டழிதல்போல அவரா லழிவை யடைதற் கையமில்லை யென்பதாம்

௭௮-பிழைபடச்சொல்லேல்.

பிழைபட - குற்றமுண்டாக, சொல்லேல் - ஒன்றையுஞ் சொல்லாதே

சுஎ-ம்-அதி-சொல்வன்மை-௨-ம் செய்யுள்

ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற் *
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு *

நற்சொல்லினாற் செல்வமுந் தீச்சொல்லினாற் கேடும் வருதலால் தனது சொல்லிற் சோர்வுவராமற் காக்கக்கடவ னென்பதாம்

௭௯-பீடுபெறநில்

பீடு - பெருமையை, பெற - அடைய, நில் - நல்வழியிலே நில்லு.

௯௮-ம்-அதி-பெருமை-௪-ம்-செய்யுள்

ஒருமை மகளிரே போலப் பெருமையுந் *
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு *

நிறையின்வழுவாமல்தன்னைத்தான் காத்துக்கொண்டு நடப்பவனுக்குப் பெருமையுண்டாகு மென்பதாம்

௮௰-புகழ்ந்தாரைப்போற்றிவாழ்.

புகழ்ந்தாரை- உன்னைத்துதிசெய்து அடுத்தவரை, போற்றி-கைவிடாமற் காப்பாற்றி, வாழ்-நீ வாழு

௫௩-ம்-அதி-சுற்றந்தழால்-௫-ம்-செய்யுள்

கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய *
சுற்றத்தாற் சுற்றப் படும் *

ஈகையு மின்சொலு முடையவனைத் தமக்குள்ளே ஒருவர்க்கொருவ ரடுக்காகத் தொடர்ந்துநின்ற சுற்றத்தாரெல்லாருஞ் சூழ்வ ரென்பதாம்.

௪௧ பூமிதிருத்தியுண்

பூமி நிலத்தை, திருத்தி-சீர்திருத்திப் பயிர்செய்து, உண-உண்ணு.

௱௪-ம-அதி-உழவு-௫-ம-செய்யுள்.

இரவா ரிரப்பார்க்கொன் றீவார் கரவாது *
கைசெய்தூண் மாலை யவா *

பயிர்செய்துண்ணு மியல்பினோர் பிறரைத் தாமிரவா தம்மை இரப்பவர்க்கு அவர் வேண்டிய தொன்றை இல்லையென்னுமற கொடுத்துக கீர்த்திபெற்று வாழ்வா ரென்பதாம்

௪௨-பெரியாரைத்துணைக்கொள்

பெரியாரை-அறிவிற்சிறந்த பெரியோரை, துணை- உனக்குத்துணையாக, கொள்-செய்துகொள்ளு

௪௫-ம-அதி-பெரியாரைத்துணைக்கோடல்-௩-ம்-செய்யுள்

அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப் *
பேணித் தமராக் கொளல் *

அரசனுக்குப் பெரியாரைத் துணைக்கொள்ளுத லெல்லாப் பேறுகளுள்ளு மரிதாகு மென்பதாம்

௪௩-பேதைமையகற்று

பேதைமை-அறிவிலாமையை, அகற்று- உனக்குள்ளிராமல் நீக்கு

௩௬-ம்-அதி-மெய்யுணர்தல்-அ ம் செய்யுள்

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு *

பிறவிக்கு முதற்காரணமாகிய வஞ்ஞானங்கெட முத்திக்கு நிமித்தகாரணமாகிய மெய்ப்பொருளை யறிவதே யறிவாகு மென்பதாம்

௪௪-பையலோடிணங்கேல்

பையலோடு-சிறுபிள்ளைகளோடு, இணங்கேல்-நீசகவாசஞ் செய்யாதே

௪௬-ம்-அதி-சிற்றினஞ்சேராமை-௰-ம்-செய்யுள்

நல்லினத்தி னூங்குந் துணையில்லைத் தீயினத்தி *
னல்லற் படுப்பதூஉ மில். *

ஒருவனுக்கு நல்வினைத்தின் மேற்படுந் துணையுந் தீவினைத்தின் மேற்படும் பகையுமில்லை யென்பதாம்

அரு-பொருடனைப்போற்றிவாழ்.

பொருடனை - திரவியத்தை, போற்றி-காப்பாற்றி, வாழ்-நீ வாழு.

உரு-ம்-அதி-அருளுடைமை-எ-ம்-செய்யுள்

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க் *
கிவ்வுலக மில்லாகி யாங்கு *

பொருளுடையார்க்கு இவ்வுலகத்தின்பங் கிடைப்பதுபோல வருளுடையவர்க்கே யவ்வுலகத்தின்பங் கிடைக்கு மென்பதாம்

அசு-போர்த்தொழில்புரியேல

போர் - சண்டையாகிய, தொழில்-தொழிலை, புரியேல்-செய்யாதே

அசு-ம்-அதி-இகல்-உ-ம்-செய்யுள்

பகல்கருதிப் பற்றா செயினு மிகல்கருதி *
யின்னா செய்யாமை தலை *

தம்மோடு கூடாமையை யெண்ணி யொருவன் வெறுப்பவைகளைச் செய்தாலும் அவனோடு மாறுபடவெண்ணி அவனுக்குத் துன்பங்களை செய்யாமையால் தாமுயர்வடைவ னென்பதாம்

அஎ-மனந்தடுமாறேல்.

மனம்-மனது, தடுமாறேல் - யாதொருவிஷயத்திலுங் கலங்காதே

சுங-ம்-அதி-இடுக்கணழியாமை-எ-ம்-செய்யுள்

இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக் *
கையாறாக் கொள்ளாதார் மேல் *

துன்பத்துக் கிடங்கொடுத்தா லுடம்பழியுமென் றறிந்தவர் துன்பம்வரி னதனைத் துன்பமாகக் கொள்ளா ரென்பதாம்.

அஅ-மாற்றானுக்கிடங்கொடேல்

மாற்றானுக்கு-பகையாளிக்கு, இடங்கொடேல் - உன்னை நெருங்கிப் பின்வருத்தும்படியாக இடங்கொடாதே

அகூ-ம்-அதி-உட்பகை-உ-ய ௬ செய்யுள்

வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக *
கேள்போல் பகைவர் தொடர்பு *

முன்னே யறிந்து காக்கப்படுதலால் வெளிப்பட நிற்கும் பகைவரை யஞ்சுத லொழிகவென்றும், அவ்வாறறியவுங் காக்கவுங் கூடாமையால் கெடுதற் கையமில்லை யென்பதுபற்றி உட்பகைவர் நட்பை யஞ்சுகவென்றுஞ் சொல்லியதாம்

அக-மிகைபடச்சொல்லேல்

மிகைபட-சொல்லத்தகுவதற்கு அதிகமாக, சொல்லேல்-சொல்லாதே.

உ௰-ம்-அதி-பயனிலசொல்லாமை-கூ-ம்- செய்யுள்

பொருளுணர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருளுணர்ந்த *
மாசறு காட்சி யவர் . *

மயக்கத்தி னிங்கிய மெய்யறிவை யுடையவர்கள் பயனற்ற சொற்களை மறந்துஞ் சொல்லமாட்டா ரென்பதாம்

கூய- மீதூணவிரும்பேல்

மீதூண்- அதிகபோசனத்துக்கு, விரும்பேல் நீ ஆசைப்படாதே

கூரு-ம்-அதி மருந்து-எ-ம்-செய்யுள்

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின் . *
நோயள வின்றிப் படும் *

ஒருவன் தன் சரீரகுணமு மதற்கேற்றவுணவு முரியகாலமு மாராயாமல் வேண்டியதோருணவை உதராக்கினியி னளவல்லாம லதிகமாக வுண்டா லளவில்லாத நோய்களை யடைவ னென்பதாம்

கூயக முனைமுகத்துநில்லேல்

முனைமுகத்து-சண்டை முகத்திலே, நில்லேல்-போய் நில்லாதே

கூயா-ம்-அதி-அறிவுடைமை-உ-ம் செய்யுள்

சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ *
நன்றின்பா லுய்ப்ப தறிவு *

மனத்தை அதுபோம் வழியிற் போகவிடாமல் தீங்குள்ளதிலே நீக்கி நன்மையுள்ளதிலே செலுத்துவ தறிவென்பதாம

௱௨-மூர்க்கரோடிணங்கேல்

மூர்க்கரோடு- அறிவில்லா தவருடன், இணங்கேல்- நட்பு செய்யாதே

௮௰௨-ம்-அதி-தீநட்பு முதலாம் செய்யுள்.

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை . *
பெருகலிற் குன்ற லினிது *

மிகுந்த வாசை யுடையவர்போ லிருந்தாலும் தீக்குண முடையவர் நட்புவளர்தலால் வருங்கேடு குறைந்தால் வாராமையாற் குறைதலே நன்றென்பதாம்

௱௩-மெல்லியாடோள்சேர்

மெல்லியாள் - உன்மனையாளுடைய, தோள்-தோள்களை, சேர்-சேரு

௲௱௩-ம்-அதி-புணர்ச்சிமகிழ்தல் ௱௰௧-ம்-செய்யுள்.

தாமவீழ்வார் மென்றோ டுயிலி னினிதுகொ *
ற்றாமரைக் கண்ணா னுலகு - *

தாம் விரும்பிய பெண்களின் மெல்லிய தோள்களிடத்துத் துயிலபோல விஷ்ணுவினுலகம் இன்பமாகுமோவென்பதாம்

௱௪- மேன்மக்கள் சொற்கேள்

மேன்மக்கள்-உயர்ந்தோருடைய, சொல் சொல்லை,கேள் கேளு

௪௱௰௫-ம்-அதி-கேள்வி ௪௰௨ ம்-செய்யுள்

இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே *
யொழுக்க முடையார்வாய்ச் சொல் *

சேறுநிலத்திற் கூன்றுகோல்போல வொழுக்கமுடையவர் சொல ஆபத்துவேளைக குதவுமென்பதாம்

௱௫ மைவிழியார்மனையகல்

மைவிழியார- பரத்தையருடைய, மனை-வீட்டில், அகல் சேராதே

௯௱௨௰-ம்-அதி வரைவின்மகளிர்-௯௰௨-ம் செய்யுள்

இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந் *
திருநீக்கப் பட்டார தொடர்பு .. .. *

திருவினாலே நீக்கப்பட்டவரா அவருக்கு நட்பாகும் பரத்

தையருங் கள்ளுஞ் சூதுமாகிய விக்குறிகளா லறியப்படுமென் பதாம்

கூ௰௬-மொழிவதற மொழி

மொழிவது-சொல்வதை, அற-சந்தேகமற, மொழி சொல்லு.

கூ௰௫ ம்-அதி சொல்வன்மை-௬-ம்-செய்யுள்

பலசொல்லக் காமுறுவர் மன்றமாசற்ற *
சிலசொல்ல றேற்றா தவர் *

குற்றமற்ற சிலசொற்களைச் சொல்லுதலை யறியாதவர் பல சொற்களைச் சொல்ல விரும்புவரென்பதாம்.

கூ௰எ-மோகத்தை முனி

மோகத்தை மயக்கத்தை, முனி கல்வியறிவைக கொண்டு நீக்கு

௩௰௬ ம்-அதி மெய்யுணர்தல் ௰-ம்-செய்யுள

காமம் வெகுளி மயக்க மிவைமூன்றி *
னாமங்கெடக் கெடு நோய் *

காமம்வெகுளிமயக்கமென்னு மூக்குற்றங்களையுங கெடுத்த வர்களுக் கவைகளின் காரியமாகிய வினைப்பயன்க ளில்லை யெ ன்பதாம்.

கூ௮ வல்லமைப்பேசேல்

வல்லமை உனக்குள்ள வல்லமையை, பேசேல் புகழ்ந்து பேசாதே

அ௫-ம்-அதி-புல்லறி வாண்மை-௫-ம்-செய்யுள்

கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற *
வல்லதூஉ மையந் தரும் *

புல்லறிவாளர்தாங் கல்லாதநூல்களையுங் கற்றாராக மேற்கொ ண்டுநடத்தல் அவர் கற்றதொரு நூலுண்டாயின் அதுவுமிப்ப டிதானோவென்று பிறர்க் கையத்தை விளக்கு மென்பதாம்

கூ௯ வாது முற் கூறேல்.

வாது வாதுகளை, முன் - பெரியோர் முன்னே, கூறேல்- பேசாதே

எ௰உ-ம்-அதி-அவையறிதல்- ௫-ம் செய்யுள்

நன்றென் றவற்றுள்ளு நன்றே முதுவருண். *
ந்து னிளவாக செறிவு .... *

ஆத்திசூடி.

பெரியோர்சபையி லவர்க்குமுற்பட்டொன்றைச்சொல்லா த வடக்கம் ஒருவனுக்குப் பலநற்குணங்களினு முயர்ந்ததாகு மென்பதாம்.

௯௰- வித்தைவிரும்பு

வித்தை - கல்வியைககற்கிறதற்கு, விரும்பு - ஆசைப்படு

௪௰-ம் அதி கல்வி- ௮-ம செய்யுள்.

ஒருமைக்கட் டாங்கற்ற கல்வி யொருவற் . *
கெழுமையு மேமாப் புடைத்து *

ஒருவனொருபிறப்பிற்கற்ற கல்வியானது அவனுக்கெழுபிற ப்பினுஞ் சென்று துணையாமென்பதாம்.

௯௰௧-வீடுபெறநில்.

வீடு மோட்சத்தை, பெற-அடைய,நில்- ஞானவழியிலே நில்லு.

௩௰௫-ம் அதி-துறவு-௩ ம் செய்யுள்

அடல்வேண்டு மைந்தின் புலத்தை விடல்வேண்டும் *
வேண்டிய வெல்லா மொருங்கு *

முத்தியை விரும்பினவர் ஐம்புலன்களையும் வென்று தா மு ன்பு அனுபவித்தற்குப் படைத்த பொருளனைத்தையு மொரோ தரமாகத் துறத்தல் வேண்டுமென்பதாம்

௯௰௨- உத்தமனாயிரு

உத்தமனாய்- பலகுணங்களிலும் நன்மை யுடையவனாகி, இரு-நீஇரு

௱-ம்-அதி-பண்புடைமை-௪-ம்-செய்யுள்

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார் *
பண்பு பாராட்டு முலகு . *

நீதியொடு தருமத்தை விரும்புதலுந் தமக்கும் பிறர்க்கும் பயன்படுதலு முடையவர் குணத்தை யுலகத்தார் கொண்டா டுவ ரென்பதாம.

௯௰௩-ஊருடன்கூடிவாழ்.

ஊருடன்- ஊரிலுள்ளவருடன், கூடி - சேர்ந்து, வாழ்- வாழு

௪௰௩-ம்-அதி அறிவுடைமை-௬-ம்-செய்யுள்.

எவ்வ துறைவ துலக முலகத்தோ .. .. . *
டவ்வ துறைவ தறிவு .... *

தானினைத்தபடியே நடவாம லுலகவொழுக்கத்தைத் தழுவி நடப்ப தரசனுக்கறிவாகு மென்பதாம்

௱௪- வெட்டெனப்பேசேல்

வெட்டென-கத்திவெட்டைப்போல, பேசேல்- கடினமாகப் பேசாதே.

௫௮-ம்-அதி-கண்ணோட்டம்-௧-ம்- செய்யுள்

ஒறுத்தாற்றும் பண்பினார் கணணுங் கணணோடிப் *
பொறுத்தாற்றும் பண்பே தலை *

தம்மை வருத்துவோர் மேலுந் தாக்ஷண்யஞ் செய்து அக்குறறத்தைப் பொறுத்தலே அரசர்க்குப் பிரதான குணமாகு மென்பதாம்

௱௫- வேண்டிவினைசெயேல்

வேண்டி- ஒருபிரயோஜனத்தை இச்சித்து, வினை- தீங்கானசெயலை, செயேல்- ஒருவருக்குஞ் செய்யாதே

௩௨-ம்-அதி-இன்னாசெய்யாமை- முதலாம்-செய்யுள்

சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா *
செய்யாமை மாசற்றார் கோள் *

பிறர்க்குத் துன்பங்களைச்செய்து சிறப்பைத்தரும் அணிமா முதலிய செல்வங்களைப் பெறலாமாயினுங் காம வெகுளிமயக்கமென்னுங் குறறங்க ளொழிந்தவர் அவைகளைச் செய்யா ரென்பதாம்.

௱௬-வைகறைத்துயிலெழு

வைகறை- விடியற்காலத்திலே, துயில்-தூக்கத்தைவிட்டு, எழு-எழுந்திரு.

இஃது விடியுமுன்னம் நித்திரையை விட் டெழுந்திராதார்க்கு அறிவுவிளக்க மின்மையின் இங்ஙனங்கூறியது.

௮௬-ம்-அதி-புல்லறிவாண்மை - முதலாம்-செய்யுள்

அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை *
யின்மையா வையா துலகு *

அறிவின்மை-அறிவில்லாமை-இன்மையுள்- இன்மைபலவுள்ளும்-இன்மை-மிகுந்த இல்லாமையாம்-பிறிதின்மை-மற்றைப்பொரு ளில்லாமையோ வெனின் (அதனை) உலகு-உலகத்தார இன்மையா (அப்படிப்பட்ட) இல்லாமையாக-வையாது-கொள்ளார்.

௱௭-ஒன்னாரைச்சேரேல்

ஒன்னாரை-பகைவரை,சேரேல்-எக்காலத்திலுஞ்சேராதே

௮௰௩-ம்-அதி-கூடாநட்பு- ௮-ம்-செய்யுள்

தொழுதகை யுள்ளும் படை யொடுங்கு மொன்னா *
ரழுத கண்ணீரு மனைத்து *

பகைவர் தமது மெலிவைக் காட்டித் தொழுதாலு மழுதாலு மவாகுறிப்பை நோககிக் காக்கவென்பதாம்

௱௮- ஓரஞ்சொல்லேல்

ஓரம்- பக்ஷபாதம், சொல்லேல்- நீயாதொரு வழக்கிலுஞ் சொல்லாதே

௰௨-ம்-அதி-நடுவுநிலைமை-௮-ம்- செய்யுள்.

சமன்செய்து சீர்தூககுங் கோல்போ லமைந்தொருபாற்*
கோடாமை சான்றோர்க கணி *

முன்னே தான் சமனாகநின்று தன்னிடத்து வைத்த பொருளை அளவுசெய்யுந் தராசுபோல விவ்விலக்கணங்களைப்பொருந்தி யாவர்க்கு மொப்பச சொல்வது பெரியோர்களுக் கழகென்பதாம்.

ஔவையார் - அருளிச்செய்த
நீதிநூலாகிய

ஆத்திசூடி.

முற்றிற்று.



உ

நாயனார் துணை

ஔவையார்

அருளிச்செய்த

கொன்றைவேந்தன்

குறளுதாரணத்துடன்

மூலமும்-உரையும்

கடவுள்வாழ்த்து

கொன்றைவேந்தன்-செல்வனடியிணை ,*
யென்றுமேத்தித்-தொழுவோமியாமே *

(இதன்பொருள்)

கொன்றை - கொன்றைப்பூமாலையைச் சூடிய, வேந்தன்- தலைவனாகிய பரமசிவனுக்கு, செல்வன்- புத்திரனாகிய விநாயகரது, அடியிணை - இரண்டு பாதங்களையும், என்றும் - எந்நாளும், ஏத்தி துதிசெய்து, தொழுவோம்-வணங்குவோம, யாம்- யாங்கள்.

க-அன்னையும்பிதாவு முன்னறிதெய்வம்

அன்னையும்-தாயும், பிதாவும்-தகப்பனும், முன்னறி-முன் காணப்பட்ட, தெய்வம்-தெய்வங்களாவார்

க-ம-அதி-கடவுள்வாழ்த்து-க-ம்-செய்யுள்

அகர முதல வெழுத் தெல்லா மாதி *
பகவன் முதற்றே யுலகு *

(இதனதுதாற்பரியம்)நாதமாத்திரமான வியல்பினாலே பிறத்தலால் அகரம்- எல்லா வெழுத்திற்குந் தலைமையதாக விருத்தலபோல இயற்கையறிவினாலேமுழுது மறிதலால்ஆதிபகவன் உலகத்திற்குத் தலைவனாக விருக்கின்றானென்பதாம்.

௨- ஆலயந்தொழுவது சாலவுநன்று

ஆலயம் - கோயிலுக்குப் போய், தொழுவது - கடவுளை வணங்குவது, சாலவும்-மிகவும், நன்று-நல்லதாகும்.

குசு-ம்-அதி-பொச்சாவாமை-அ-ம் செய்யுள்.

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா *
இகழ்ந்தார்க் கெழுமையு மில் . . . *

நீதிநூலுடையார் புகழ்ந்தவைகளைச் செய்யாது மறந்தவர்களுக்கு எழுபிறப்பிலு மின்பமில்லையென்பதாம்.

௩-இல்லறமல்லது நல்லறமன்று

இல்லறம்- மனையாளோடு கூடிச்செய்யு மில்லறமானது, நல்லறம் எளிதிற்செய்யத்தகும் அறமாகும் அல்லது-இலலறமல்லாத துறவறமானது-அன்று-எளிதிற செய்யத்தகும் அறம் அன்றாகும்

கு-ம்-அதி இல்வாழ்க்கை-கூ-ம்-செய்யுள்

அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும் . . *
பிறன் பழிப்ப தில்லாயி னன்று . *

இருவகையறத்தினு மில்லறமே சிறப்புடைய தென்பதாம்.

௪- ஈயார்தேட்டைத் தீயார்கொள்வர்

ஈயார்-கொடாதவருடைய, தேட்டை - சம்பாத்தியத்தை, தீயார்-கள்ளர்முதலானதீயவர்-கொள்வர்-அவர் தான்பட்டபடி அபகரிப்பார்

ளக-ம அதி-நன்றியில்செல்வம்-கூ-ம்-செய்யுள்.

ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்கொன்
றீத லியல்பிலா தான் *

தானு மனுபவியாமல் யோக்கியர்க்குங் கொடாமலிருக்கின்றவ னவ்விரண்டுஞ் செய்தற் கிடமுடைய செல்வத்திற்கு நோயாகு மென்பதாம்.

௫-உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகு

உண்டி-சாப்பாடு,சுருங்குதல்- அளவிற்குறைதல், பெண்டிர்க்கு- பெண்களுக்கு, அழகு அழகாகும்.

கூ-ம்-அதி வாழ்க்கைத்துணை நலம்- முதலாம்-செய்யுள்.

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான் *
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை . . . *

நற்குண நற்செய்கைகளையுடையவளாய் வரவுக்கேற்ற செலவுசெய்யு மனையாளே யொருவ னில்வாழ்க்கைக்குத் துணையாவ ளென்பதாம்

௬-ஊருடன்பகைக்கின் வேருடன்கெடும்

ஊருடன்-தானிருக்குமூராருடன், பகைக்கின் ஒருவன்விரோதித்தால், வேருடன்-தன்வமிசத்துடன், கெடும- அவன் கெடுவான்.

௮௮-ம்-அதி-பகைத்திறந்தெரிதல் ௩-ம்- செய்யுள்

ஏமுற் றவரினு மேழை தமியனாய்ப் *
பல்லார் பகைகொள் பவன் *

சுற்றம் நட்பு படை முதலாகிய துணையிருந்த விடத்தும் வெல்லுதல் சந்தேகமாகவிருக்க அத்துணையின்றித் தனியனாயிருந்து பலரோடு பகைகொள்பவனும் பித்தருமயக்கமுதாமெலாப்பராயினும் இவரதனு லழிவடையாமை யாலும் அவனழிவடைதலாலும் அவன் பித்தனாககாட்டினும் புத்தியில்லாதவனாவனென்பதாம்

௭-எண்ணுமெழுத்துங் கணெணத்தகும்

எண்ணும் - கணிதநூலும், எழுத்தும் - இலக்கணநூலும், கண்ணெணத்தகும்-மனிதருக்கு இரண்டுகண்களென்று சொல்லப்படும்.

௪௰-ம்-அதி-கல்வி-௨-ம்-செய்யுள்

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங் *
கண்ணென்ப வாழு முயிர்க்கு *

அறநூன்முதலியவைகளை யறிதற்குக் கணிதநூலுமிலக்கண நூலுங் கருவியாகு மென்பதாம.

௮-ஏவாமக்கள் மூவாமருந்து

ஏவா பெற்றவர் இது செய்யென்பதற்குமுன் குறிப்பறிந்து செய்கிற, மக்கள்-பிள்ளைகள், மூவாமருந்து-அப்பெற்றவர்களுக்குத் தேவாமிர்தத்திற் கொப்பாவார்

௭௧-ம்-அதி குறிப்பறிதல்-௩-ம்-செய்யுள்

குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள் *
யாது கொடுத்துங் கொளல். ... .. ,.. *

தன்குறிப்பறிதலாற் பிறர்குறிப்பறியுந் தன்மையுடையோ

ளைப் புறத்திருப்பாகிய நாடு முதலானவைகளி லொன்றைக் கொடுத்தாயினும், துணையாகக்கொள்க வென்பதாம்.

௧-ஐயம்புகினுஞ் செய்வனசெய்

ஐயம்புகினும் - பிச்சையெடுத்தாலும், செய்வன - செய்யத்தகும் கருமங்களை, செய்-விடாது செய்வாயாக.

௬௮-ம் அதி பெருமை-௩ ம் செய்யுள்

பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி . . . *
னருமை யுடைய செயல் . *

பெருமையை யுடையோர் வறுமையடைந்தபோதும், பிறரால் செய்தற்கரியசெயல்களைச் செய்துமுடிப்ப ரென்பதாம்

௰-ஒருவனைப்பற்றி யோரகத்திரு

ஒருவனை-நற்குணமுடைய ஒருவனை, பற்றி-துணையாகப் பற்றிக்கொண்டு, ஓரகத்து - ஓரிடத்திலேதானே, இரு-எப்போதும் வாசம்பண்ணு.

௪௬-ம்-அதி சிற்றினஞ்சேராமை ௰-ம்-செய்யுள்.

நல்லினத்தி னூங்குந் துணையில்லைத் தீயினத்தி *
னல்லற் படுப்பதூஉ மில் . *

ஒருவனுக்கு நல்லினத்தின்மேற்படுந் துணையும், தீயினத்தின் மேற்படும் பகையு மில்லை யென்பதாம்.

௰௧-ஓதலினன்றே வேதியர்கொழுக்கம்

ஓதலின் - வேதமோதலினும், நன்றே-நலலதே, வேதியர்க்கு-பார்ப்பாருக்கு, ஒழுக்கம்-ஆசாரம்

௰௪-ம்-அதி-ஒழுக்கமுடைமை-௪-ம்-செய்யுள்.

மறப்பினு மோத்துக கொளலாகும் பார்ப்பான் *
பிறப்பொழுக்கங் குன்றக கெடும் *

பிராமணன் முன்கற்ற வேதத்தை மறந்தானாயினுந் தன்வருணங்கெடாமையாற் பின்னு மதனைக் கற்றுக்கொள்ளலாந் தன்னொழுக்கத்தை விடுவானாயி னவனுடைய வுயர்ந்த வருணங்கெடு மென்பதாம்

௰௨- ஒளவியம்பேசுத லாக்கத்திற்கழிவு.

ஒளவியம்-பொறாமைச்சொல்லுகளை, பேசுதல்-ஒருவனைத்துப் பேசுதல், ஆக்கத்திற்கு- அவன் செல்வத்திற்கு, அழிவு-கேட்டைத்தருவதாகும்.

* ௯௰எ-ம்-அதி-அழுக்காறுடைமை-எ-ம்- செய்யுள்
அவ்வித்தழுக்கா றுடையானைச் செய்யவ ள் . . . *
டவ்வையைக் காட்டி விடும் . . . *

பிறர் செல்வங்கண்டு பொறாமைப் படுகின்றவனைத் திருமக ளானவள் மூதேவியினிடத்துச் சேர்த்துத் தானீங்கிவிடுவ ளெ ன்பதாம்

௰௩-அஃகமுங்காசுஞ் சிக்கெனத்தேடு

அஃகமுந் தானியத்தையும், காசும்- திரவியத்தையும், சிக் கெனத்தேடு-வீண்செலவு செய்யாமற் சம்பாதி

எசு-ம்-அதி-பொருள்செயல்வகை-உ-ம்- செய்யுள்.
இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை *
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு *

எல்லா நன்மையு முடையராயினும் பொருளில்லாரை யெ ல்லாரு மிகழ்வரொன்று மெல்லாத் தீங்கையுமுடையராயினும், பொருளுடையவரை யெல்லாரு முயர்த்துவ ரொன்றுஞ் சொ ல்லியதாம்.

௰௪-கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை

கற்பெனப்படுவது- பெண்டுகளுக்குக கறபென்று சொ ல்லப் படுவது, சொல்-கணவர்சொல்லுக்கு, திறம்பாமை- தப் பி நடவாமையாம்.

௬-ம்-அதி-வாழ்க்கைத்துணைநலம்-௪-ம்- செய்யுள்
பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந் *
திண்மையுண் டாகப் பெறின் *

ஒருவன் அறம்பொரு ளின்பமென்னு மூன்றையும்பொரு ந்துதற்குக் கற்புடையமனையா ளேதுவாகலா லவனுக்கிவளின் மேற்பட்ட பொருள் வேறொன்றில்லை யென்பதாம்.

௰௫- காவல்தானே பாவையாக்கழகு.

காவல்தானே-கற்புக்கழிவுவராமற காவலோடு கூடியிருக் கிறதுதானே, பாவையர்க்கு- பாவைபோலு முருவுடையபெ ண்டுகளுக்கு,அழகு- அழகாகும்.

௬-ம்-அதி-வாழ்க்கைத்துணைநலம்- எ-ம்-செய்யுள்
சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர் *
நிறைகாக்குங் காப்பே தலை . . . *

மாதர்களுக்கு கற்பின்வழி நிறுத்தப்படு மனக்காவலில்லாத விடத்து மதிற்காவல் முதலிய காவல்கள் சிறிதும் பயன் படா வென்பதாம

௬௯-கிட்டாதாயின் வெட்டென மற.

கிட்டாதாயின் - இச்சித்த ஒருபொருள் கிடைப்ப தரி தாக விருந்தால், வெட்டென - சீக்கிரத்திலேதானே, மற அப் பொருளைமறந்துவிடு.

௩௭-ம்-அதி- அவாவறுத்தல் -௰-ம்-செய்யுள்

ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே , . *
பேரா வியற்கை தரும் , . *

ஒருபோதும் நிறம்பாத இயல்பையுடைய அவாவை ஒருவ ன் விடுவானாயின் அவ் விடுகை அவனுககுஅப்போதே யெப் போதும் ஒரு நிலைமையனாந் தன்மையை கொடுககு (மென்ப தாம

௭௰-கீழோராயினுந் தாழவுரை,

கீழோராயினும்- கேடபவர் உனககுக் கீழ்ப்பட்டவராக விருந்தாலும், தாழ-உன்சொல வணககமுடையதாகவிருக்க,உ ரை-அவருடன்பேசு.

௰௩-ம்-அதி-அடக்கமுடைமை-௫-ம்-செய்யுள்

எல்லா-ககு நன்றாம் பணித லவருள்ளுஞ் , *
செல்வாக்கே செல்வந் தகைத்து . . .*

அடக்கமான தெல்லார்க்கு மொப்ப நன்றாயினுஞ் செல்வ முடை யாாககே வேறொரு செல்வமாகத் தோன்று மென்ப தாம்,

௭௧-குற்றம்பார்க்கிற் சுற்றமில்லை

குற்றம்-குற்றங்களை, பார்க்கின்-சோதித்துப்பார்த்தால், சுற்றம உறவாமவார், இல்லை-ஒருவருமில்லை

௫௰௮-ம் அதி-கண்ணோட்டம்-௮-ம் செய்யுள்.

கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க் . *
குரிமை யுடைத்திவ் வுலகு . ., .. . *

முறைசெய்தலாகிய தந்தொழிலழியாமல் தாக்ஷிண்யஞ்செ ய்யு மரச ரிவவுலகததை நெடுநா ளாள்வரொன்பதாம்.

௭௨-கூரம்பாயினும் வீரியம்பேசேல்.

கூரம்பாயினுங்-உன கையிலிருக்கிறது கூர்மையொருந்

றிய அம்பாகவிருந்தாலும்,வீரியம்-வீரத்தன்மையை, பேசேல்- விளக்கப்பேசாதே

௧௩-ம்-அதி- அடக்கமுடைமை-௰-ம்- செய்யுள்.

கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி . . *
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து. . . . . . *

மனத்திற் கோபந்தோன்றாமற் காத்துக் கல்வி யுடையவனா யடங்கி நடப்பவனைத் தருமந் தானே சென்றடையு மென்பதாம்.

உ௰-கெடுவதுசெய்யின் விடுவதுகருமம்

கெடுவது-கெடுவதை,செய்யின்-தன்சினேகன் செய்தால், விடுவது-அவன்சினேகத்தைவிடுவதே, கருமம்-விவேகிக்கு நற்செய்கை யென்பதாம்.

௮௨-ம்-அதி-தீநட்பு-௮-ம் செய்யுள்.

ஒல்லுங்கரும முடற்று பவர்கேண்மை .... . *
சொல்லாடார் சோர விடல் . . . . *

தம்மாலே முடியுந்தொழிலை முடியா தாகச் செய்பவர் நட்பை அவர்க்குத் தெரியாமற் சோரவிடுக வென்பதாம்.

உக-கேட்டினுறுதி கூட்டுமுடைமை.

கேட்டில்-கைப்பொருளிழந்தபோதில்,உறுதி- மனந்தளராமை,உடைமை- முன்போல அப்பொருளுடையனுந் தன்மையை, கூட்டும்-சேர்க்கும்.

௬௰-ம்-அதி-ஊக்கமுடைமை-௩-ம்-செய்யுள்.

ஆக்க மிழந்தோமென் றல்லாவா ரூக்க. . *
மொருவந்தங் கைத்துடை யார் . . . . *

நிலைபெற்ற வுள்ளக்கிளர்ச்சியைக் கைப்பொருளாக வுடையவர் செல்வத்தை இழக்கினுந் துன்ப மடையா ரென்பதாம்.

உஉ-கைப்பொருடன்னின் மெய்ப்பொருள்கல்வி.

கைப்பொருடன்னின்- கையிலிருக்கிற பொருளைப்பார்க்கிலும், மெய்ப்பொருள்-மெய்ப்பொருளாவது-கல்வி- கற்ற வித்தையேயாம்.

௪௰-ம்-அதி-கல்வி-௰-ம்-செய்யுள்.

கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவர்க்கு ..... *
மாடல்ல மற்றை யவை . . . . *

ஒருவனுக்கு அழிவில்லாத செல்வமாவது வித்தையாகும், அதுநீங்கலாகிய மணியும் பொன்னுமுதலான செல்வம் செல்வமல்லவென்பதாம்.

௨௩-கொற்றவனறித லுற்றிடத்துதவி

கொற்றவன்-அரசனானவன், அறிதல்- ஒருவனைஅறிந்திருக்கிறது, உற்றிடத்து-அவனுக்கு ஆபத்து வந்தவிடத்து, உதவி-உதவியாகும்

௪௮-ம்-அதி-வலியறிதல்-௨-ம்- செய்யுள்.

ஒல்வ தறிவ தறிந்ததன்கட் டங்கிச் .. ... *
செல்வார்க்குச் செல்லாத தில் *

செய்யக்கூடுந் தொழிலையு மறியவேண்டும் வலியையு மறிந்து செய்யு மரசர்க்கு முடியாதபொருளில்லை யென்பதாம்.

௨௪-கோட்செவிக்குறளை காற்றுடனெருப்பு

கோட்செவி-கோள்கேட்குங் குணத்தோன்காதில், குறளை பிறர்மேலொருவன்வந்துசொன்ன-கோள், காற்றுடன்- காற்றுடன்சேர்ந்த, நெருப்பு- நெருப்பைப்போலமூளும்.

௰௯-ம் அதி-புறங்கூறாமை-௩-ம்-செய்யுள்.

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத . *
லறங்கூறு மாக்கந் தரும் . . . . . *

ஒருவன் பிறனைக் காணாதவிடத் திகழ்ந்துங் கண்டவிடத்துப் புகழ்ந்து முயிர்வாழ்வதைப்பார்க்கிலும், அது செய்யா திறந்துவிடுவானாயின் அக்குற்ற மொழிதலா லவன் மறுபிறப்பிற் புறங்கூறாதவர் பெறும் பலனைப் பெறுவனென்பதாம்

௨௫-கௌவைசொல்லி னெவ்வருக்கும்பகை

கௌவை - பிறர்மேலே பழிச்சொல்லுகளை, சொல்லின்- ஒருவன்சொல்லினால், எவ்வருக்கும் எல்லாருக்கும், பகை அவன் பகையாவான்

௪௪-ம்-அதி-குற்றங்கடிதல்-௩-ம்-செய்யுள்

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே . *
யற்றந் தரூஉம் பகை . . . . . . *

தனக்கு முடிவைத்தரூஉம் பகை குற்றமேயாம்.—ஆதலால் அக்குற்றம் தன்னிடத்துவராமையே பயனாகக்கொண்டு காக்கவேண்டு மென்பதாம்.

௨௬-சந்ததிக்கழகு வந்திசெய்யாமை.

சந்ததிக்கு-தன் வம்சம்பெருகுதற்கு,அழகு-அழகாவது, வந்தி-மலடியாக,செய்யாமை செய்யாமல் தன்மனையாளோடு கூடிவாழ்தலாம்.

எ-ம்-அதி-புதல்வரைப்பெறுதல்-க ம்-செய்யுள்.

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த *
மக்கட்பே றல்ல பிற *

ஒருவன் பெறும்பேறுகளுள் அறியவேண்டியவை யறிதற்குரிய புத்திரரைப் பெறுதலல்லது பிறபேறுகளை யாமறிப்ப தில்லை யென்பதாம்.

௨௭-சான்றோரென்கை யீன்றோட்கழகு

சான்றோரென்கை-தன்புத்திரரைக் கல்வியறிவால்,நிறைந்தோரென்று - கற்றவர்சொல்லுகிறது, ஈன்றோட்கு - பெற்றவளுக்கு, அழகு-அழகாகும்.

எ-ம்-அதி-புதல்வரைப்பெறுதல்-௯-ம்-செய்யுள்

ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச் *
சான்றோ னெனக்கேட்ட தாய் . . *

தன்மகனைக் கல்விகேள்விகளானிறைந்தானென் றறிவுடையவர் சொல்லக்கேட்ட தாய்க்கு,பெற்றபொழுதுண்டாகிய மகிழ்ச்சியினு மதிக மகிழ்ச்சி யுண்டாமென்பதாம்.

௨அ-சிவத்தைப்பேணிற் றவத்திறகழகு

சிவத்தை எண்ணியபயனைத்தரும் பரமசிவத்தை, பேணின்-குறித்துத் தவஞ்செய்தால்,தவத்திற்கு-செய்யும் அந்தவத்தினுக்கு, அழகு அழகாகும்.

௨எ ம்-அதி-தவம்-௯-ம்-செய்யுள்.

கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி *
னாற்ற றலைப்பட்ட வர்க்கு *

தவஞ்செய்து சாபானுக்கிரக வல்லமைபெற்றவர் தம்மைக் கொல்லவருங் கூற்றுவனையும் வெல்வரென்பதாம்.

௨௯-சேரைத்தேடி-னேரைத்தேடு

சேரை-சௌக்கியத்தை-தேடின் உனக்குத்தேடுவாயானால், ஏரை-பயிரிடுந்தொழிலை, தேடு-தேடிக்கொள்ளு

௱௪-ம்-அதி-உழவு-௧-ம்-செய்யுள்

சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனா . . . *
லுழந்து முழவே தலை. . . . . *

பிறதொழில்களாற் பொருள்கிடைத்தபோது முன்னவின் பொருட்டுப் பயிர்செய்வோரிடத்துச செலலவேண்டுதலால் வருத்தமுள்ள தொழிலாயினு முழவுத் தொழிலே தலையாகு மென்பதாம்.

௩௰-சுற்றத்திற்கழகு சூழவிருத்தல்.

சுற்றத்திறகு-உறவின்முறையாருக்கு, அழகு-அழகாவது, சூழ-சுபாசுபங்களிலே பலரும் வந்து சூழ, இருத்தல் சமீபங் களிலே குடியிருக்கையாம்

௫௩-ம்-அதி-சுற்றந்தழால்-௪-ம்-செய்யுள்

சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான் *
பெற்றத்தாற் பெற்ற பயன் *

ஒருவன் செலவம்பெறறதற்குப்பயன் தன்னைவிட்டு நீங்கா திருக்கும்படிச் சுற்றத்தாரைத் தழுவுதலாகு மென்பதாம்

௩௧ சூதும்வாதும் வேதனைசெய்யும்

சூதும்-சூதமாடுதலும், வாதும் - தற்கம்பேசுதலும், வே தனை - பகையாகவரும் வருத்தத்தை, செய்யும் - அவைகளிலே பழகுகிறவருககு உண்டாக்கும்

௯௪-ம் அதி-சூது-௪-ம் செய்யுள்.

சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின் . . *
வறுமை தருவதொன் றில் . .. . *

தன்னை விரும்பினோர்க்குப் பலதுன்பங்களையுஞ் செய்து, புகழையழிக்குஞ் சூதாட்டம்போல ஒருவனுககு வறுமையை தருவ தொன்றில்லை யென்பதாம்

௩௨-செய்தவமறந்தாற் கைதவமாளும்.

செய்தவம்- செய்யுந்தவத்தை, மறந்தால் - ஒருவன்மறந் தால், கைதவம்-வஞ்சனையாகிய மாயையானது,ஆளும்-அவனை அடிமைகொண்டாளும்

உ௭-ம்-அதி-தவம்-௬-ம்-செய்யுள்.

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற் றல்லா. *
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு . . . . *

தவத்தினாலே ஞானம்பிறந்து முத்தியடைதலினாலே தவஞ் செய்வாரே தங்காரியஞ் செய்பவ ராவரென்றுஞ், சிற்றின்பத் தை விரும்பி பாவஞ்செய்து கெடுதலினாலே பொருளின்பங்க ளைத் தேடுகின்றவரை யவஞ்செய்வாரென்றுஞ்சொல்லியதாம்.

கக-சேமம்புகினுஞ் சாமத்துறங்கு

சேமம்-காவலிலே, புகினும்போய்- ஒருவேலையு மில்லா திருந்தாலும், சாமத்துறினந்தோறும்-யாதிராததிரியானபின், உறங்கு-நித்திரை பண்ணு

சுக-ம்-அதி மடியின்மை- ச-ம் செய்யுள்

குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து *
மாணட வுஞற்றி லவர்கு *

முயற்சியில்லாதவர்க்குக் குடியுங்கெட்டுகுற்றங்களும்பெருகும என்பதாம்

கச-சையொத்திருந்தா லையமிட்டுண்

சையொத்திருந்தால் - கைப்பொருளொத்திருந்தால்,ஐயமிட்டு பிச்சையிட்டு, உண்-நீயு முண்ணு.

உக-ம்-அதி-ஈகை-அ-ம்-செய்யுள்

ஈத்துவகு மின்ப மறியார்கொ ருமுடைமை *
வைத்திழக்கும் வன்க ணவர் *

ஈகையினலே தரித்திரரை மகிழ்வித்து அவர் மகிழ்ச்சியைக் கண்டருளுடையா ரடையு மின்பத்தைப் பொருளை வைத்திழப்பவ ரறிவாராயிற் றமு மவ்வின்பத்தையடைவரல்லது வைத்திழவா ரென்பதாம்

கரு-சொககரொன்பவ ரத்தம்பெறுவர்

சொககரென்பவர்- பொன்னுடையவரென்று சொல்லப்படுவோர், அத்தம்- அறமு மின்பமுமாகிய மற்றைப் புருஷார்த்தங்களையும், பெறுவா-பெறுவார்.

எ௰சு-ம்-அதி பொருள்செயல்வகை-ச-ம்-செய்யுள்

அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து *
தீதின்றி வந்த பொருள் *

நல்வழியில் வந்தபொரு ளறமு மின்பமுந் தருதலா லவ்வழியிற் சம்பாதிககவேண்டு மென்பதாம்

கசு சோம்பரொன்பவர் தேம்பித்திரிவர்

சோம்பரென்பவர்-சோம்பலுடையவ ரென்று சொல்லப்படுவோர், தேம்பி-வறுமையினல் வருந்தி, திரிவர்-பிறரிடத்திறபோய் இரந்து திரிவார்.

சாஉ ம் அதி-ஆள்வினையுடைமை எ ம்;செய்யுள்.

மடியுளாள் மாமுகடி யென்ப மடியிலான் *
றாளுளா டாமரையி னாள் *

சோம்பலின் மூதேவியும், முயற்சியிற சிதேவியு மிருப்ப ராதலாற சோம்பலைவிட்டு முயறசிசெய்க வென்பதாம்

ளஎ-தந்தைசொன்மிககு மந்திரமில்லை

தந்தை-தகப்பனுடைய, சொல்-சொல்லுக்கு, மிகக-மேற்பட்ட, மந்திரம்-பலனைத்தரு மந்திரமானது, இல்லை - ஒருவனுக்கு எந்த நூலிலு மில்லை

கும்-ம் அதி பெரியாரைப்பிழையாமை உ-ம்-செய்யுள்

பெரியாரைப் பேணு தொழுகிற் பெரியாராற் *
பேரா விடுமபை தரும் . *

பெரியோரை யவமதித்து நடந்தா லந்நடக்கை தீங்கைத் தரு மென்பதாம

ளஅ-தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை

தாய் - தாயினுடைய, சொல்-சொலலை, துறந்தால் - ஒருவன் தள்ளிவிட்டால், வாசகம்-அதற்கு மேற்பட்ட வேதவாக்கியம், இலலை-அவனுககிலலை

கும ம-அதி-பெரியாரைப்பிழையாமை-ஈ-ம்-செய்யுள்.

எரியாற சுடப்படினு முய்வுண்டா முய்யார் *
பெரியா ப் பிழைத்தொழுகு வார் *

தியினாற் சுடப்படினு மொருவழியிற் பிழைப்புண்டாம். பெரியோர்க்குப் பிழைசெய்து நடப்பவர் பிழையாா என்டதாம

ளக-திரைகடலோடியுந் திரவியந்தேடு

திரைகடல்-அலைகளையுடைய கடலிலே, ஓடியும்-கப்பலேறித தூரதேசங்களிறபோயாகிலும், திரவியம் - திரவியத்தை, தேடு சமபாதி

எசா-ம்-அதி-பொருள்செயல்வகை-க-ம் செய்யுள்

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு . *
மெஃகதனிற் கூரிய தில் . *

திரவியத்தைச் சம்பாதிககக்கடவர் அத்திரவியம் பகைவர் செருககைக கெடுக்கு மாயுதமாம். அதுபோலக்கூரிய ஆயுதம் வேறில்லை என்பதாம்.

சம-நீராக்கோபம் போராமுடியும்.

நீராகோபம் - எப்போது மொருவனிடத்து நீங்காத கோபமானது, போராமுடியும் பின் சண்டையாகமுடியும்

௬௪-ம்-அதி வெகுளாமை ௩-ம் செய்யுள்

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும் ௪

கோபமாகிய நெருப்புத் தனக்கிடமானவரையேயன்றி யவர்க கிதோபதேசஞ்செய்து, பிறவிக்கடலைக்கடப்பிக்கும் தெப்பம்போலவாரையுஞ் சுடுமென்பதாம்

சக-துடியாப்பெண்டீர் மடியினெருப்பு

துடியா - தங்கணவருக்குத் துன்பம்வந்தபோது மனம் பதையாத, பெண்டீர் - பெண்டுகள், மடியில- அவாவயிற்றில் நெருப்பு சுட்டு வருத்துவதாகிய நெருப்பிருக்கிறதற கொப பாவர்

௬-ம்-அதி-வாழ்க்கைத்துணைநலம்-உ ம்-செய்யுள்

மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை ௪
யெனைமாட்சித் தாயினு மில் . ௩

ஒருவன் மனையாளிடத்து நற்குண நற்செய்கைக ளில்லா திருந்தா லவன் பெருஞ்செல்வ முடையவரு யிருந்தாலு மில வாழ்க்கை நடவாதென்பதாம்

சஉ-தூற்றும்பெண்டீர் கூற்றெனத்தகும்

தூற்றும்- தங்கணவர்மேற் குற்றஞ்சொல்லித் தூற்றுகிற பெண்டீர் பெண்டுகளை, கூற்றெனத்தகும்-அவருக்கு கெமனெ ன் றெண்ணத்தகும்

௬-ம்-அதி-வாழ்க்கைத்துணைநலம் ௬-ம்-செய்யுள்

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற ௪
சொற்காத்துச் சோர்விலாள் பெண் ௩

கற்பினின்றுவழுவாமல் தன்னைக்காத்துத் தன்கணவனைக் காப்பாற்றி நற்குண நற்செய்கைகளை மறவாதவளே மனையவள் என்பதாம்

சங-தெய்வஞ்சீறிற் கைதவமாளும்

தெய்வம்-தெய்வமானது, சீறின்-ஒருவனைக்கோபித்தால்,

கைதவம்-அவனுக்கு கைகூடியிருந்த தவமும், மாளும்-பயன் கொடாமலழியும

க-ம-அதி-கடவுள்வாழ்த்து-ய-ம்-செய்யுள்

பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா *
ரிறைவனடி சேரா தார் *

கடவுளடியை இடைவிடாது நினைத்தவர் பிறவியை யொழிப்ப ரென்றும், நினையாதவரதனை யொழிக்கமாட்டா ரென்றுங் கூறியதாம்

சச-தேடாதழிக்கிற் பாடாமுடியும்.

தேடாது - ஒருவன் வருந்தி சம்பாதியாமல், அழிக்கின்-இருக்கிற பொருளைச் செலவழித்தால், பாடாமுடியும அவனுக்குப் பின் வருத்தமாக முடியும்

சஎ-ம்-அதி-தெரிந்துசெயல்வகை-ச-ம்-செய்யுள்

தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு *
மேதப்பா டஞ்சு பவர் *

இகழ்ச்சியை யஞ்சுவோர் துணியப்படாத காரியத்தைச் செய்யத் தொடங்கா ரென்பதாம்.

சடு-தையுமாசியும் வையகத்துறங்கு

தையும் - தைமாதத்திலும், மாசியும் - மாசிமாதத்திலும், வையகத்து-பனிவருத்தந்தராத-வைககோல்வீட்டிலே,உறங்கு நித்திரை பண்ணு

சகூ-ம்-அதி காலமறிதல் உ-ம்-செய்யுள்

பருவத்தோ டொட்ட ஒழுக றிருவினைத் *
தீராமை யார்க்குங் கயிறு *

காலம்பார்த்துப் போர்க்குச் செல்லுகின்ற வரச னெக்காலத்துஞ் செல்வத்துடனே வாழ்வ னென்பதாம்

சசா-தொழுதூண்சுவையி னுழுதூணினிது

தொழுது - ஒருவரிடத்திலேசேவித்து, ஊணசுவையின்-உண்ணுமுணவின் சுவையினும், உழுது - உழுதுபயிர்செய்து, ஊண- உணணுமுணவின்சுவை, இனிது - இன்பந்தருவதாகும்.

ாச-ம்-அதி-உழவு-ங-ம்-செய்யுள்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந் *
தொழுதுண்டு பின்செல் பவர் *

உழுது பயிர்செய்து அதனாலுண்டு வாழ்கின்றவரே தமக்குரியவரொன்றும், தம்மையொத்த மனிதரை வணங்கி, அவர் கொடுக்க வாங்கி யுண்டு வாழ்கின்றவர் தமக்குரிய நலமொன்றுஞ் சொல்லியதாம்

௪௭ தோழனோடு மேழைமைபேசேல்

தோழனோடும்-உன் சிநேகிதனோடும், ஏழைமை-உனக்கிருக்கிற சிறுமையை, பேசேல-நீ எப்படிப்பட்ட வேளையிலேயும் பேசாதே.

௱௭ ம்-அதி-இரவச்சம்-௪ ம்-செய்யுள்

இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக் *
காலு மிரவொல்லாச் சால்பு *

தான் வறுமையடைந்தபோதும் பிறரிடத்துச்சென் றிரத்தற் குடன்படாத வமைதியானது உலக மெலலாங் கொளளாத பெருமையுடைத்தாகு மென்பதாம்

௪௮ நல்லிணக்கமல்ல தல்லற்படுத்தும்

நல்லிணக்கமல்லது- நல்லசகவாச மல்லாதது, அல்லல்-துன்பத்தை, படுத்தும்- எப்போதும் உண்டாக்கும்

௮௨-ம்-அதி-தீநட்பு ௯ ம்- செய்யுள்

கனவினு மின்னாது மன்னோ வினைவேறு *
சொல்வேறு பட்டார் தொடர்பு *

செய்கையிற் பகைவராயுஞ் சொல்லி னட்பினராயு மிருப்பவர் நட்பு கனவினு மாகாதென்பதாம்

௪௯- நாடெங்கும்வாழக் கேடொன்றுமில்லை

நாடெங்கும்- தேசமெங்கும், வாழ செழித்திருக்குமாயின், கேடொன்றும்- கெடுதலொன்றும் இல்லை-உண்டாகாது.

௭௪ -ம்-அதி நாடு - ௬-ம்- செய்யுள்

கேடறியா கெட்ட விடத்தும் வளங்குன்று *
நாடென்ப நாட்டிற் றலை *

கேடிலலாததும் வளங்குன்றாததுமான நாடடையெல்லா நாட்டினு முதன்மையான நாடென்பர் என்பதாம்

௫௰-நிற்கக்கற்றல்-சொற்றிறம்பாமை

நிற்கக்கற்றல்-தன்னிடத்து நிலைபெறக்கற்றலாவது, சொல்-தான்சொல்லுஞ்சொல்லுகளிலே, திறம்பாமை-ஒருபோதுந் தப்பிப்போகாமையாம்.

௬௫-ம்-அதி-சொல்வன்மை ௰-ம்- செய்யுள்.

இணரூழ்த்து நாறு மலரனையர் கற்ற *
துணர விரித்துரையா தார் *

அழகாக மலர்ந்தும் வாசனையில்லாத மலர்சூடப் படாமை போல நூலைகற்றிருந்தும் பிறரறிய விரித்துச் சொல்ல மாட்டாதவர் நன்குமதிக்கப்படா ரென்பதாம்

௫௪-நீரகம்பொருந்திய வூரகத்திரு

நீர்-வளமானது, அகம்-தனக்குள்ளே, பொருந்தியமழையில்லாத பஞ்சத்திலும்அமைந்த, ஊரகத்து-ஊரினிடத்திலே இரு-குடியிரு.

எ௪-ம்-அதி-நாடு-அ-ம்- செய்யுள்

பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம • *
மணியென்ப நாட்டிறகிவ வைந்து *

பிணியில்லாமை முதலாகிய வைந்துமுடைமை நாட்டிற்கழகாகு மென்பதாம்.

௫௨- நுணணியகருமமு மெண்ணித்துணி

நுண்ணிய-சிறிய, கருமமும்- தொழில்களையும், எணணி- ஆலோசித்து, துணி-பின்பு அவைகளைச் செய்யத்துணி

௭௭-ம-அதி-தெரிந்துசெயல்வகை-எ-ம்- செய்யுள்

எணணித் துணிக கருமந் துணிந்தபி *
னெணணுவோ மென்ப திழுக்கு *

தொடங்கியபி னெண்ணுவது குற்றமாதலா லொருகருமத்தை யெணணித தொடங்கல்வேண்டு மென்பதாம்

௫௩- நூன்முறைதெரிந்து சீலத்தொழுகு

நூல் மனுநூலிலே சொல்லப்பட்ட, முறை-விதிகளின் முறையை தெரிந்து-அறிந்து, சீலத்து-நல லொழுக்கவழியில் ஒழுகு நட

௰௪-ம்-அதி-ஒழுக்கமுடைமை-உ-ம்-செய்யுள்.

பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்*
தேரினு மஃதே துணை • • • *

பலதருமங்களையு மாராயுமிடத் திம்மை மறுமை இரண்டிலு முயிர்க்குததுணையாவ தொழுக்கமே யாதலா லதனை யொருவன் வருந்தியுஞ் சோரவிடாமற் காககவேண்டுமென்பதாம்.

ருச-நெஞ்சையொளித்தொரு வஞ்சகமில்லை.

நெஞ்சை-தன்மனதை, ஒளித்து - அறியாமலுண்டாகிற, ஒருவஞ்சகம்- யாதொருவஞ்சனையும, இல்லை யாவரிடத்திலும இல்லை

உஅ ம் அதி-கூடாவொழுக்கம்-க-ம் செய்யுள்

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க *
ளைந்து மகத்தே நகும் . *

வஞ்சம் பொருந்திய மனத்தை யுடையவனது மறைந்த வொழுக்கத்தை உடம்பாய் அவனோடு கலந்துநிற்கின்ற பஞ்ச பூதங்களுங் கண்டு தம்முள்ளே சிரிக்கு மென்பதாம

ருரு-நோரானோன்பு-சீராகாது

நோரா-ஒருவர் வருத்தத்திறகு உடன்படாமற செய்கிற, நோன்பு விரதமானது, சீராகாது சீராகமுடியாது

உள-ம்-அதி-தவம் எ-ம்-செய்யுள்

சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ் *
சுடச்சுட நோக்கிற் பவர்க்கு . *

நெருப்பிற்புடம்போடப்பட்டு வெந்தபொன்னுருமாற் றுயர்வதுபோலத் துன்பததில் வருந்தித் தவஞ்செய்தவருக்கு ஞானமிகுமென்பதாம்

ருசு-நைபவரெனினு நொய்ய வுரையேல

நைபவரெனினும-கேடபோரா எதிர்பேசாமல்- வருந்த வோராளுைம், நொய்ய - அறபமாகிய சொல்லுகளை, உரை யேல்-சொல்லாதே

கூ௰அ-ம்-அதி-பெருமை-கூ ம்-செய்யுள்

பெருமை பெருமித மின்மை சிறுமை . . *
பெருமித மூர்ந்து விடல் *

பெருமைக்குக் காரணமுண்டாகிய விடத்துஞ் செருக்கில் லாமையுஞ், சிறுமைக்குக் காரண மில்லாத விடத்துஞ் செருக்க டைதலுங், குணமாகு மென்பதாம்

ருஎ- நொய்யவரென்பவர் வெய்யவராவர்.

நொய்யவரென்பவர் உருவத்தாற் சிறியரென்றிகழப்பட் டவரும், வெய்யவராவர்-செய்காரியத்தால் யாவரும் விரும்பு ங் குணத்தினராவார்.

கூஎ ம்-அதி-வினைத்திட்பம்-எ ம்-செய்யுள்

உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து *

அச்சாணி, வடிவாற் சிறிதாயிருந்தே பெரிய பாரத்தைக் கொண்டு செலுத்தும் வலிமையுடைத்தாம் அதுபோல வடிவாற் சிறியராயிருந்தே பெரியதொழில்களை முடிக்கு மனவலிமையுடையவாக ளுமுண்டு, அவ்வலிமையை நோக்கியறிகவென்பதாம்

நோன்பென்பது கொன்றுதின்னாமை

நோன்பென்பது- தவமென்று சொல்லப்படுவது, கொ ... ஜீவனவதைசெய்து அதன் மாமிசத்தை ...

... அதி புலான்மறுத்தல்-௯-ம்-செய்யுள்

... சொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
றுயிர் செகுத் துண்ணாமை நன்று *

ஆயிரம் யாகஞ் செய்து பெறும் பலனினு மோ ருயிரைக் கொன்றதன் மாமிசத்தை தின்னாதிருத்தலாற் பெறும்பயனே மேலாகு மென்பதாம்

பண்ணியப்பயிரிற் புண்ணியந் தெரியும்

பண்ணிய ... செய்த, பயிரின் - பயிரின்விளைவுனாலும் விளைவில்லாமையாலும், புண்ணியம்-அவனிடத்துப்புண்ணியமிருக்கிறதும் இல்லாமையும், தெரியும்-அறியப்படும்

கூகூ ம்-அதி- வினைத்தூய்மை-௪-ம்- செய்யுள்.

துணைநல மாக்கந் தரூஉம் வினைநலம் . . . . *
வேண்டிய வெல்லாந் தரும் . . . . . . *

நல்லதுணையானது பொருளொன்றையே தருதலாலும், நல்ல தொழிலானது அறம் பொருளின்பங்களைத் தருதலாலுங் காட்சிப்பொருளாகிய துணையிலும் கருத்துப் பொருளாகிய தொழிலே சிறந்ததென்பதாம்

கூய-பாலோடாயினுங் காலமறிந்துண்.

பாலோடாயினும் - பாலோடுகூடிய சாதத்தை யுண்டாலும், காலமறிந்து-உண்ணத்தகுங்காலத்தையறிந்து, உண்-அதனை-உண்ணு.

௪௯-ம்-அதி-காலமறிதல்-௪-ம்- செய்யுள்

ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங் .. *
கருதி யிடத்தாற் செயின் *

அரசன் காலமறிந்து தொழில்செய்தால் உலகெல்லாம் உள நினைத்தாலுங் கைவசப்படும் என்பதாம்

௬௧-பிறன்மனைபுகாமை யறமெனத்தகும்

பிறன்-பிறனுடைய,மனை - மனையாளிடத்தில், புகாமை- இச்சித்துப்போகாமையே, அறமெனத்தகும பலதருமங்களி லும உயர்ந்ததருமமென்று சொல்லத்தகும.

௰௫-ம் அதி பிறனில்விழையாமை-௮-ம்-செய்யுள்

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க *
கறனொன்றோ வான்ற வொழுக்கு *

பிறனது மனையாளை இச்சியாமையே பெரியோர்க்குந் தரு மந்நிறைந்தஒழுக்கமுமாம்

௬௨-பிரம்பேணி பாரந்தாங்கும்

பிரம்பேணி-முலைப்பால் குறைவறவுணடு வளர்ந்தவன், பாரம்-பாரமானசுமையை, தாங்கும்-சுமப்பான்

௭௭-ம் அதி படைமாட்சி-௨-ம-செய்யுள்

உலைவிடத் தூரஞ்சா வன்கண்ண டொலை விடத்துந் *
தொல்படைக் கல்லா லரிது *

அஞ்சாதுநின்று தாங்குஞ் சௌரியமானது (முன்னே நன் றாகப் பழகித்தேர்ந்த) அரசனது பழையசேனைக் கல்லாது மற்றவர்க்கில்லை யென்பதாம்

௬௩-புலையுங்கொலையுங் களவுந்தவிர்

புலையும்-அசுத்தமாகிய மாமிசந் தின்னுதலையும், கொலை யும்- ஜீவவதைசெய்தலையும், களவும் - பிறர்பொருளைத் திருடு தலையும், தவிர்-நீ செய்யாதிரு

௨௬-ம்-அதி-புலான்மறுத்தல்

அரு ளல்ல தியாதெனிற கொல்லாமை கோறல் *
பொருளல்ல தவ்வூன் றினல் *

அருள் யாதெனில்-கொல்லாமை,(அவ்வருள்) அல்லாதியா தெனில் - கொல்லுதல், அறமென்னும் பொருளலலாதியா தெனில், அவ்வூனைத் தின்னுதலாகிய பாவமேயாம்

அன்றியும், ௨௯-ம்-அதி-கள்ளாமை-௨-ம் செய்யுள்

உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக் *
கள்ளத்தாற் கள்வே மெனல் *

பிறன்பொருளை யவனறியாமல் வஞ்சித்துக் கொள்வோ மென்று நெஞ்சி னினைத்தாலும் பாவமேயாகும்

௯௪-பூரியோர்க்கில்லை சீரியவொழுக்கம்

பூரியோர்க்கு-கீழ்மக்களுக்கு, சீரிய-சிறப்பாகிய, ஒழுக்கம் நடக்கையானது, இல்லை உண்டாதலில்லை

௱௮-ம்-அதி-கயமை ௫-ம்-செய்யுள்

அச்சமே கீழ்கள தாசார மெச்ச . . *
மவாவுண்டே லுண்டாஞ் சிறிது *

கீழோரிடத்து நல்லொழுக்கமானது, பெரும்பான்மை அச்சத்தினாலுஞ், சிறுபான்மை பொருள்கிடைத்தலாலு மல்லது இயல்பாக வுண்டாகா தென்பதாம

௯௫-பெற்றோர்க்கில்லை சுற்றமுஞ்சினமும்

பெற்றோர்க்கு-தத்துவஞானம்பெற்றவர்களுக்கு, சுற்றமும்-உறவினர்மேலாசையும், சினமும்- மற்றவர்மேல் வெறுப்பும், இலலை-இருப்பதிலலை

௩௫-ம்-அதி துறவு-௫-ம்-செய்யுள்

மற்றுந் தொடர்பா டெவன்கொல் பிறப்பறுக்க *
லுற்றார்க் குடம்பு மிகை . *

துறந்தோர்க்கு தமதுடம்பு தவஞ்செய்தற்குக காரணமாயினுந் துன்பமெப்போதும் விளைதலால், அதையும் வேண்டாராயின் வேறே பற்றப்படுவ தொன்றில்லை யென்பதாம்

௯௬-பேதைமையென்பது மாதர்க்கணிகலம்

* பேதைமையென்பது - அறியாமையென்று சொல்லப்படுங் குணமானது, மாதர்க்கு- பெண்டுகளுக்கு, அணிகலம்-ஆபரணமாகும்.

௱௨-ம்-அதி-நாணுடைமை ௧-ம் செய்யுள்.

கருமத்தா னாணுத னாணுந் திருநுத . . *
னல்லவர் நாணுப் பிற *

---

* பேதைமை என்பது, மடவார் தாமறிவுளராயினு நாணுடைமையால் ஆடவர்முன் அகங்கரியாமல் மடமை பூண்பது வேயாம்

நன்மக்களது நாண மிழந்த கருமத்தால்வருவது. அதுவன்றி மனமொழி மெய்களி னொடுக்கத்தால் வருவன குலமகளிர் நாணங்களாகு மென்பதாம்

௬௭-பையச்சென்றால் வையந்தாங்கும்

பைய மெள்ள, சென்றால்-ஒருவன் தகுதியானவழியிலே நடந்தால், வையம் - பூமியிலுள்ளோர், தாங்கும் அவனை மேலாகக் கொள்வார்.

௧௬-ம்-அதி பொறையுடைமை-௪-ம் செய்யுள்

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை*
போற்றி யொழுகப் படும் *

ஒருவன் பெருந்தன்மை தன்னைவிட்டு நீங்காதிருக்க விரும்புவானாயிற் பொறுமையைத் தன்னிடத் தழியாமற காக்கக் கடவ னென்பதாம்

௬௮-பொல்லாங்கென்பவை யெல்லாந்தவிர்

பொல்லாங்கென்பவை-தீங்குகளென்று சொல்லப்பட்டவைகளாகிய, எல்லாம்-எல்லாவற்றையும், தவிர் எப்போதுஞ் செய்யாதிரு

௪௪ ம்-அதி குற்றங்கடிதல்-௪-ம் செய்யுள்

குற்றமே காகக பொருளாகக் குற்றமே *
யற்றந் தரூஉம் பகை . , *

குற்றந் தனக கழிவைத்தரும் பகையாதலா லதனை யொழிக்க வேண்டு மென்பதாம்

௬௯ போனகமென்பது தானுழந்துண்டல்

போனகமென்பது-சாப்பாடென்று சொல்லப்படுவது, தானுழந்து தான் பிரயாசைப்படுச் சம்பாதித்து,உணடல-உண்ணுதலாம்.

௱௭-ம்-அதி இரவச்சம்-௫-ம்-செய்யுள்.

தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த *
துண்ணலி னூங்கினிய தில் *

முயற்சியால் வந்தது கூழாயினும் அதை யுண்ணுதல்போ லின்பமுடைய தில்லை என்பதாம்.

௭௰-மருந்தேயாயினும் விருந்தோடுண்.

மருந்தேயாயினும் - உண்ணப்படுவது கிடைத்தற்கரிய

தேவாமிர்தமே யாயினும், விருந்தோடு - வந்த விருந்தாளிக ளோடு கூடி, உண் - நீ யுண்ணு

௯-ம்-அதி-விருந்தோம்பல்-௨-ம்-செய்யுள்.

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா *
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று *

தேவாமிர்தங் கிடைத்தாயினும், வந்தவிருந்தினரை புறத் துவைத் துண்ணலாகா தென்பதாம்

௭௧ மாரியல்லது காரியமில்லை.

மாரியல்லது மழையினாலல்லாமல், காரியம் - யாதொரு காரியமும், இல்லை - யாவர்க்கும் நடப்பதில்லை

௨-ம அதி-வான்சிறப்பு-௮-ம்-செய்யுள்

சிறப்பொடு பூசனை செல்லாது வானம் . *
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு . *

மழைபெய்யாதாகின் தேவர்களுக்கும், இவ்வுலகத்தில் மக்களால் செய்யப்படுகிற திருவிழா, பூசை, முதலிய மற்ற வேத்தகாரியமும் நடவாது

௭௨ மின்னுக்கெல்லாம் பின்னுக்குமழை

மின்னுக்கெல்லாம் - வானத்திலே காணப்பட்ட மின்னலுக்கெல்லாம், பின்னுக்குமழை அப்போது மழையில்லையாயினும் பின்னே மழையுண்டாகும்.

௰௬-ம்-அதி-பொறையுடைமை-௪-ம்-செய்யுள்

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை *
போற்றி யொழுகப் படும் . *

ஒருவன - நிறைவை வேண்டுவானாயின் பொறுமையோடு காத்திருக்கக்கடவன்

௭௩-மீகாமனில்லா மரக்கலமோடாது

மீகாமன்-தன்னை யோட்டத்தக்க மாலுமி, இல்லா - இல்லாத, மரக்கலம்- கப்பலானது, ஓடாது - கடலிலே செவ்வையாக ஓடாது

௭௭-ம்-அதி படைமாட்சி ௰-ம் செய்யுள்

நிலைமக்கள சால வுடைத்தெனினுந் தானை *
தலைமக்க ளில்வழி யில . . *

போரினிடத்து நிலையையுடைய வீரரை மிகவுடைத்தாயி னுந் தனக்குத் தலைவராகிய வீரர் இல்லாவிடத்துச் சேனை நில லாது என்பதாம்

௭௪-முற்பகல்செய்யின் பிற்பகல்விளையும்

முற்பகல்- ஒருமுகூர்த்தகாலத்தின் முன்பங்கிலே, செய் யின் பிறனுக்குத் தீங்குசெய்தால், பிற்பகல் அதன்பின்பங்கி லே, விளையும்-செய்தவனுக்கு அத்தீங்குதானே உண்டாகும்

௩௨-ம்-அதி இன்னாசெய்யாமை-௯-ம்-செய்யுள்.

பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா *
பிற்பகற் றாமே வரும் *

முன்பு ஒருவனுக்குத் தீமைசெய்தால் பின்பு அத்தீமை தனக்கேவரும் என்பதாம்

௭௫-மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்

மூத்தோர்-பெரியோரானவர், சொல்-சொல்லுகிற,வார் த்தை வசனமானது, அமிர்தம் - தேவாமிர்தம்போலச் சிறப் புள்ளதாகக் கொள்ளப்படும்

௪௨-ம் அதி-கேள்வி ௫-ம்-செய்யுள்

இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே . *
லொழுக்க முடையார்வாய்ச் சொல் . *

நல்லவர்கள் வாயிற் பிறக்குஞ்சொல் ஒருவர்க் காபத்துவந் தவிடத்திற சேற்றுநிலத்திற் கூன்றுகோலபோ லுதவியாமெ ன்பதாம்

௭௬-மெத்தெனப்படுத்த னித்திரைக்கழகு

மெத்தென-மெத்தென்றிருக்க, படுத்தல்-பஞ்சணையிலே படுத்தல், நித்திரைக்கு ஒருவன்செய்கிற நித்திரைக்கு, அழகு- அழகாகும்

வாதசீதப்பிணிக ளணுகாமையைச் செய்தலானும், நன் மை யமைவை மிகவிளைத்தலானுந் துயிலுதற்குரிய தேயமெ னக் கூறியதே யிதன்கருத்தும்

௫௰-ம் அதி இடனறிதல்-௩-ம் செய்யுள்.

ஆற்றாரு மாற்றி யடுப விடனறிந்து ... *
போற்றார்கட் போற்றிச் செயின் . , . *

ஆற்றுரும்-வலிமையில்லாதவரும், ஆற்றி-வலிமையுடையவ
ராய் அடிபவெல்வார், இடன் - (அதற்கேற்ற)இடத்தை, அறிந்
து-தெரிந்து, போற்றி தம்மைக்காத்துக்கொண்டு, போற்றார்
கண்-தம்மைநொய்யச்செய்யும் விரோதியினிடத்து, செயின்
தக்கதொழிலைச் செய்வாராயின் என்பதனாற்காண்க

௭௭ மேழிச்செல்வங் கோழைபடாது

மேழி-மேழிபிடித்து ஏருழுது பயிர்செய்தலாலுண்டா
கிற, செல்வம்-செல்வமானது, கோழைபடாது- எப்போதுங்
குறைவையடையாது

௱௪-ம்-அதி உழவு-௩-ம் செய்யுள்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந் *
தொழுதுண்டு பின்செல்பவர் *

உழுதலைச்செய்து உண்டு வாழ்கின்றவரே மேன்மையோடு
வாழ்கின்றவர் மற்றவரெல்லாம் பிறரைத்தொழுது அவரைப்
பின்செல்லுகின்றவராம்

௭௮-மைவிழியாடனை கையகன்றொழுகு

மைவிழியாடனை- பிறரை மயக்குதற்காக மையிடுங் கண்
களையுடைய பரத்தையை, கையகன்று-தூரமாகநீங்கி,ஒழுகு-
நீ நல்லவழியிலேநட

௯௨-ம்-அதி-வரைவின்மகளிர்-௨-ம்-செய்யுள்

பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர் *
நயன்றூக்கி நள்ளா விடல் *

பொருட்பயனைக்குறித்து நயம்பேசும் வேசையர் நடக்
கை யறிந்து அவரை விடக்கடவர் என்பதாம்

௭௯-மொழிவதுமறுக்கி னழிவதுகருமம்

மொழிவது - கற்றோர் சொல்லுகிற உபாயத்தை, மறுக்
கின்-கேளாமறசெய்தால், கருமம் ஒருவன் செய்யுந்தொழில்,
அழிவது கெடுவதாகும்

௬௫-ம்-அதி-சொல்வன்மை-௨-ம்-செய்யுள்.

ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற் *
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு *

செல்வமுங் கேடும் சொல்லால் வருதலால்,மந்திரிகள் சொ
ற்சோர்வு வாராமற் காக்கக்கடவர் என்பதாம்.

௮௰-மோனமென்பது ஞானவரம்பு.

மோனமென்பது - மௌனநிலையென்பது, ஞான - தத்துவஞானத்தின், வரம்பு-எல்லையாகும்

௩௬-ம்-அதி மெய்யுணர்தல்-௬ ம் செய்யுள்

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி

இப்பிறப்பி லுபதேசத்தைக் கேட்டு உண்மைப்பொருளை யறிந்தவர் பிறப்பை நீக்குவா ரென்பதாம்

௮௰௧ வளவனாயினு மளவறிந்தழித்துண்

வளவனாயினும் சம்பத்திலே சோழனாக கொப்பானவனாயிருந்தாயானாலும், அளவு பொருள் வரவினளவை, அறிந்து-தெரிந்து, அழித்து-செலவழித்து, உண்-நீ அநுபவி

௪௮ ம்-அதி-வலியறிதல் ௯-ம்-செய்யுள்

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்

தனக்குள்ள பொருளளவை யறிந்து வாழாதவன் வாழ்க்கை உள்ளவைபோலத் தோன்றி யழியுமென்பதாம்

௮௰௨-வானஞ்சுருங்கிற் றானஞ்சுருங்கும்

வானம் - மழையானது, சுருங்கில்-பெய்தல் குறையுமாயின், தானம் சற்பாத்திரங்களுக்குக் கொடுக்கிற கொடையும், சுருங்கும் குறைவுபடும்

௨-ம்-அதி-வான்சிறப்பு-௯-ம்-செய்யுள்

தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்

மழைபொழியாவிடி னுலகத்தில் தருமமுந் தவமு முண்டாகாவாம் என்பதாம்

௮௰௩-விருந்திலோர்க்கில்லை பொருந்தியவொழுக்கம்.

விருந்திலோர்க்கு- விருந்தெதிர் கொள்ளாதவருக்கு, பொருந்திய-தாம் பொருந்திய, ஒழுக்கம்- இல்லறம், இல்லை இருந்தாயினும்-இல்லாததற்குச் சமானமாகும்

௯-ம்-அதி விருந்தோம்பல்-௧ ம்-செய்யுள்

இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

ரெல்வாழ்க்கையில் வாழ்வதெல்லாம் விருந்தினரை யுபசரித்து உபகாரஞ் செய்தற்பொருட்டு என்பதாம்

௮௩-வீரல்சேண்மை கூரம்பாகும்

வீரர் வீரனுடைய, சேணமை-சினேக மொருவனுக்கிருந்தால் கூரமடாரும் - அவனுக்கு அதுவே நல்பகை ... வெலலுதறகுக ... ரான அமபாகும்

௭௯-ம் அதி நட்பு-௧-ம் செய்யுள்

செயற்கரிய யாவுள நட்பி னதுபோல் *
வினைக்கரிய யாவுள காப்பு

நட்புபோல் சம்பாதித்துக் கொள்ளுதற்கு அரிய ... கள் எவைகள் இருக்கின்றன சம்பாதித்துக்கொண்டா... போல் பகைவர்செய்யுந் தொழிலுக்கு அரியகாவலா... எவைகள் இருக்கின்றன என்பதாம்

௮௪ உரவோரொன்கை யிரவாதிருத்தல்

உரவோரொன்கை - வல்லவரொன்று சொல்லப்படுதல், இரவாது தனக்குச் சிறுமைவந்தகாலத்திலும் பிறரை யிரவாமல், இருத்தல்-இருக்கையாம்

௱எ-ம்-அதி-இரவச்சம்-௧-ம்-செய்யுள்

கரவா துவந்தியுங் கண்ணன்னார் கண்ணு *
மிரவாமை கோடி யுறும் *

ஒளியாது கொடுக்குங் கண்ணிற கொப்பானவரிடத்தும், யாசியாதிருத்தல் கோடி மடங்கு நன்மையாம் என்பதாம

௮௫-ஊக்கமுடைமை யாக்கத்திற்கழகு

ஊக்கம்-செய்தொழிலிலே மனந் தளராமையை, உடைமை ஒருவன் உடையனாதல், ஆக்கத்திற்கு அவன் செல்வத்திற்கு, அழகு-அழகாகும்

௬௰-ம்-அதி-ஊக்கமுடைமை-௪-ம்-செய்யுள்

ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா *
வூக்க முடையா னுழை *

அசைவில்லாத மனவெழுச்சி யுடையவனிடத்தே பொருளானது வழிகேட்டுக் கொண்டுபோகும் என்பதாம்

௮௬-வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை.

வெள்ளைக்கு - களங்கமில்லாத பரிசுத்த குணமுடையவ

னிடத்து, கள்ளம் வஞ்சனைபொருந்திய, சிந்தை-நினைப்பானது, இல்லை-இராது.

நடு-ம்-அதி-வாய்மை-அ-ம்-செய்யுள்

புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை . *
வாய்மையாற காணப் படும் . *

ஒருவனுக்கு உடம்பு பரிசுத்தமாந்தன்மை நீரினாலே உண்டாகும், அதுபோல் மனது பரிசுத்தமாந்தன்மை உண்மையால் உண்டாகும்.

அஅ-வேந்தன்சீறி னாந்துணையில்லை

வேந்தன்- அரசனானவன், சீறின்-ஒருவன்மேற் கோபஞ்செய்தால், ஆம்- அப்போதைக்கு உபயோகமாகின்ற, துணை-சகாயம், இல்லை-அவனுக்கு இல்லை

கூய-ம்-அதி-பெரியாரைப்பிழையாமை-ரு-ம்-செய்யுள்

யாண்டுசென் றியாண்டு முளராகார் வெந்துப்பின் *
வேந்து செறப் பட்டவர் *

வல்ல வரசனாற் கோபிக்கப்பட்ட வரசர் எவ்விடத்துச் சென்று முயிர்வாழார் என்பதாம்

அகூ வையந்தோறுந் தெய்வந்தொழு

வையந்தோறும்- பூமியிலுள்ள ஸ்தலந்தோறும்போய், தெய்வம்-கடவுளை, தொழு நீதரிசித்துவணங்கு.

முதல்-ம்-அதி-கடவுள்வாழ்த்து-ச ம்- செய்யுள்

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்க *
கியாண்டு மிடும்பை யில *

யாதொரு பொருளையும் விரும்புதலும் வெறுத்தலும் இல்லாதவனது அடிகளை சேர்ந்தவர்கரு எக்காலத்திலும் பிறவித்துன்பஙகள் உண்டாவனவல்ல என்பதாம்.

கூய- ஒத்தவிடத்து நித்திரைகொள்

ஒத்தவிடத்து- மேடுபள்ள மில்லாமற் சமமானவிடத்திலே, நித்திரைகொள்-நீ படுத்துநித்திரைபண்ணு.

ருய-ம்-அதி இடனறிதல் க ம்-செய்யுள்.

தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்று *
மிடங்கண்ட பின் னல்லது . . . . . *

அரசர் பகைவரை வெல்ல இடங்கண்டாலல்லது எத்தொழிலையுஞ் செய்யாதிருக்கக்கடவர் அவரை யிகழாதிருக்கக்கடவர் என்பதாம்.

௧௧ ஓதாதார்க்கில்லை யுணர்வொடொழுக்கம்.

ஓதாதார்க்கு-நல்லநூலைப்படியாதவர்களுக்கு,உணர்வோடும் அறிவுடனே,ஒழுக்கம்-நல்லநடக்கையும, இல்லை- உண்டாகுதலில்லை

௪௧-ம் அதி-கல்லாமை-௪-ம் செய்யுள்.

கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங் . *
கொள்ளா ரறிவுடை யார் *

கல்லாதவனது அறிவுடைமை யானது ஒரோவிடத்தே மிக நன்றாயிருப்பினும விவேகமுடையவாகள் அதனை அறிவுடைமையாகக் கொள்ளார் என்பதாம்.

ஔவையார் அருளிச்செய்த

கொன்றைவேந்தன்

முற்றிற்று

இப்புத்தகம் வேண்டியவர்கள் - பெங்குளூரில் பிரீகட் மேஜர் ஆபீசிலிருக்கும், ஷை சபையைச்சார்ந்த-ம-ா-ா-ஸ்ரீ திருவேங்கிடமுதலியாரிடத்திலும், பெற்றுக்கொள்ளலாம்